KALKI 17-8-75 75 காசு

கல்கி





நாகரீகம், அத்துடன் நீடித்தும் உழைப்பவை—பின்னி மட்டுமே நயமுடன் இணைத்துத்தர முடியும்!

Interpub BB/53/75 Tam



பத்மவிபூஷண்

எம் எஸ் சுப்புலக்ஷ்மி

ரமோன் மக்ஸேஸே விருது பெற்றவர்

கல்விக்கு அஞ்சலி

பாரதீய வித்யா பவனத்தின் கௌரவ அங்கத்தினரான எம் எஸ் சுப்புலட்சுமி தமது புதிய எச் எம் வி இசைத்தட்டை (ECSC 3259) பவனத்திற்கு சமர்பணம் செய்கிறார்... அவர் கல்விக்கு அளிக்கும் அஞ்சலி.

எம் எஸ் பாடியுள்ள இத்தொகுப்பில் பத்து மொழிகளில் பக்திப்பாடல்கள் உள்ளன.

பஜரே யது நாதம் சம்ஸ்கிருதம்
ஹரி மை தோ ஹிந்தி
நாராயணு நம குஜராத்தி
பதிதோ தாரிணி கங்கே வங்காளி
கண்டு கண்டு மலையாளம்
இஷாராதே கத்ரா உருது
ஹரி போல ஹரி போல மராத்தி
யது வம்ஸா யது வம்ஸா கன்னடம்
வாஸு தேவா வாஸு தேவா தெலுங்கு
நெஞ்சுக்கு நீதி நெஞ்சுக்கு நீதி தமிழ்

EMI

HMV

தி கிராமபோன் கம்பெனி ஆ:ப் இந்தியா.

GC-1028.

கல்கி

ராக்ஷஸ ஆவணி 1
ஆகஸ்டு 17, 1975

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.





கல்கி

மலர் 35

இதழ் 3

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

விடிவெள்ளி !

மாய இருள் நீங்க விடிவெள்ளி முளைத்தாற்போன்று இருக்கிறது பிரதமர், திரு நார்மன் கஸின்ஸுக்கு அளித்துள்ள பேட்டி. புழுக்கமான மாலையில் குளிர் தென்றல் வீசுவது போலிருக்கிறது.

பிரதமரின் சில பதில்கள் :

''நெருக்கடி நிலைப் பிரகடனம் நீடித்தால்தான் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் என்று நினைப்பது பிசகு.''

'' அரசாங்கம் இன்று எடுத்துள்ள அவசர கால நடவடிக்கைகளை ரத்து செய்யாது; சர்வாதிகாரம்தான் இந்தியாவின் எதிர்காலம் என்று எண்ணுகிறவர்கள் மாபெரும் தவறு செய்கிறார்கள்.''

''இன்றைய நெருக்கடி நிலைப் பிரகடனம் அதிக காலம் நீடிக்கும் என்று நான் நம்பவில்லை.''

எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆபத்து நிலைக்குத் தேசத்தை இட்டுச் செல்லமாட்டார்கள்; அரசியல் சட்டத்துக்குப் புறம்பான நேரடி நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள் என்பது நிச்சயமானதும் தாமதமின்றிக் காவலில் வைக்கப்பட்டுள்ள அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்பதாகவும் பிரதமர் இந்தப் பேட்டியின் போது தெரிவித்திருக்கிறார்.

பிரதமருக்கு இது விஷயத்தில் எவ்வளவு சீக்கிரம் நம்பிக்கை பிறக்கிறதோ அவ்வளவுக்கு நல்லது. அதற்கு அனுசரணையாக எதிர்க்கட்சித் தலைவர்கள் நடந்து கொள்ள வேண்டும். இதில் எந்த ஒரு தனிமனிதரின் கௌரவப் பிரச்னையும் குறுக்கிடக் கூடாது. ஒரு ஜனநாயகத்தின் கௌரவம் தனிமனிதனின் கௌரவத்தைவிட முக்கியமானது.


தேர்தல் சட்டங்கள்

தேர்தல் சட்டங்களில் செய்யப்பட்டுள்ள மாறுதல்களையும், அவை எந்த நோக்கத்துடன் செய்யப்பட்டுள்ளன என்பதையும் நேயர்கள் பத்திரிகைகளில் படித்து அறிந்திருப்பார்கள்.

இனி 'டெக்னிகல்' காரணங்களுக்காக எந்த ஒரு தேர்தலையும் செல்லாது என்று எந்த ஒரு நீதி மன்றமும் கூறாது. எனவே, ஹிந்து பத்திரிகை நிம்மதியாகப் பெருமூச்சுவிடலாம் !

இந்தத் தேர்தல் சட்ட மாறுதல்களை ஏந்தி வரும் அதே நாளிதழில் காஷ்மீர் அரசு செய்திருக்கும் தேர்தல் சீர்திருத்தங்களும் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் நம் கவனத்தைக் கவர்வது ஒன்று. அரசாங்க ஊழியர்களின் நடத்தை தேர்தல் சமயத்தில் சரியாக இல்லாதிருந்தால் அந்த ஊழியர் எந்தப் பதவி வகிப்பவரானாலும் சரி, தண்டனை கடுமையாக்கப்பட்டிருக்கிறது. இதன் தொடர்பாக ஷேக் அப்துல்லா கூறியிருப்பதாவது: புதிதாக ஒரு சம்பிரதாயத்தை நாம் ஏற்படுத்திக் கொள்வோம். தேர்தல் சமயத்தில் அப்போது ஆட்சியில் இருப்பவர்கள் தர்மகர்த்தாப் பொறுப்புடன் செயல்பட வேண்டும். புதிய கொள்கைகளை அறிவித்தோ புதிய சலுகைகளை அறிவித்தோ ஆட்சியில் இருக்கும் கட்சிக்கு வோட்டுப் பெறும் முயற்சிகளில் இறங்கக் கூடாது.

இதுபோன்ற வேறு சில தேர்தல் சீர்திருத்தங்களும் பாரதம் முழுவதற்குமாகத் தேவை. முக்கியமாகப் பணத்தின் ஆதிக்கத்துக்கும் அதிகார துஷ்பிரயோகத்துக்கும் முடிவு கட்ட வேண்டும்.


ஐ, வேண்டாம்
வேண்டவே வேண்டாம்
ஜனநாயகம்
சர்வாதிகாரம்

என்ன சேதி?

நல்ல ஆரம்பம்

நாட்டின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடைவதற்குரிய ஏற்பாடுகளில் அண்மைக் காலமாகப் பிரதமர் அக்கறை காட்டி வருகிறார். அவருடன் திரு டி. ஏ. பை முழுமூச்சுடன் ஒத்துழைத்து வருகிறார். அடிப்படைத் தேவைகளான மின்உற்பத்தியிலும் விவசாயப் பெருக்கத்திலும் தீவிர கவனம் செலுத்தி வருகிறது அரசு. ஏற்றுமதி அதிகரிக்க முடியாமல் தடையாக இருந்து வந்த பல இடையூறுகள் நீக்கப்பட்டுள்ளன. 'ரொம்ப முன்ஜாக்கிரதையாக இருப்பதாக எண்ணிக் கொண்டு நமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்ட சிக்கல்களிலிருந்து விடுபடுவோம்' என்ற பிரதமர், அதற்குச் செயலுருவம் தந்திருக்கிறார். முந்நூறு பண்டங்களின் மீதாக இருந்து வந்த ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. 190 அம்சங்களுக்கு ஏற்றுமதி லைசென்ஸே தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

ராஜாஜி காட்டிய பாதையில் ஓரிரு அடிகள் எடுத்து வைத்திருக்கிறார் பிரதமர். அந்த வழியையே மேலும் பின்பற்றி நடந்தால் சுபிட்சம் நிச்சயம்.

மெய்யான சுபிட்சம்

நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் தொடர்பாக அதிகாரிகளுக்குக் கிடைத்துள்ள அபரிமிதமான அதிகாரங்கள் வரி ஏய்ப்போரை வளைத்துப் பிடிக்க உதவி வருகின்றன. மிகவும் குறைவாக மதிப்பிடப்பட்டு வந்த பல பங்களாக்களுக்குள் அதிகாரிகள் புகுந்து அவற்றின் உண்மை மதிப்பைக் கண்டறிந்து வருகிறார்கள். இந்த நடவடிக்கைகள் அச்சம் காரணமாக ஒழுக்கத்தை வளர்க்கும் என்பது உண்மைதான்.

ஆனால் நாட்டில் மெய்யான சுபிட்சம் ஏற்பட இது போன்ற நடவடிக்கைகள் மட்டும் உதவப் போவதில்லை. அதற்குப் பொருளாதாரக் கொள்கைகளில் மாற்றம் தேவை.

வரிகளைக் குறைத்தால் வரி ஏய்ப்பது குறையும் என்றார் ராஜாஜி. அதே சமயம் சேமிப்பு பெருகித் தொழில்களில் முதலீடு அதிகரிக்கும். கூடவே கண்ட்ரோல்களை நீக்கினால் கள்ளமார்க்கெட் ஒழியும். போட்டா போட்டிப் பொருளாதாரம் உற்பத்தி பெருகவும் விலைகள் குறையவும் உதவும்.




கரும்பு நசுக்க இரும்பு
ஆலை எதற்கு ?
கட்டமைந்த பற்களின் வலிமை:
கால்ஷியம் ஸாண்டோஸ் மகிமை!
பற்களுக்கும் எலும்புகளுக்கும், பெரியவர்களைவிட இருமடங்கு கால்ஷியம் குழந்தைகளுக்குத் தேவை. உங்கள் குழந்தைக்குக் கொடுங்கள் ராஸ்ப்பெர்ரி இன்சுவையுள்ள கால்ஷியம் ஸாண்டோஸ்.
நாளொன்றுக்கு 4-6 வில்லைகளே போதும்—பற்களுக்கு நலம், எலும்புகளுக்கு பலம்; தவிர உடம்புக்கு வைட்டமின்கள் C, D, B12.
200 மற்றும் 50 வில்லைகள் அடங்கிய புட்டிகளிலும், தவிர ஸிரப் வடிவிலும் வருகிறது.
கால்ஷியம் ஸாண்டோஸ் ®
தினமும் தேவை
எவருக்கும்
SANDOZ
வளர்ச்சிக்கு
கால்ஷியம்
4 மாத காலம் கால்ஷியம் சாப்பிட்ட குழந்தைகள், சாப்பிடாதவர்களைவிட வேகமாக வளர்ந்ததாக விஞ்ஞானப் பரிசோதனைகள் நிரூபிக்கின்றன.
எல்லா முக்கிய மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

dCP/CS/71. Tam

முருகப்பெருமான் 23

ஜகத்குரு
ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசாரிய சுவாமிகள்

பரமாத்மாவை அடைய நாலு மார்க்கங்கள், ஞானம், பக்தி, கர்மம், யோகம் என்று இருக்கின்றன. சரீரம், மனசு இதற்கெல்லாம் ஆதாரமாக இருக்கிற ஆத்மா என்ன என்கிற விசாரத்திலேயே எப்போதும் இருந்து கொண்டிருந்தால் கடைசியில் அது தானே பளிச்சிடுகிறது – *Flash* மாதிரி. இது தான் ஞானம். அங்கே, அறிகிற ஜீவாத்மாவுக்கும் அறியப்படுகிற பரமாத்மாவுக்கும் பேதமே இல்லை. எல்லாம் ஒரே சாந்த சமுத்திரமாக அடங்கி விடுகிறது.

சிலருக்கு இந்த சாந்தியை விட, பரமாத்வோடு ஒன்றாகச் சேர்ந்து கரைந்து விடுவதை விட, கொஞ்சம் பிரிந்து அவரிடம் அன்பாக இருந்துகொண்டிருப்பதில்தான் ருசி இருக்கிறது. இவர்கள் பக்தி செய்கிறார்கள். அதனால் பரமாத்மாவின் கருணையைப் பெறுகிறார்கள். இவர்கள் செய்யும் பக்தி, ஸ்வாமி திருப்பிச் செய்யும் கருணை இரண்டும் அன்பு என்பதன் இரண்டு ரூபங்கள்தான். ஞானம், அறிவு வழி; பக்தி அன்பு வழி.

மனசையும் கடந்து விட்டால் ஞானம். மனசை வைத்துக் கொண்டே பக்தி செய்ய வேண்டும். இதே மாதிரி சரீரத்தை வைத்துக் கொண்டு கர்மாக்களைச் செய்கிறோம். அப்போதும் கூட, நமக்கென்று பண்ணிக்கொள்ளாமல், லோக உபகாரமாகப் பண்ணி, அதன் பலனை ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்தால் அதிலேயே ஓர் ஆனந்தம், நிறைவு இருக்கிறது. இவ்வாறு பற்றில்லாமல் கடமையைச் செய்வது கர்ம மார்க்கம்.

மனசை நிறுத்த முடியாததாலேயே ஆத்மாவைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. மனசு கட்டுப்படாமல் ஓடுகிறது. ஆனால் மூச்சைக் கட்டுப்படுத்தி நிறுத்திவிட்டால், மனசும் நின்றுவிடும். நமக்குப் பிராணன் என்று ஒன்று இருக்கிறது. பேருயிர் ஒன்றிலிருந்துதான் இந்தப் பிராணன் புறப்பட்டிருக்கிறது. அதனால் இந்தப் பிராணனைச் சில நுணுக்கங்களில் கட்டுப்படுத்திச் சம நிலைக்குக் கொண்டு வந்து விட்டால் பிராண மூலமான பேருயிரை, பரமாத்ம சக்தியை அடைய முடிகிறது. இதற்கு யோக மார்க்கம் என்று பெயர்.

சுப்ரமண்ய சுவாமியைப் பற்றி நிறையக் கதை சொன்னேன். இன்னும் எத்தனையோ கதைகள் இருக்கின்றன. அவருடைய மகிமைக்கும் லீலைக்கும் முடிவேயில்லை. இத்தனை கதைகள், தத்துவங்களிலிருந்தும் தெரிவது அவர் ஞானம், பக்தி, கர்மம், யோகம் எல்லாவற்றுக்கும் முடிவான பரம சத்தியமாக இருக்கிறார் என்பதுதான்.

முருகன் என்றால் ஞான பண்டிதன், ஞானோபதேசம் என்பது நினைவுக்கு வந்து விடுகிறது. அத்வைத ஞான ஸ்வரூபமாகவே அவரைத் திருப்புகழிலும், கந்தர நுபூதியிலும் அருணகிரிநாதர் சொல்லியிருக்கிறார்.

நான் வேறு எனுதிருக்க, நீ வேறு எனுதிருக்க..
ஏகபோகமாய் நீயு நானுமாய்
இறுகு வகை பரம சுகமதுள்....
யானுமிய என்னை விழுங்கி வெறும்
தானும் நிலை நின்றது தற்பரமே.

பக்தி மார்க்கத்தில் முருகன் முடிவாக இருப்பதைச் சொல்லவே வேண்டாம்! அடியார்களின் பக்தியையும் அவர்களிடம் அவருடைய கருணையையும்தான் சம்ஸ்கிருத ஸ்தோத்திரங்கள், தமிழ்த் துதி நூல்கள் எல்லாம் விஸ்தாரமாகச் சொல்கின்றன. இவற்றில் எல்லோருக்கும் ஒருசில திருப்புகழ்கள், திருமுருகாற்றுப்படை, ஸுப்ரஹ்மண்ய புஜங்கம் ஆகியனவாவது மனப்பாடமாகத் தெரிந்திருக்க வேண்டும்.

கர்மா என்று எடுத்துக் கொண்டாலும், குமாரிலபட்டராகவும் ஞானசம்பந்தராகவும் அவதரித்து அவரே இந்த மார்க்கத்தை ஸ்தாபித்திருக்கிறார். அப்பர் ஸ்வாமிகள், 'தாஸ மார்க்கம்' என்ற வழியில் எப்போதும் லோக க்ஷேமத்துக்காக உழியம் செய்து கொண்டே இருந்தவர். அவர் ''என் கடன் பணி செய்து கிடப்பதே''என்று சொன்னவர். இந்த வரி வருகிற செய்யுளின் ஆரம்பம் ''நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்'' என்பது. கடம்ப மாலையை விரும்பி அணிகிற முருகன்தான் கடம்பன். 'முருகனைப் பெற்ற அம்பாளைத் தன் பாகத்தில் கொண்ட பரமேசுவரன்' என்று ஸோமாஸ்கந்த மூர்த்தமாக இங்கே சொல்கிறார். நிஷ்காம்யமாகப் பணி செய்து கிடக்கிற பான்மையை முருகன் விசேஷமாக அருள்வான் என்கிற மாதிரி 'நம் கடம்பன்' என்று ஆரம்பித்திருக்கிறது!

கடைசியில் 'யோகம்' என்று சொன்னேன். இது பிராண மூலத்தைக் கண்டுபிடித்து அதோடு சேர்கிற வழி. பிராண சக்தி என்பது சரீரத்தில் மூலாதாரம் என்கிற இடத்தில் குண்டலினி என்கிற சர்ப்ப ரூபத்திலேயே இருக்கிறது. நமக்கெல்லாம் அதன் மகாசக்தி தெரியவேயில்லை. அது குண்டலாகாரமாகச் சுருட்டிக் கொண்டு தூங்குகிற பாம்பாகவே இருக்கிறது. தூங்கும் பாம்பைத் தட்டி எழுப்புவதற்குத்தான் யோக சாதனைகள் இருக்கின்றன. சுப்பிரம்மணியர் யோக ஸ்வரூபம். அதனால்தான் அவரை எப்போதும் பாம்போடேயே சேர்த்துச் சேர்த்துப் பேசுகிறோம். 'வாஸுகி தக்ஷகாதி, ஸர்ப்ப ஸ்வரூப தாரணாய' என்று முத்துஸ்வாமி தீக்ஷிதர்கூட 'ஸ்ரீ ஸுப்ரமண்யாய நமஸ்தே' கிருதியில் சொல்கிறார். நாகர் பிரதிஷ்டை, ஷஷ்டியில் நாகராஜ பூஜை எல்லாம் சுப்பிரமண்யரை உத்தேசித்தே செய்கிறோம்.

1932-ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது.

தெலுங்கு தேசத்தில் சுப்ரமண்யரையே ஸர்ப்பமாகப் பாவிப்பதால்தான், பாம்பை, 'சுப்பராயுடு' என்கிறார்கள். அவரே யோகத்தின் நிறைவு.

ஞானமும் யோகமும் முடிகிற இடத்தில் ஓர் ஆட்டம், அசைவு இல்லை; லோகமே இல்லை; உணர்ச்சிகளே இல்லை. இதெல்லாம் பட்டுப் போன இடம் அது. இப்படிப் பட்டுப் போன நிலையில் ஈசுவரனை 'ஸ்தாணு' என்று சொல்வது வழக்கம். 'பட்ட கட்டை' என்று அர்த்தம். சுசீந்திரத்தில் 'ஸ்தாணுமாலயன்' என்று கேட்டிருப்பீர்கள். மும்மூர்த்தியும் சேர்ந்த ஸ்வரூபம். அதில் 'ஸ்தாணு' என்பது பரம வைராக்கியமான பரமேச்வரன்தான். உணர்ச்சியில்லாவிட்டால் 'மரத்து'ப் போகிறது என்கிறோமல்லவா? அப்படிக் காய்ந்த மரமாக இருக்கிறவர் ஸ்தாணு. பக்த அநுக்கிரகத்துக்காகக் கருணையில் நனைந்திருக்கிற போது ''ஆர்த்ர''ராக (ஆதிரையானாக) இருப்பவரே இப்படி ஞானத்தில் 'பட்ட கட்டை'யாயிருப்பார். அதே மாதிரிதான் அம்பாளும். கருணாமயமான அவளும் பரம விரக்தியாக இருக்கிற ஓர் அவஸ்தை (நிலை) உண்டு. அவள் எப்போதும் ஈசுவரனையே பற்றிப் படர்ந்திருப்பவள். அவர் மரமாக இருந்தால், இவள் கொடியாகச் சுற்றிக் கொண்டிருப்பாள். ஸ்ரீசைலத்தில் அவர் அர்ஜுன (மருத) மரமாக இருக்கிறார்; இவள் மல்லிகைக் கொடியாகச் சுற்றிக் கொண்டிருக்கிறாள்; அதனால்தான் அவருக்கு மல்லிகார்ஜுனர் என்று பெயர். அது நல்ல பசுமையோடு இருக்கப்பட்ட மரம். பட்ட மரமாக அவர் இருக்கும்போது அம்பாள் என்ன செய்கிறாள்?

(தொடரும்)

தி. மு. க.வின் இழப்பு



திரு என்.வி. நடராஜன் அவர்கள் மறைவு, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மாபெரும் இழப்பு.

தொண்டராக விளங்கிய போதும் சரி, அமைச்சராக உயர்ந்த போதும் சரி, எளிய வாழ்வும் தோற்றமும் கொண்டு படாடோபமின்றி அனைவரிடமும் பழகினார்.

ஆதி நாளில் காங்கிரசில் இருந்தவர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது திரு ஈ.வெ.ரா.வுக்குப் பக்கபலமாக இருந்து சிறை புகுந்தார். பிறகு தி.மு.க.வின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு அஸ்திவாரத்திலிருந்து பலப்படுத்தி மாளிகையாக உருவாக்கும் பணியில் அன்புத் தோழர்களுடன் ஈடுபட்டார்.

திரு என். வி. என். தொழிலாளர் தலைவரும்கூட. தொழிற்சங்க இயக்கத்தில் திருவாளர்கள் அண்ணாதுரை, திரு வி.க., ஆகியோருடன் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

கட்சி ஊழியர்களிடம் அசைக்க முடியாத கொள்கைப் பிடிப்பும் கட்டுப்பாடும் எதிர்பார்த்த அவர், அவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார். கொள்கைப் பிடிப்பு காரணமாக ஆறு முறை சிறை செல்ல நேர்ந்ததை வரவேற்று மகிழ்ந்தார்.

திரு என். வி. என். அவர்கள் மறைவில் ஒரு சக்தி வாய்ந்த எழுத்தாளரையும் பத்திரிகை ஆசிரியரையும் இழந்து விட்டிருக்கிறோம்.

பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சராக இருந்து வந்த என்.வி.என். நீண்ட காலமாக நோயுடன் போராடி வந்தார். மரணம் அவர் ஆன்மாவுக்கு நிம்மதி தேடித் தந்திருக்கலாம். ஆனால் அவரது கட்சித் தோழர்கள், குடும்பத்தினர் ஆகியோர் துயரம் துடைக்க முடியாததாகிறது.

ராஜாஜி சிந்தனை

ஒப்புரவு

கடிவாளம் போடப்பட்ட குதிரைகள் போலவும் காயடிக்கப்பட்ட காளைகள் போலவும் சமுதாயம் பரம்பரை பரம்பரையாக வாழ ஒப்புக் கொள்ள முடியாது. ஆகவே சுதந்திரத்துடன் சேவையும் இணைக்கப்பட்ட ஒரு வாழ்க்கையை நாம் மேற்கொள்ள வேண்டும். இதுவே தர்மம் என நான் வர்ணித்தால் அது வியப்பளிப்பதாகவும் விஷயத்தை மிகவும் எளிதாக்கிவிட்டதாகவும் தோன்றும். ஆனால் ஹிந்து சம்பிரதாயத்தில் இதைத்தான் தர்மம் என்று கூறியிருக்கிறது. பிற பெரிய மதங்களிலும் இதற்கு ஒப்பான வார்த்தைகள் உண்டு. ஒரு பிரஜை தன்னைச் சுற்றி உள்ளவர் தொடர்பாகச் சுதந்திர உணர்வுடன் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைத் திருவள்ளுவர் ஒப்புரவு எனக் கூறினார். இதுவே சமூக, அரசியல் ரீதியான தர்மம்.

—சுயராஜ்யா, ஜூலை 27, 1963

இருபத்தேழாம் அத்தியாயம்

இதயக் கனல்

சொல்ல முடியாத வியப்புடனே தம்மைப் பார்த்த சிவகாமியை, சர்ப்பத்தின் கண்களை யொத்த தமது காந்த சக்தி வாய்ந்த கண்களினாலே நாகநந்தியடிகள் சற்றுநேரம் உற்றுப் பார்த்தார்.

''சிவகாமி! நான் சொல்வதை நீ நம்பவில்லையா? என் நெஞ்சைத் திறந்து உனக்கு நான் காட்டக் கூடுமானால்-- இந்தக் கடின இதயத்தைப் பிளந்து இதற்குள்ளே இரவும் பகலும், ஜுவாலை விட்டு எரிந்து கொண்டிருக்கும் தீக் கனலை உனக்கு நான் காட்ட முடியுமானால்......'' என்று சொல்லிக் கொண்டே பிக்ஷு தம் மார்பில் படீர் படீர் என்று இரண்டு தடவை குத்திக் கொண்டார். உடனே அவருடைய இடுப்பு வஸ்திரத்தில் செருகிக் கொண்டிருந்த சிறு கத்தியை எடுத்து அதன் உறையைச் சடாரென்று கழற்றி எறிந்து விட்டுத் தம் மார்பிலே அக் கத்தியால் குத்திக் கொள்ளப் போனார்.

சிவகாமி சட்டென்று அவருடைய கையைப் பிடித்துக் கத்தியால் குத்திக் கொள்ளாமல் தடுத்தாள்.

சிவகாமி தன் கரத்தினால் நாகநந்தியின் கையைப் பிடித்திருந்த சொற்ப நேரத்தில் இரண்டு அதிசயமான அநுபவங்களை அடைந்தாள். நாகநந்தியின் கரமும் அவருடைய உடல் முழுதும் அப்போது நடுங்குவதை உணர்ந்தாள். ஒன்பது வருஷங்களுக்கு முன்னால் புத்த பிக்ஷுவைச் சிவகாமி தன்னுடைய தந்தையை யொத்தவராய்க் கருதியிருந்த போது சில சமயம் அவருடைய கரங்களைத் தற்செயலாகத் தொட்டுப் பார்க்க நேர்ந்ததுண்டு. அப்போது அவளுடைய மனத்தில் 'இது என்ன வஜ்ர சரீரம்? இவருடைய தேகமானது கேவலம் சதை இரத்தம், நரம்பு, தோல் இவற்றின் சேர்க்கையைப் பெறாமல் முழுதும் எலும்பினாலானதாகவல்லவா தோன்றுகிறது? எப்பேர்ப்பட்ட கடின தவவிரதங்களை அநுஷ்டித்து இவர் தம் தேகத்தை இப்படிக் கெட்டிப்படுத்தியிருக்க வேண்டும்?' என்று எண்ணமிட்டதும் உண்டு. அதே புத்த பிக்ஷுவின் தேகம் இப்போது பழைய கெட்டித் தன்மையை இழந்து மிருதுத்தன்மையை அடைந்திருப்பதைச் சிவகாமி உணர்ந்து அதிசயித்தாள்.

நாகநந்தி சற்று நேரம் கையில் பிடித்த கத்தியுடன் சிவகாமியைத் திருதிருவென்று விழித்துப் பார்த்துக்





கொண்டிருந்தார். பிறகு சுய உணர்வு திடீரென்று வந்தவரைப் போல் கையிலிருந்த கத்தியைத் தூரத்தில் விட்டெறிந்தார். உடனே சிவகாமியும் அவருடைய கையை விட்டாள்.

"சிவகாமி! திடீரென்று அறிவு கலங்கி மெய்மறந்து போனேன்! சற்று முன் உன்னிடம் என்ன சொன்னேன், எதற்காக இந்தக் கத்தியை எடுத்தேன் என்பதைக் கொஞ்சம் ஞாபகப்படுத்து வாயா?" என்று புத்தபிக்ஷு கேட்டதற்குச் சிவகாமி, "சுவாமி! சற்று முன்னால் தாங்கள் புத்த பிக்ஷு விரதத்தைக் கைவிடப் போவதாகவும், சிம்மாசனம் ஏறி இராஜ்யம் ஆளப் போவதாகவும் சொன்னீர்கள்" என்று கூறி விட்டுத் தயங்கினாள்.

"ஆம், சிவகாமி! நான் கூறியது உண்மை. அதற்காகவே நான் அஜந்தாவுக்குப் போகிறேன். முப்பத்தைந்து வருஷத்துக்கு முன்னால் அஜந்தா நதிக் கரையில் பிக்ஷு விரதம் ஏற்றேன். அதே நதியில் இந்த விரதத்துக்கு ஸ்நானம் செய்து விட்டு வரப் போகிறேன். அஜந்தா சங்கராமத்தின் தலைவராகிய எந்தப் பூஜ்ய புத்த குருவினிடம் தீக்ஷை பெற்றேனோ, அவரிடமே இப்போது விடுதலை பெற்று வரப் போகிறேன். அது உனக்குச் சம்மதந்தானே?" என்றார் நாகநந்தியடிகள். சிவகாமி, இன்னதென்று விவரம் தெரியாத பயத்தினால் பீடிக்கப்பட்டவளாய், "சுவாமி! இது என்ன காரியம்? இத்தனை வருஷ காலமாக அநுசரித்த புத்த தர்மத்தைத் தாங்கள் எதற்காகக் கைவிட வேண்டும்? அதனால் தங்களுக்கு உலக சிந்தனை ஏற்படாதோ? இத்தனை நாள் அநுஷ்டித்த விரதம், தவம் எல்லாம் நஷ்டமாகுமே? எந்த லாபத்தைக் கருதி இப்படிச் செய்யப் போகிறீர்கள்?" என்றாள்.

இப்படிக் கேட்டபோதே அவளுடைய உள்ளுணர்ச்சியானது இந்தக் கேள்வியெல்லாம் தான் கேட்பது



பெரிய தவறு என்றும், அந்தத் தவறினால் பிக்ஷு விரித்த வலையிலே தான் விழுந்து விட்டதாகவும் உணர்த்தியது.

''என்ன லாபத்துக்காக என்று கேட்கிறாய்?'' என்று திருப்பிக் கேட்டுவிட்டு, ''ஹாஹாஹா'' என்று உரத்துச் சிரித்தார்.

''உனக்குத் தெரியவில்லையா? அப்படியானால், சொல்கிறேன் கேள்! முப்பத்தைந்து வருஷ காலமாக அநுஷ்டித்த புத்த பிக்ஷு விரதத்தை நான் கைவிடப் போவது உனக்காகத்தான், சிவகாமி! உனக்காகவேதான். நான் அஜந்தாவில் சம்பிரதாயமாக, உலகம் அறிய, குருவினிடம் அநுமதி பெற்று விரதத்தை விடப் போகிறேன். ஆனால், விரத பங்கம் பல வருஷங்களுக்கு முன்னாலேயே நேர்ந்து விட்டது. என்றைய தினம் உன்னுடைய தகப்பனார் ஆயனரின் அரண்ய வீட்டில், அற்புதச் சிலைகளுக்கு மத்தியிலே உயிருள்ள சிலையாக உன்னைப் பார்த்தேனோ, அன்றைக்கே என் விரதத்துக்குப் பங்கம் வந்துவிட்டது. ஆனால், அதற்காக நான் வருத்தப்படவில்லை. உன்னுடன் ஒருநாள் வாழ்வதற்காகப் பதினாயிரம் வருஷம் நரகத்திலே கிடக்க வேண்டுமென்றால், அதற்கும் நான் ஆயத்தமாயிருக்கிறேன். உன்னுடைய அன்பை ஒரு கண நேரம் பெறும் பாக்கியத்துக்காக என்றென்றைக்கும் மோட்சத்தை இழந்துவிட வேண்டும் என்றால் அதற்கும் சித்தமாயிருக்கிறேன்...''

சிவகாமி பயந்து நடுங்கினாள். இத்தனை நாளும் அவள் மனத்துக்குள்ளே புதைந்து கிடந்த சந்தேகம் இன்று உண்மை என்று தெரியலாயிற்று. ஆனால், இந்தக் கள்ள பிக்ஷு இத்தனை நாளும் ஏன் இதையெல்லாம் தம் மனத்துக்குள்ளே மறைத்து வைத்துக் கொண்டிருந்தார்? இத்தனை காலமும் தன்னைத் தொந்தரவு செய்யாமல், எந்த விதத்திலும் வற்புறுத்தாமல் சுதந்திரமாக ஏன் விட்டு வைத்திருந்தார்? அவள் மனத்தில் எழுந்த மேற்படி கேள்விக்குத் தட்சணமே மறுமொழி கிடைத்தது.

''சிவகாமி! என்னுடைய ஆத்மாவை நான் காப்பாற்றிக் கொள்வதற்கும் உன்னுடைய வாழ்க்கைச் சுகத்தை நீ பாதுகாத்துக் கொள்வதற்கும் ஒரு சந்தர்ப்பம் ஒன்பது வருஷங்களுக்கு முன்

னால் ஏற்பட்டது. மாமல்லன் இங்கு வந்து உன்னை அழைத்தபோது நீ அவனுடன் போயிருந்தாயானால், அல்லது உன்னை அவனிடம் சேர்ப்பிப்பதற்கு எனக்காவது ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருந்தாயானால், நான் என் விரதத்தை ஒருவேளை காப்பாற்றிக்கொண்டிருப்பேன். நீயும் உன் வாழ்க்கை இன்பத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், நீ என் உண்மையான நோக்கத்தைத் தெரிந்து கொள்ளாமல் அநாவசியமாகச் சந்தேகித்து விஷக் கத்தியை என் முதுகின் மேல் எறிந்து காயப்படுத்தினாய். அப்போது அந்த விஷக் கத்தி என்னைக் கொல்லவில்லை. ஆனால் அதே கத்தியானது இப்போது என்னைத் தாக்கினால் அரை நாழிகை நேரங்கூட என் உயிர் நிலைத்திராது.



சிவகாமி! சற்று முன்னால் என் கரத்தை நீ பிடித்தபோது உன் மனத்தில் ஒரு சந்தேகம் உதித்தது. ஒன்பது வருஷங்களுக்கு முன்னால் இரும்பையும் கல்லையும் ஒத்துக் கெட்டியாயிருந்த என் கை இப்போது இவ்வளவு மிருதுத் தன்மை அடைந்திருப்பதைக் குறித்து நீ ஆச்சரியப்பட்டாய். இந்த மாறுதலுக்குக் காரணம், நீதான் சிவகாமி! கடுமையான தவ விரதங்களை அநுசரித்து என் தேகத்தை நான் அவ்வாறு கெட்டிப்படுத்திக் கொண்டிருந்தேன். வெகு காலம் விஷ மூலிகைகளை உட்கொண்டு என் தேகத்தில் ஓடிய இரத்தத்தை விஷமாகச் செய்து கொண்டிருந்தேன். அந்தக் காலத்தில் என்னை எப்பேர்ப்பட்ட கொடிய விஷ நாகம் கடித்தாலும், கடித்த மறுகணம் அந்த நாகம் செத்துப் போகுமே தவிர, எனக்கு ஒரு தீங்கும் நேராது. என்னுடைய உடம்பின் வியர்வை நாற்றம் காற்றிலே கலந்து விட்டால், அதன் கடுமையைத் தாங்க முடியாமல், சுற்று வட்டாரத்தில் உள்ள விஷப் பாம்புகள் எல்லாம் பயந்து நாலு திசைகளிலும் சிதறி ஓடும். இதைப் பல சமயங்களில் நீயே நேரில் பார்த்திருக்கிறாய்.....'' என்று நாகநந்தி கூறிய போது, இரண்டு பேருடைய மனத்திலும் பத்து வருஷங்களுக்கு முன்னால் மண்டபப்பட்டுக் கிராமத்தில் வெண்ணிலா விரிந்த ஓர் இரவிலே நடந்த சம்பவங்கள் ஞாபகத்தில் வந்தன.

''அப்பேர்ப்பட்ட இரும்பையொத்திருந்த என் தேகத்தை மாற்று மூலிகைகளினாலும் மற்றும் பல வைத்திய முறைகளை அநுசரித்தும் இப்படி மிருதுவாகச் செய்து கொண்டேன். என் இரத்தத்தில் கலந்திருந்த விஷத்தை முறிவு செய்தேன். சென்ற ஒன்பது வருஷம் இந்த முயற்சியிலேதான் ஈடுபட்டிருந்தேன். இடையிடையே உன்னைப் பல நாள் பாராமலிருந்ததன் காரணமும் இதுதான். சிவகாமி! முப்பது பிராயத்து இளைஞனைப் போல் இன்று நான் இல்வாழ்க்கை நடத்துவதற்குத் தகுந்தவனாயிருக்கிறேன். இத்தனைக்கும் பிறகு நீ என்னை நிராகரிக்க முடியாது. அப்படி நிராகரித்தாயானால் அதன் மூலம் எனக்கு நீ அளிக்கும் துன்பத்துக்குப் பரிகாரமாக நூறுநூறு ஜன்மங்களில் நீ பிராயச்சித்தம் செய்து கொள்ளும்படியிருக்கும். அப்போதும்கூட உன்னுடைய பாபம் தீர்ந்துவிட்டதாகாது.''

சிவகாமியின் தலை வெடித்துவிடும் போலிருந்தது. தன் முன்னால் பிக்ஷு உட்கார்ந்து மேற்கண்டவாறு பேசியதெல்லாம் ஒருவேளை சொப்பனமாயிருக்கலாம் என்று ஒரு கணம் எண்ணினாள். அந்த எண்ணத்தினால் ஏற்பட்ட ஆறுதலும் சந்தோஷமும் மறு கணமே மாயமாய் மறைந்தன. இல்லை, இதெல்லாம் சொப்பனமில்லை; உண்மையாகவே தன் கண்முன்னால் நடக்கும் பயங்கரமான நிகழ்ச்சிதான்.

இரத்தம் போல் சிவந்த கண்களைக் கொட்டாமல் புத்த பிக்ஷு தன்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பது இதோ தன் எதிரில் உண்மையிலேயே நடக்கும் சம்பவம்தான்.

அபாயம் நெருங்கியிருப்பதை உணர்ந்ததும் சிவகாமியின் உள்ளம் சிறிது தெளிவடைந்தது. இந்தக் கொடிய பைத்தியக்காரனிடமிருந்து தப்புவதற்கு வேறு வழியில்லை. வணங்கி வேண்டிக் கெஞ்சிக் கூத்தாடி எப்படியாவது கொஞ்சம் அவகாசம் பெற்றுக் கொள்ள வேண்டும். கடவுள் அருள் இருந்தால் இந்த வெறிகொண்ட



அன்றைய அரசியல்வாதிகள் நாட்டின்மேல் பற்று வைத்திருந்தனர். இன்றைய அரசியல்வாதிகள் நாற்காலியின் மீதுதான் பற்று வைத்திருக்கிறார்கள். --ஜெயகாந்தன் - ரவிசந்திரிகா

அந்தப் போலீஸ்காரர் உயிருள்ள மனிதரல்ல; பொம்மை! வேகமாகக் காரோட்டி வரும் டிரைவர்களை எச்சரிப்பதற்காகவே ஜப்பானில் பல இடங்களில் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு இது.

ஆமாம், விஷயம் தெரிந்த பிறகு பொம்மைதானே என்ற அலட்சியத்தில் காரோட்டிகள் வேகமாகப் போக மாட்டார்களா?

மாட்டார்கள், சில சமயங்களில் பொம்மைக்குப் பதில் உண்மையான போலீஸ்காரரே நின்றிருப்பார்!

(டைம்) -எம். என்.



பிக்ஷு அஜந்தாவிலிருந்து திரும்புவதற்குள் மாமல்லர் வந்து தன்னை விடுதலை செய்து கொண்டு போவார். இல்லாவிடில், வேறு ஏதேனும் யுக்தி செய்ய வேண்டும். முற்றத்துக் கிணறு இருக்கவே இருக்கிறது.

எனவே, பிக்ஷுவிடம் மன்றாடி வேண்டிக்கொள்வதற்காகச் சிவகாமி வாய் திறந்தாள்.

பிக்ஷு அதைத் தடுத்து, "வேண்டாம், சிவகாமி! இன்றைக்கு நீ ஒன்றும் பேச வேண்டாம். அவசரப்பட்டு எனக்கு மறுமொழி சொல்ல வேண்டாம். அஜந்தா போய் வந்த பிறகே உன்னிடம் இதைப் பற்றியெல்லாம் பிரஸ்தாபிக்க வேண்டுமென்று நான் எண்ணியிருந்தேன். ஆனால், வாதாபிக்கு வெளியே இன்று இரவு நாங்கள் தங்குவதற்குரிய இராஜாங்க விடுதியை அடைந்ததும், உன்னிடம் என் மனத்தைத் திறந்து காட்டிவிட்டுப் போவது தான் உசிதம் என்றும், எல்லா விஷயங்களையும் நன்றாக யோசித்து முடிவுசெய்ய உனக்கும் போதுமான அவகாசம் கொடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டு திரும்பி வந்தேன். உன்னை நான் வற்புறுத்தப்போவதில்லை. பலவந்தப்படுத்தப் போவதில்லை. உனக்கு இஷ்டமில்லாத காரியத்தை ஒரு நாளும் செய்யச் சொல்ல மாட்டேன். ஆனால், நான் சொல்ல வேண்டியதை மட்டும் சொல்லி விடுகிறேன். ஒரே மூச்சில் இப்போதே சொல்லி விடுகிறேன்; சற்றுப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிரு. நான் அஜந்தாவிலிருந்து திரும்பி வந்த பிறகு நீ உன்னுடைய தீர்ப்பைச் சொல்லலாம்."

பிக்ஷுவின் இந்த வார்த்தைகள் சிவகாமிக்கு ஒருவாறு ஆறுதல் அளித்தன. அவளுடைய பீதியும் படபடப்பும் ஓரளவு குறைந்தன.

நாகநந்தி ஆரம்பத்திலிருந்து மறுபடியும் கதையை ஆரம்பித்தார்: "எந்த நேரத்தில் உன் தந்தையின் அரண்ய வீட்டில் உன்னை நான் பார்த்தேனோ, அதே நேரத்தில் என்னுடைய இதயத்திலிருந்து என் சகோதரனையும் சளுக்க சாம்ராஜ்யத்தையும் அப்புறப்படுத்திவிட்டு அவர்கள் இருந்த இடத்தை நீ ஆக்கிரமித்துக் கொண்டாய். அதுமுதல் என்னுடைய யோசனைகள், ஏற்பாடுகள் எல்லாம் தவறாகவே போய்க் கொண்டிருந்தன. அந்தத் தவறுகள் காரணமாகவே வாதாபிச் சக்கரவர்த்தியின் தென்னாட்டுப் படையெடுப்பு வெற்றியடையாமற் போயிற்று.

"ஆகா! அந்தக் காலத்தில் நான் அநுபவித்த சொல்லொணாத மனவேதனையை மட்டும் நீ அறிந்தாயானால் உன் இளகிய நெஞ்சம் கரைந்து உருகிவிடும். ஒரு பக்கத்தில் உன் பேரில் எனக்கேற்பட்டிருந்த காதலாகிய கனல் என் நெஞ்சைத் தகித்துக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் உன்னைச் சேர்ந்தவர்கள், உன்னோடு பழகியவர்கள், உன்னுடைய அன்புக்குப் பாத்திரமானவர்கள் மீது எனக்கேற்பட்ட அளவில்லாத அசூயை பெரு நெருப்பாக என் உடலை எரித்தது. அப்போதெல்லாம் என் நெஞ்சில் நடந்து கொண்டிருந்த தேவாசுர யுத்தத்துக்குச் சமமான போராட்டத்தை நீ அறிந்தாயானால் பெரிதும் பயந்து போயிருப்



பாய். ஒரு சமயம் உன்னைச் சேர்ந்தவர்கள் எல்லாரையும் கொன்றுவிட வேண்டும் என்று எனக்குத் தடுக்க முடியாத ஆத்திரம் உண்டாகும். ஆயினும் பின்னால் உனக்கு அது தெரிந்துவிட்டால் உன்னுடைய அன்பை என்றென்றைக்கும் இழந்துவிட நேரிடுமே என்ற பயம் என்னைக் கோழையாக்கியது. மாமல்லனையும் மகேந்திர பல்லவனையும் கொல்வதற்கு எனக்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் வாய்த்தன. ஆனால், ஒவ்வொரு சமயமும் 'உனக்குத் தெரிந்துவிட்டால்?...' என்ற நினைவு என்னைத் தடுத்தபடியால் அவர்கள் தப்பிப்

பிழைத்தார்கள். பரஞ்சோதி காஞ்சியில் பிரவேசித்த அன்று உன்னை மதயானை தாக்காமல் காப்பாற்றினான் அல்லவா? அந்தக் காரணத்துக்காகவே அவனை அன்றிரவு நான் சிறையிலிருந்து தப்புவித்து உன் வீட்டுக்கு அழைத்து வந்தேன். ஆனால், அவனுக்கு நீ நன்றி செலுத்துவதைப் பார்க்க என்னால் சகிக்க முடியவில்லை. கலைவாணி! உன் தந்தை ஆயனருக்கு உன்னிடமுள்ள செல்வாக்கைப் பார்த்துக்கூட நான் அசூயை அடைந்தேன். ஆயினும் உன்னைப் பெற்ற புண்ணியவான் என்பதற்காக அவரை வாளால் வெட்டப் போன வீரனின் கையைப் பிடித்துத் தடுத்து உயிரைக் காப்பாற்றினேன். அது முதல் உன் தந்தையைக் காப்பாற்றிக் கொடுத்ததே என்ற காரணத்துக்காக இந்தக் கையை வாழ்த்திக் கொண்டிருக்கிறேன்.''



இதைக் கேட்டதும் சிவகாமியின் நெஞ்சம் உண்மையிலேயே இளகித்தான்விட்டது. 'இந்த புத்தபிக்ஷு இரக்கமற்ற ராட்சதனாயிருக்கலாம்; இவருடைய தேகத்தில் ஓடும் இரத்தம் நாக சர்ப்பத்தின் விஷம் கலந்த இரத்தமாயிருக்கலாம்; ஆனாலும் இவர் என் பேரில் கொண்ட ஆசையினால் என் தந்தையின் உயிரைக் காப்பாற்றினார் அன்றோ!'

சிவகாமியின் மன நிலையை ஒருவாறு அறிந்து கொண்ட புத்த பிக்ஷு ஆவேசங் கொண்டவராய் மேலும் கூறினார்:

''கேள் சிவகாமி! உன்னைப் பெற்றவர் என்பதற்காக ஆயனரைக் காப்பாற்றினேன். உன்னை விரோதிப்பவர்களை நான் பழி வாங்குவேன் என்பதற்கும் ஓர் உதாரணம் சொல்லுகிறேன். இந்த வாதாபியில் நீ எவ்வித அபாயமும் இன்றி நிர்ப்பயமாக இத்தனை காலமும் வாழ்ந்து வருகிறாயல்லவா? இதற்குக் காரணம் எல்லோருக்கும் தெரியும். ஆகையால்தான் யாருமே உன் அருகில் நெருங்குவதில்லை. இதைக் குறித்து இந் நகரத்து அரண்மனையில் ஒரு பெண்ணுக்கு அசூயை உண்டாயிற்று. அவள் பட்டத்து ராணியின் சகோதரி. விஷம புத்தியுள்ள அந்தப் பெண் என்னைத் தன்னுடைய மோக வலையில் ஆழ்த்துவதற்கு மிக்க பிரயத்தனம் செய்தான். அது பலிக்காமல் போகவே, ஒரு நாள் அவள் உன்னைக் குறிப்பிட்டு நிந்தை மொழி கூறினாள். 'அந்தக் காஞ்சி நகர்க் கலைவாணியின் அழகு எனக்கு இல்லையோ?' என்று கேட்டாள். மறுநாள் அவள் என்னை நெருங்கியபோது அவளுடைய கையை நான் பிடித்து என் கை விரல் நகத்தினால் ஒரு கீறல் கீறினேன். அன்றிரவு அவள் தூங்கி மறுநாள் காலையில் எழுந்து கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். அவ்வளவுதான்; அவளுடைய மூளை கலங்கிப் பைத்தியம் பிடித்து விட்டது. அவ்வளவு பயங்கரத் தோற்றத்தை அவள் அடைந்தாள். ஒருவரும் அறியாமல் அவள் இந் நகரை விட்டு வெளியேறிக் காட்டிலும் மலையிலும் வெகு காலம் அலைந்து கொண்டிருந்தாள். இப்போது அவள் காபாலிக மதத்தினரின் பலிபீடத்தில் அமர்ந்து பலி வாங்கி உண்டு உயிர் வாழ்ந்து வருகிறாள்...!''

சிவகாமி பழையபடி பீதி கொண்டாள். இந்த வெறி பிடித்த பிக்ஷு சீக்கிரம் போய்த் தொலைய மாட்டாரா என்று மனத்துக்குள் எண்ணமிட்டாள்.

''சிவகாமி! சில நாளைக்கு முன் அந்தக் காளி மாதாவைத் தற்செயலாக நான் சந்திக்க நேர்ந்தது. அவள் என்ன சொன்னாள் தெரியுமா? 'சுவாமிகளே! ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் உம்முடைய காதலி சிவகாமியை நீங்கள் என்னிடம் ஒப்புவித்தே ஆகவேண்டும். அவளுடைய உடலைப் புசித்தால்தான் என்னுடைய பசி தீரும்!' என்றாள் பைத்தியக்காரி. அப்படி உன் உடலைப் புசிப்பதாயிருந்தால் அவளிடம் நான் கொடுத்துவிடுவேன் என்று எண்ணுகிறாள்! அவளைவிட நூறு மடங்கு எனக்குத்தான் பசி என்பதை அவள் அறியவில்லை! உன்னைப் பார்க்கும்போதெல்லாம் உன்னை அப்படியே விழுங்கி விடவேண்டும் என்று எனக்கு உண்

பழமொழி: தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சு.
புது மொழி: ஹெட்டுக்கு வந்தது ஹெல்மெட்டோடு போச்சு. —பி.என்.ஆர்.

டாகும் பேராவலே அவள் என்னை கண்டாள்?''

திடீரென்று நாகநந்தி பிக்ஷு மலைப் பாம்பாக மாறினார். மலைப் பாம்பு வாயை அகலத் திறந்து கொண்டு, பிளந்த நாக்கை நீட்டிக் கொண்டு, தன்னை விழுங்குவதற்காக நெருங்கி வருவதுபோல் சிவகாமிக்குத் தோன்றியது. ''ஐயோ!'' என்று அலறிக் கொண்டு அவள் பின்னால் நகர்ந்தாள்.

நாகநந்தி சிரித்தார். ''சிவகாமி! பயந்து விட்டாயா? கண்களைத் திறந்து பார்! புத்த பிக்ஷுதான் பேசுகிறேன்!'' என்றார்.

சிவகாமி கண்களைத் திறந்து பார்த்தாள். சற்று முன் தான் கண்ட காட்சி வெறும் பிரமை என்பதை உணர்ந்து கொண்டாள். ஆயினும் அவளுடைய கண்களில் பீதி நிறைந்திருந்தது.

நாகநந்தி எழுந்து நின்று சொன்னார்: ''சிவகாமி! நான் சொன்னதையெல்லாம் யோசித்துப் பார்! ஒருவேளை, எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று நீ நினைக்கிறாய் போலும்! நல்லவேளையாக எனக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை. என் அறிவு தெளிவாய்த்தான் இருக்கிறது. ஆனால், இன்னும் கொஞ்ச நாள் வரையில் உன்னிடம் நான் கொண்ட காதல் நிறைவேறுமற் போனால், எனக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடித்துவிடும். அப்புறம் நான் என்ன செய்வேனோ தெரியாது.

''சிவகாமி! நான் போய் வருகிறேன். நான் திரும்பி வருவதற்குள் உன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு எனக்கு ஒரு முடிவு சொல்ல வேண்டும். உனக்காக நான் இதுவரையில் செய்திருக்கும் தியாகங்களை யெல்லாம் காட்டிலும் மகத்தான தியாகம் ஒன்றைச் செய்யப் போகிறேன். அதைப் பற்றி நான் திரும்பி வருவதற்குள் நீயே தெரிந்து கொள்வாய். அதைத் தெரிந்துகொண்ட பிறகு நீ என்பேரில் இரக்கம் கொள்ளாமல் இருக்கவும் முடியாது.''

இவ்விதம் சொல்லிவிட்டு நாகநந்தி சிவகாமியை அளவில்லாத ஆர்வம் ததும்பும் கண்களினால் சற்று நேரம் உற்றுப் பார்த்தார். சட்டென்று திரும்பி வாசற் பக்கம் சென்றார்.

பிக்ஷு சென்ற பிறகு சிவகாமியின் உடம்பு வெகு நேரம்வரையில் நடுங்கிக் கொண்டே யிருந்தது. (தொடரும்)

பணம் பத்தும் செய்யும்

இந்தப் படத்தின் கதாசிரியர், வசன கர்த்தா, என்ற முறையில் வெற்றி கண்ட 'சோ' இரட்டை வேடம் தாங்கி அதிலும் வெற்றி பெற்றிருக்கிறார். கதை, ஃபார்முலாக் கதைதானென்றாலும் வசனம் கைகொடுத்து உதவியிருக்கிறது. உலகம் தெரியாத அப்பாவி, அசடு-கொள்ளைக்கும் கொலைக்கும் அஞ்சாத 'ரவுடி' — இந்த இரண்டு பாத்திரங்களுக்கும் 'சோ' உயிர் கொடுத்திருக்கிறார். அழகாக அசடு வழியத் தெரிந்திருக்கும் அவருக்கு, கொடுமைக்கார வில்லனாகவும் நடிக்கத் தெரிந்திருக்கிறதே! வில்லனுக்கென்றே ஏற்பட்டிருக்கும் கட்டைக் குரல், அட்டகாசச் சிரிப்பு எதுவும் இல்லாமல், கம்பீரமான நடிப்பினாலேயே தம்மை வில்லனாகக் காண்பித்துக் கொண்டிருக்கிறார் 'சோ'. அசடான பாத்திரத்துக்கு அவர் முகமும், விழியும் நன்கு துணை செய்கின்றன.

வில்லன் போலத் தோன்றும் ஸ்ரீகாந்த் ஒரு போலீஸ் அதிகாரி. அவரைக் காதலிப்பவராக வருபவர் குமாரி பத்மினி. இருவரும் காதல் காட்சிகளுக்கு உதவி யிருக்கிறார்கள்.

ராக்கம்மா, ராஜாவின் அப்பா வித்தனத்தில் தன்னையே மறந்து அவனை 'லவ்' பண்ண ஆரம்பித்து விடுகிறாள். இந்தப் பாத்திரத்தில் ராதிகா நன்றாய் நடித்திருக்கிறார்.

எம். ஆர். ஆர். வாசு பொல்லாதவனாக வந்தாலும் நல்லதே செய்கிறார்.

இது ஒரு பொழுதுபோக்குச் சித்திரம். அத்துடன் பதினான்கு 'ரீல்'கள்தான். கச்சிதமாக முடிந்து விடுகிறது. —கார்த்தன்





பத்து வருஷப் பைத்தியம்

அன்னம்

டாக்டர் மோகன் தம் அறைக் கதவைத் தள்ளிக் கொண்டு தம் இருக்கையில் அமரு முன், நர்ஸின் ஆர்டர்லி மைக்கேல் அவரிடம் அவசரம் அவசரமாகச் சொன்னான் :

" ரூம் ட்வென்டி ஸெவன் பேஷண்ட் காலையிலிருந்து உங்களைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறார், டாக்டர்...முகம் கூடத் தெளிவாகி இருக்கிறது...."

" ரூம் ட்வென்டி ஸெவன்... யூ மீன் மிஸ்டர் ராமாமிருதம் ?" என்று திருப்பிக் கேட்டார் டாக்டர் மோகன்.

இருபத்தேழாம் நம்பர் அறையிலிருந்த நோயாளியின் பெயர் ராமாமிருதம். வயது இப்போது ஐம்பத்தைந்தைத் தாண்டியிருக்கும். வசதியுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர் தான். இல்லாவிட்டால் தொடர்ந்து இத்தனை ஆண்டுகளாக ஆஸ்பத்திரியின் தனி அறைக்கான செலவுகளைச் சமாளித்துக் கொண்டிருக்க முடியுமா ?

ராமாமிருதம் — தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த பெரிய நிலச்சுவான்தார் — சென்னையில் பல கம்பெனிகளில் டைரக்டர் — அவருக்குச் சொந்தமான நிறுவனங்கள் சிலவும் இருந்தன. இருபது வயது ஆகும்போதே அவருடைய திருமணம் சொந்த மாமன் மகளான வைதேகியுடன் முடிந்துவிட்டது. ஒரு பெண்ணும் மூன்று பிள்ளைகளும் கொண்ட மிகவும் ஒற்றுமையான குடும்பம். ஒருவர் மேல்ஒருவர் பாசத்தைப் பொழிந்து வந்தனர்.

முக்கியமாக ராமாமிருதத்துக்குத் தம் மனைவி வைதேகியைக் காட்டிலும் — தம் மூன்று பிள்ளைகளையும்விட மேலாக — மூத்த பெண் மதுரத்தின் மேல் ஒரு தனிப்பட்ட பிரியம் உண்டு. ஊரே வியக்கும்படியாக அவள் திருமணத்தை நடத்தினார் ராமாமிருதம். அவருக்கு இணையான சம்பந்தம். ஒரே பையன். ஜோடிப் பொருத்தத்தைக் கண்டு அதிசயித்தவர்கள் பலர். பணம் பணத்துடன் சேர்கிறது எனப் பொருமியவர்கள் பலர்.

அன்று — அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாருமே மறக்க முடியாத அந்த நாளில் — மதுரம் மாப்பிள்ளையுடன் பெங்களூர் புறப்பட்டுப் போவதாக இருந்தது. மாப்பிள்ளையின் நெருங்கிய நண்பனுக்குப் பெங்களூரில் மறுநாள் திருமணம். இருபத்து நான்கு மணி நேரத்தில் புயல் காற்றுடன் கூடிய பெரு மழை பெய்யலாம் என்று வானொலியில் தெரிவித்திருந்தார்கள். பத்திரிகைகளிலும் கூடப் போட்டிருந்தார்கள். ராமாமிருதம் பயணத்தை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டார். அப்படியே போகத் தான் வேண்டும் என்றால் இரவு ரயிலில் புறப்பட்டுப் போகலாம் என்று ஆலோசனை சொன்னார்.

" அநாவசியமாகப் பயப்படுகிறீர்கள், மாமா....!" என்று கூறிவிட்டுப் பிடிவாதமாக அவன் காரிலேயே புறப்பட்டுப் போனான். காரைக் கண்ணன் ஓட்ட, அவன் அருகில் ஒயிலாக அமர்ந்து கொண்டாள் மதுரம். அவர்கள் புறப்பட்டுப் போன பக்கத்தையே பார்த்தபடி வெகுநேரம் உட்கார்ந்திருந்தார் ராமாமிருதம்.

அன்று இரவு பன்னிரண்டு மணிக்குப் புயல் ஓய்ந்தது. ஆனால் அதைவிடப் பயங்கரமான செய்தி வந்து சேர்ந்தது. பலத்த காற்று மழையில் பாதை தெரியாமல் கண்ணனின் கார் ஒரு மரத்தின் மீது மோதிக் கவிழ்ந்து விட்டதாம். பின்னால் போய்க் கொண்டிருந்த ஒரு லாரி டிரைவர் அதைக் கவனித்து இருவரையும் வேலூர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போயிருக்கிறாராம்.

அடுத்த பத்தாவது நிமிஷம் ராமாமிருதம் தம் காரை வெளியே எடுத்து விட்டார். வைதேகியும் குழந்தைகளும் பின் ஆசனத்தில் மௌனமாக அமர்ந்திருந்தார்கள். டிரைவர் மறு பேச்சுப் பேசாமல் அவர் பக்கத்தில் அமர்ந்திருந்தான். அசுர வேகத்தில் கார் பறந்தது. இரண்டு மணி நேரத்துக்குள்ளாக வேலூர் ஆஸ்பத்திரியை அடைந்தது.

ராமாமிருதத்தை டாக்டர்கள் அழைத்துப் போனார்கள். வார்டுக்கு அல்ல. ஆஸ்பத்

இரியை ஒட்டித் தனியாகக் கட்டப்பட்டிருந்த அந்தப் பயங்கர அறைக்கு.

அவர் பெற்ற ஒரே மகள் — உயிராக மதித்த பெண் — வெள்ளைப் போர்வையால் மூடப்பட்டு மீளாத் துயிலில் ஆழ்ந்திருந்தாள்.

'' மதுரம் !'' என்ற ஒரு சத்தம் — ராமாமிருதத்தின் அடிவயிற்றிலிருந்து வந்தது. அவர் அதற்குப் பிறகு அழவில்லை. கதறவில்லை. ஏன்! பேசக்கூடவில்லை. பெண்ணின் மார்பில் தம் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி வெடித்த வைதேகியின் பக்கம் அவர் திரும்பவில்லை. என்ன நடந்துவிட்டது என்று முற்றும் புரியாமல் விழி ஓரத்தில் நீர்த் திவலைகளுடன் நின்ற தம் பிள்ளைகளைக்கூட அவர் கவனிக்கவில்லை.

'' எங்கே அவன்?.... என் மாப்பிள்ளை?'' என்றுதான் கேட்டார்.

தலையில் பலத்த அடியுடன், கால்களில் எலும்பு முறிவுடன், பிழைப்பானா, மாட்டானா என்ற உறுதியற்ற நிலையில் கண்ணன் அதே ஆஸ்பத்திரியில் இன்னொரு மூலையில் கிடந்தான்.

தம் கால் செருப்புக்களைத் தேய்த்துச் சப்தமிட்டபடி அவர் நடந்தார். கண்ணனின் கால்மாட்டில் போய் நின்றார். அவன் பிரக்ஞை அற்றுப் போன நிலையில் துவண்டு கிடந்தான்.

அடுத்த விநாடி அவர் செய்த காரியத்தை யாருமே எதிர்பார்க்கவில்லை.


'' அடப்பாவி! என் மதுரத்தைக் கொன்று விட்டாயேடா !'' என்று கூவியபடி அவன் மேல் விழுந்தார். அவர் கரங்கள் அவன் கழுத்தைச் சுற்றி இறுகின.

ஒரு கணம் திகைத்து நின்ற டாக்டரும் மற்றும் இதரச் சிப்பந்திகளும் மின்னல் வேகத்தில் செயல்பட்டார்கள். அவர் கரங்களைக் கழுத்தினின்று அகற்றினார்கள். திமிறிக்கொண்டிருந்த அவரை அடக்க நான்கு பேர் தேவைப்பட்டது. அவர் கைகள் பாபரத்தன. பலவந்தமாக அவரை இழுத்துப் போனார்கள். தம் சக்தி யெல்லாம் இழந்தவராக ஒரு நாற்காலியில் சாய்ந்தார் அவர்.

அந்த நிமிடத்திலிருந்து அவருக்குப் பெண்கள் எல்லோரும் மதுரமாகத்தான் தெரிந்தார்கள்.... ஆண்கள் அத்தனை பேரும் மாப்பிள்ளை கண்ணனாகப்பட்டார்கள்....... இரண்டு மூன்று பேராக இருந்தால் பேசாமல் இருப்பார். தனியாக ஒருவன் மாட்டிக் கொண்டால், அவர் கைகள் அவன் கழுத்தைத்தான் பற்றும்.

எடுத்துக் கொண்ட முயற்சிகள் எதும் பலனளிக்காததால் மூன்றும் நாள் கண்ணன் மதுரத்தைப் பின்பற்றிப் போய்விட்டான். ஆனால் ராமாமிருதம் அதை உணரும் நிலையில





தகப்பனார் (விருந்தினரிடம்): "என்ன ஸார் பார்க்கிறீங்க? இதுதான் என் கடைக்குட்டி."

வீரா

இல்லே. சங்கிலியால் பிணைக்கப்பட்டு, சென்னைக்கு அழைத்து வரப்பட்ட அவர் அந்த இருபத்தி ஏழாம் நம்பர் அறையில் அடைக்கப்பட்டார்.

இனி அவர் ஆயுட்காலம் முழுதும் ஆஸ்பத்திரி வாசம்தான் என்ற முடிவுக்கு அநேகமாக வந்து விட்டார்கள். ஆண்டுகள் ஓடிக் கொண்டே இருந்தன.

அப்படிப்பட்ட ஒரு நிலையில்தான் டாக்டர் மோகனுக்கு அவரிடமிருந்து அழைப்பு வந்தது.

டாக்டர் மோகன் தம்முடன் இரு டாக்டர்களையும் திடகாத்திரமான இரண்டு ஆர்டர்லிகளையும் அழைத்துக் கொண்டு இருபத்தேழாம் நம்பர் அறையைத் திறக்கச் சொன்னார்.

ஒரு பக்கமாகப் போடப்பட்டிருந்த கட்டிலில் படுத்திருந்த ராமாமிருதம் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டு எழுந்து உட்கார்ந்தார்.

டாக்டர் மோகன் அவர் கண்களைக் கவனித்தார். அதில் முன்பு இருந்த வெறி இல்லே. எங்கேயும் அந்த வெறிகள் அலையவில்லே.

''குட்மார்னிங்.... டாக்டர் !'' என்றார் ராமாமிருதம்.

''குட்மார்னிங்!'' என்றார் மோகன். தம் செவிகளை அவரால் நம்ப முடியவில்லே. இத்தனை தெளிவாக அந்தப் பேஷண்ட் இதுவரையில் பேசியதே இல்லே.

'' உட்காருங்கள், டாக்டர் ! எனக்கு இப்போது ஒன்றும் இல்லே...ஐ ஆம் கம்ப்ளீட்லி ஆல் ரைட்!'' என்றார்.

டாக்டர் மற்றவர்களைப் பார்த்தார்.

''நீங்கள் நம்பமாட்டீர்கள்... என் பெயர் ராமாமிருதம்.... என் மனைவி வைதேகி.... என் ஒரே பெண்.... என்ன பார்க்கிறீர்கள்? நான் எப்படி என் மன நிலையை நிரூபிப்பது... சுப்பிரமண்ய புஜங்கம் சொல்லட்டுமா?''

டாக்டர் மோகன் கடல் மடை திறந்தாற் போன்ற இந்தப் பேச்சைக் கேட்டு அயர்ந்து பின்வாங்கினார்.

''பயப்படாதீர்கள்.... டாக்டர்... இது எழுபத்தைந்தாவது வருஷமா....? அந்தக் காலண்டர் அப்படித்தான் சொல்கிறது.... அப்படியானால், அப்படியானால்...நான் பத்து வருஷங்களாக இங்கு இருக்கிறேன்..மைகாட் டென் லாங் இயர்ஸ்.... என் பெண்.. மதுரம் என்றால் மதுரம்... புவர் கேர்ல்... ஒரு விபத்திலே போய்விட்டாள்....இத்தனை வருஷங்களாக உங்களுக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன், இல்லையா டாக்டர்.... ?''

மோகனுக்கு நிச்சயமாகத் தெரிந்தது. ராமாமிருதம் பூரண குணம் அடைந்துவிட்டார். சுய நினைவு பூரணமாகத் திரும்பி விட்டது. எப்படி இந்த அதிசயம் நடந்திருக்கக் கூடும்? மருந்துகளாலும் மனத் தத்துவ சிகிச்சைகளாலும் நடைபெறாத இந்த அற்புதமான மாற்றம் எப்படி இப்போது ஏற்பட்டிருக்கக் கூடும்?

''மிஸ்டர் ராமாமிருதம்... நீங்கள் சொன்னது அத்தனையும் ''கரெக்ட்''. ஆமாம்.... இவ்வளவு தெளிவாகப் பேச உங்களுக்கு எப்படித் தெரிந்தது ?...'' எனக் கேட்டார் டாக்டர்.

''என் மனைவி வைதேகி வந்திருந்தாள்...''

'' உங்கள் மனைவியா ?'' என்று கேட்ட டாக்டர் சட்டென்று எழுந்தார்.

'' நீங்கள் ரொம்பவும் பயப்படுகிறீர்கள், டாக்டர். உட்காருங்கள்.... உங்களுக்குத் தெரியாமல் பூட்டி யிருக்கும் இந்த அறைக்குள் அவள் எப்படி வருவாள்? என் கனவில்தான் ஸார் வந்தாள்..... தினமும் வருகிறாள்.... நேற்று என்னை ரொம்பவும் கோபித்துக் கொண்டுவிட்டாள். கண்ணன்—என் மாப்பிள்ளை ஸார் – வேண்டுமென்றேயா மரத்தில் மோதியிருப்பான் ? மதுரத்தின் மேல் அவனுக்கு உயிர் ஸார்!''

மோகன் மன நிறைவுடன் சொன்னார்: ''எனக்கு ரொம்பவும் திருப்தி மிஸ்டர் ராமாமிருதம். நீங்கள் பழைய நிலையை அடைந்தது இந்த ஆஸ்பத்திரிக்கே ஒரு பெருமை....!''

''நான்தான் ஸார் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். உங்கள் முகத்தில் இன்னும் கலவரம் போகவில்லே. நான் ரொம்பவும் மிருகத்தனமாக நடந்து கொண்டேனு? என் வைதேகி சொன்னாள்..... அவளையே நான் மதுரம்னு ஒரு நாள் நினைத்து விட்டேனும்.... பாசம் ஸார்..... எல்லையற்ற பாசம்..... கண் மூடித்தனமாக அவள் மேல் வைத்து விட்டேன். என் புத்தியையே இத்தனை நாள் மயக்கிவிட்டது.....''

'' நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்.. உங்களுக்கு உலவ வேண்டும் என்று தோன்றினுல் அதற்கும் ஏற்பாடு செய்கிறேன்.....''

''அதெல்லாம் வேண்டாம் டாக்டர்.... என் மனைவியையும் குழந்தைகளையும் உடனே வரவழையுங்கள்..... என் மனைவியை நான் உடனே அடையாளம் கண்டு கொள்வேன்.... நேற்று ராத்திரிகூட அவள் கனவில் வந்திருந்தாள். என் பிள்ளைகள்தான் எப்படி வளர்ந்திருக்கிறார்கள்.... கணேஷ்..குமார்... பாஸ்கர்.....''

''அது என் கடமை ஸார் ! மகிழ்ச்சியுடன் நானே செய்ய விரும்புகிற காரியம்...உடனே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன் '' என்றார் டாக்டர்.

தம் அறைக்குத் திரும்பிய மோகன் மற்ற டாக்டர்களுடன் கலந்து ஆலோசித்தார். அனுபவப்பட்ட ஒரு டாக்டர் மட்டும் ''தமக்கு இன்னும் நம்பிக்கையில்லே'' என்றார்.

டாக்டர் மோகன் தம் ரிகார்டுகளிலிருந்து ராமாமிருதத்தின் விலாசத்தைக் குறித்துக் கொண்டார். 'போனி'ல் கூப்பிட்டுச் சொல்வதைக் காட்டிலும் நேரில் போவது உசிதமாகப் பட்டது.

சில்விக்ரீட் உபயோகித்து

உங்கள் இல்லத்தை அலங்கரியுங்கள்

ஏசிசியின் வெள்ளை சிமெண்டு.

ஒரு கருத்து தெரிவியுங்கள். சுவரை அழகுப்படுத்தல். எழில் கொஞ்சும் பூத்தொட்டி டிசைன் அமைத்தல், உங்கள் வரவேற்பு அறையில் டெர்ரசோ தளவரிசை இடல் மற்றும் காங்க்ரீட் ஜாலி வேலை செய்தல். நீங்கள் விரும்பும் எவ்வித வண்ண வேலைக்கும் உகந்த ஏஸிஸியின் சில்விக்ரீட் வெள்ளை சிமெண்டு.

PIN CODE FOR FAST MAIL

உங்களுடைய தேவைகளுக்கு அணுகவும் :
அருகமைந்த சிமெண்ட் மார்க்கெட்டிங் டிவிஷன் ஆஃப் தி அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிட்.
அல்லது அவர்களுடைய விநியோகஸ்தர்கள்.

தி அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிட்

ஸ்னோஸெம், கலர்க்ரீட் முதலிய தயாரிப்புகளில் உபயோகப்படுத்தப்படும் மூலப்பொருள் சில்விக்ரீட்.



maa. ACC 2203 A-TAM.

வீட்டில் ஏதோ மங்கள காரியம் நடந்து கொண்டிருந்தது. வரிசை வரிசையாகச் சாப் பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

முன் அறையில் காத்திருந்த டாக்டர் மோகனைப் பார்க்க மூன்று பிள்ளைகளும் ஓடி வந்துவிட்டனர். மூத்தவன் கணேஷ்—டில்லி யில் நிதி அமைச்சகத்தில் உயர் அதிகாரி. அடுத்தவன் காப்டன் குமார் விமானப் படை யில் அதிகாரி... கடைசிப் பிள்ளை பாஸ்கர் அமெரிக்கக் கம்பெனி ஒன்றில் ஒரு பெரிய வேலையில் இருந்தான்.

''என்ன டாக்டர்! இப்போது எங்கள் அப்பாவுக்கு ஸீரியஸாக ஏதும் இல்லையே!'' என்று கேட்டான் கணேஷ், டாக்டரை உட் காரக்கூடச் சொல்லாமல்.

'என்ன பிள்ளைகள் இவர்கள்?.. நல்லதாக முதலில் ஏதும் தோன்றாதா?' என்று மனத் துக்குள் சலித்துக் கொண்டார் டாக்டர்.

மிஸ்டர் ராமாமிருதம் நல்ல நிலையை அடைந்ததை விவரித்தார் டாக்டர். செய்தி யைக் கேட்டு அவர்கள் மூவரும் வாயே திறக்க வில்லை. இப்படி ஒரு திருப்பம் அவர்கள் எதிர் பார்க்கவில்லையோ? தேவையற்றதோ?... கசப்பாக இருக்கிறதோ?

''அம்மா வந்து அவர் கனவில் சொன்ன ளாமா?'' என்று கேட்டான் பாஸ்கர் தன் பிரமையிலிருந்து விடுபட்டவனாக.

''ஆமாம். அப்படித்தான் ராமாமிருதம் சொல்றார்!'' என்றார் டாக்டர்.

''இம்பாஸிபிள் டாக்டர்.... அவள் போய் விட்டாள்..... ஹார்ட் அட்டாக்.... இன் றைக்குப் பதின்மூன்றும் நாள்.....'' என்றான் அவன்.

டாக்டர் அதிர்ந்து போனார். அப்படி யானால் ராமாமிருதத்தின் கனவில் வந்தது யார்? வைதேகியின் ஆவியா?.... ராமா மிருதத்தின் பிரமையா?.... ஆண்டவனின் அற்புதமா?.... அவர் படித்த படிப்பு விளக்க முடியாத ஒரு ரகசியம் அல்லவா இது.

இதை ராமாமிருதத்துக்கு எப்படித் தெரி விப்பது? அவர் தம் சுய நினைவு அடைந்தது இந்தப் பேரிடியைத் தாங்கிக்கொள்ளத்தானா?

''நான் சொல்வதைச் சற்றுக் கவனமாகக் கேளுங்கள். எந்தவிதமான அதிர்ச்சியையும் தாங்கிக் கொள்ளும் நிலையில் உங்கள் தந்தை இப்போது இல்லை. பூரித்து நிற்கும் பலூன் அவர் இப்போது. இந்தச் செய்தி அவரை ஊசியால் குத்துவது போல ஆகும். அதே சமயத்தில் அவரைத் தொடர்ந்து இங்கே அழைத்து வராமல் இருப்பதும் சாத்தியம் இல்லை. அவர் உங்களையெல்லாம் பார்க்கத் துடித்துக் கொண்டிருக்கிறார்... உங்களுக்கு இந்தப் பங்களாவைத் தவிர பக்கத்தில் ஏதா வது வேறு வீடு இருக்கிறதா?''

''இருக்கிறது. டாக்டர்.... காட்டாங் கொளத்தூரில் ஒரு வீடு.... இப்போது காலி யாக இருக்கிறது.''

''நாளைக்கே நீங்கள் — உங்கள் மனைவிக ளுடன் அங்கே போங்கள்..... உங்கள் குழந் தைகள் இங்கேயே இருக்கட்டும். ராமாமிரு தம் ரொம்பவும் கெட்டிக்காரர். எப்படி யாவது உண்மையைக் கிரகித்துவிடுவார். மந்தித்துப் போன மூளை இப்போது வெகு விரைவில் செயல்படும். பதினைந்து நாட்கள் அவருடன் பழகுங்கள். உங்கள் தாயார் வடக்கே காசி யாத்திரை போயிருப்பதாகச் சொல்லுங்கள். நான் தினமும் வருகிறேன். பக்குவமாக அவர் மனத்தைத் தயார் செய்து பின்னர் உண்மையை நானே அவரிடம் சொல் கிறேன். இதைத் தவிர வேறு வழி ஏதும் எனக்குப் புலப்படவில்லை.''

''அவரை எங்களுடன் வைத்துக் கொள் வதில் ஏதாவது ஆபத்து.... ரிஸ்க்— இருக் குமா, டாக்டர்...!'' என்று கேட்டான் பாஸ் கர். அவர் அவனை வெறுப்புடன் பார்த்தார்.

''நான் அவரைத் தயார் செய்து அழைத்து வருகிறேன்...'' என்றார்.

அவர்கள் அரை மனத்துடன் சம்மதித் தார்கள்.



''நீங்க கதையே எழுதிக் கொடுக்க வேண்டாம். என் கிட்டே ஒரு கதை இருக்கு. அதை நீங்க எழுதித் தந்ததாப் போட் டுண்டு படம் எடுத்துடு றேன். எதுக்குன்னு அப் புறம் ஏதாவது காப்பி ரைட் கேஸ், கீஸ் ஆச் சுன்னு?.... அதுக்குத் தான்!''

அன்று மாலை டாக்டர் அவரைக் காட் டாங்கொளத்தூருக்கு அழைத்துப் போனார். பெரிய பங்களாவில் ரிப்பேர் வேலை... அவர் மனைவி காசிக்குப் போயிருப்பது — பிள்ளைகள் மூவரும் தங்கள் மனைவிகளுடன் அவருக் காகக் காத்திருப்பது எல்லாம் விவரித்தார்.

வீட்டு வாசலில் மூன்று பிள்ளைகளும் தங்கள் மனைவிமார்களுடன் நின்று கொண் டிருந்தார்கள். ராமாமிருதம் காரிலிருந்து இறங்கினார்.

''இந்த வீடு நான் அறுபத்திரண்டிலே கட்டினேன். கிருகப் பிரவேசத்துக்கு சீப் மினிஸ்டர் கூட வந்திருந்தார்!'' என்றார்.

தம் மகன்களையும் அவர்கள் துணைகளை யும் ஏற இறங்கப் பார்த்தார் ராமாமிருதம். டாக்டர் அவர்களை அறிமுகப்படுத்த முன்வந் தார். ராமாமிருதம் கை அமர்த்தித் தடுத்தார்.

''கொஞ்சம் பொறுங்கள் .... லெட் மீ டிரை!.... என்னாலே கண்டுபிடிக்க முடி கிறதா பார்க்கிறேன்!''

ராமாமிருதம் ஒரு முறைக்கு இரண்டு முறை சுற்றிப் பார்த்தார். கணேஷின் மீது அவர் பார்வை பதிந்தது. ''யூ ஆர் கணேஷ்... நீ என்ன பெரிதாக மீசை வைத்துக் கொண் டாலும் உன் சப்பை மூக்கு உன்னைக் காட்டிக் கொடுத்து விட்டது!'' என்றார் அவர். கணேஷ் தலையைக் குனிந்து கொண்டான்.

ராமாமிருதம் திரும்பினார். ''யூ டர்ட்டி ஃபெல்லோ!... நகத்தைக் கடிக்கும் பழக்கம் இன்னும் உனக்குப் போகவில்லையே, பாஸ் கர்!'' என்றார். பாஸ்கர் சட்டென்று தன் கையை வெளியே எடுத்தான்.

''அப்போ நீ குமார்... பழைய விறைப்பு உனக்கு இன்னும் போகவில்லையே...! போலீஸா...? ஆர்மியா..?'' எனக் கேட்டார்.



'' ஞாபக மறதி என்பது மனித இயல்புதானே சார்! நான் என்ன தப்பு பண்ணினேன், எதற்கு என் மேல் எரிந்து விழுகிறீர்கள் ?''

''ஏர் ஃபோர்ஸ்... காப்டன்...'' என்றான் குமார் அதே விறைப்புடன்.

''குட்! குட்!'' என்றபடி உள்ளே நுழைந்தார் ராமாமிருதம்.

''அப்பாவுக்கு நமஸ்காரம் செய்யுங்கள்... உங்கள் மனைவிமார்களை அறிமுகப்படுத்தி வையுங்கள்!'' என்று டாக்டர் சொன்னார். அவர்கள் மரம் போல் நின்று கொண்டிருந்தார்கள்.

''கற்பகம் இந்த வீட்டின் மூத்த மருமகள்!'' என அறிமுகப்படுத்தினான் கணேஷ்.

கற்பகம் குனிந்து நமஸ்காரம் செய்தாள். அவள் குனிந்தபோதும் நிமிர்ந்த போதும் அவள் அணிந்திருந்த திருமாங்கல்யக் கொடியும் இதர நகைகளும் தொங்கித் தன் நிலையைத் திருப்பி அடைந்தன. பிறகு மற்ற மருமகள்களையும் அறிமுகப்படுத்தி வைத்தனர்.

''உம்... கண்ணன் மதுரம் இவர்களும் இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும்?'' எனப் பெருமூச்சு விட்டபடி உட்கார்ந்தார் ராமாமிருதம்.

''ஆமாம்... ஏண்டா பசங்களா....? உங்கள் குழந்தைகள் எங்கே? என் பேரன் பேத்தி....?''

''அவர்கள் எல்லோரும் ஊட்டியிலே 'போர்டிங்'லே படிக்கிறார்கள்... நானேகூட முதலில் கேட்டேன்!'' என் அவசரமாகச் சொன்னார் டாக்டர்.

''ஏம்மா! உங்களுக்கு உங்கள் குழந்தைகளைக்கூடப் பார்த்துக் கொள்ள முடியல்லியா?... காலம் அப்படி!.... அவர்களை ஒரு தரம் என் கண்ணில் காட்டப்பா! இந்தத் தாத்தா பார்க்கட்டும். நேத்து மாதிரி இருக்கிறது. இந்தப் பசங்கள் எல்லாம் நிக்கர் போட்டுக் கொண்டு.... காம்பௌண்ட்டில் விளையாடும். இன்றைக்கு இவர்களுக்குப் பசங்கள். நான் தாத்தா...'' எனச் சிரித்தார் ராமாமிருதம்.

அவர் மெதுவாக மாடிப் படிகளில் ஏறிப் போனார். அங்கேதான் அவருக்குத் தனி அறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாத்-ரூம் அட்டாச்ட்; ஓர் அகலமான கட்டில், டன்லப் பில்லோ, பெரிதாகப் புதிய தலையணைகள். பக்கத்தில் ஒரு சிறிய கப்போர்டு. அருகில் ஒரு டீப்பாய். அதனடியில் பாத் தட்டு. கைக்கு எட்டும் தூரத்தில் தண்ணீர் கூஜா. பையன்கள் ஒன்றும் குறை சொல்ல இடம் வைக்கவில்லை.

அறையைத் திருப்தியுடன் பார்த்துவிட்டு ராமாமிருதம் கட்டிலில் உட்கார்ந்தார்.

''ஏன் அம்மா, கற்பகம்! உன் மாமியார் என்றைக்கு ஊரிலிருந்து திரும்பி வருகிறாள்?''

அவள் பதில் பேசாமல் திருதிருவென்று விழித்தாள். கணேசன் அவசரம் அவசரமாக உதவிக்கு வந்தான்.

''அம்மாதானே அப்பா! இப்போ காசியில் இருக்கிறாள்.... நான் நேற்று கடிதம் போட்டு விட்டேன். அதிகம் போனால் பதினைந்து நாட்கள். நிச்சயம் அதற்குள் திரும்பி விடுவாள்.''

புறப்படுவதற்கு முன்பு டாக்டர் மீண்டும் பிள்ளைகளை எச்சரித்தார்: ''அவர் காதில் விழும்படி உங்கள் தாயாரைப் பற்றியோ வேறு குடும்ப விஷயமாகவோ இன்னும் பத்து நாட்களுக்குப் பேசாதீர்கள். யாரையும் -- எவ்வளவுதான் நெருங்கிய சொந்தக்காரர்களாயிருந்தாலும் நண்பராக இருந்தாலும் அவருடன் பேச அனுமதிக்காதீர்கள்!''

மறுநாள் காலை. டாக்டர் ஆஸ்பத்திரிக்குப் புறப்படும் சமயம். ஃபோன் வந்தது: ''காலையில் ஆகாரம் கொடுக்கப் போனோம். என்னைக் கொல்ல வந்துவிட்டார். 'டேய், மாப்பிள்ளை...நீதானேடா என் பெண்ணைக் கொன்னே?' என்று கழுத்தைப் பிடிக்க வந்தார். எப்படியோ வெளியில் ஓடி வந்து கதவையும் பூட்டிவிட்டோம்...சீக்கிரம் வாருங்கள்!''

டாக்டர் மோகன் ஆஸ்பத்திரியைக் கூப்பிட்டு 'வானை'யும் ஆட்களையும் நேராகக் காட்டான்கொளத்தூருக்கு அனுப்பச் சொன்னார். தாமும் அங்கு உடனே விரைந்தார்.

ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்த அவர் திடுக்கிட்டுப் போனார். தலையெல்லாம் கலைந்து கண்களெல்லாம் சிவக்க ராமாமிருதம் எங்கேயோ பார்த்தபடி நின்று கொண்டிருந்தார். கைகளைத் திறந்து திறந்து மூடினார். சட்டென்று அவர் பார்வை டாக்டரின் மேல் விழுந்தது.

''டேய் ! இங்கேதானேடா இருக்கிறாய்? என் மதுரத்தைக் கொன்னவன் நீதானே !'' என்று பாய்ந்து வந்தவர் ஜன்னலையே பெயர்த்து எடுத்துவிடுவது போல் ஆட்டினார்.

ஆஸ்பத்திரி வான் வந்தது. முரட்டு ஆட்கள் நான்கு பேர் இறங்கினர். ராமாமிருதம் திமிறினார். அவர்கள் விடவில்லை. கைகளைப் பின்புறமாக வளைத்துக் கட்டிப் பலவந்தமாக வானில் ஏற்றினார்கள். ஊரே வேடிக்கை பார்த்தது.

'' ஸார்! இந்த மாதிரி விஷப் பரீட்சை இனி வேண்டாம்.... அவர் ஆயுசு முழுதும் ஆஸ்பத்திரியில் இருக்கட்டும்... என்ன செலவு ஆனாலும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்'' என்றான் கணேஷ்.

'' அது எங்கள் கடமை!'' என்றான் பாஸ்கர். டாக்டர் மௌனமாக விடைபெற்றார்.

இருபத்தேழாம் நம்பர் அறையில் ராமாமிருதத்தை அடைத்தார்கள்.

மறு நாள். தம் 'ரவுண்டு'களை முடித்துக் கொண்ட மோகன் இருபத்தேழாம் அறைப்



பக்கம் போனார். ராமாமிருதம் தெளிவாகக் கதவருகே நின்று கொண்டிருந்தார்.

''எக்ஸ்கியூஸ் மீ! டாக்டர் மோகன்!'' என அழைத்தார் ராமாமிருதம்.

''எஸ்?'' என்று வினவினார் டாக்டர்.

''என் புத்தி மீண்டும் பேதலித்துவிட்டது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?''

மோகன் தலையை மேலும் கீழும் ஆட்டினார்.

''யூ ஆர் ராங், டாக்டர்.... நான் இந்த அறைக்குத் திரும்பி வர விரும்பினேன்.... அப்படி நான் நடந்திராவிட்டால் இங்கே திரும்பக் கொண்டு வருவீர்களா?'' எனக் கேட்டார் ராமாமிருதம்.

'' வாட்....? நீங்கள் இங்கு திரும்ப வர ஆசைப்பட்டீர்களா? எதற்காக?'' —மோகன் குரலில் தெரிந்தது வியப்பா? கோபமா?

'' என் மனைவிக்காக நான் அழ வேண்டாமா? அவளைக் கடைசியாக நான் இங்கே தானே பார்த்தேன்?'' ராமாமிருதத்தின் குரல் கம்மியது.

''வாட் நான்சென்ஸ்.... உங்கள் மனைவி காசிக்கு....''

''இல்லை டாக்டர்.... காசிக்குப் போகவில்லை. கைலாசத்துக்கே போய்விட்டாள். இன்று பதினேழு நாட்கள் ஆகின்றன.''

''ஸாரி!'' என்றார் டாக்டர் கதவருகே வந்து நின்று.

''ஆமாம், டாக்டர்.... ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையே எத்தனையோ இரகசியங்கள் உண்டு, இல்லையா? அவர்களிடையே பிறந்து, அவர்கள் உள்ளவரை இருந்து, அவர்களுடனேயே மடியும் அழகான நினைவுகள் அவை. அப்படி எங்களுக்குள் இருந்தது. என் மூத்த மருமகள் கற்பகம் நமஸ்கரித்தபோது அவள் திருமாங்கல்யக் கொடியில் இருந்த மகாலட்சுமி டாலர் எங்கள் குடும்பச் சொத்து. அது வைதேகியின் தாலியில் கோக்கப்பட்டிருந்தது. என் தாயார் மறைந்த பிறகுதான் வைதேகி அதைப் போட்டுக் கொண்டாள். நான் உயிருடன் இருக்கும்போது அவள் அதைக் கழற்றச் சம்மதித்திருக்கமாட்டாள்.... அப்படியானால் என் வைதேகி....என் வைதேகி....!''

ராமாமிருதம் உடல் குலுங்க அழுதார். அந்தக் கதறல் டாக்டர் இருதயத்தைப் பிளந்தது. ''யாரங்கே? இந்தக் கதவை உடனே திறவுங்கள்!'' எனக் கூவினார்.

கதவுகள் திறக்கப்பட்டன. ஓடிப் போய் ''ப்ளீஸ்... அமைதி அடையுங்கள்.... டேக் இட் ஈஸி....!'' என்று கெஞ்சினார் டாக்டர்.

இருந்தும்கூட ராமாமிருதத்தின் விம்மல் அடங்கப் பத்து நிமிஷங்கள் பிடித்தன.

''இருந்தாலும்கூட நான் அவர்களை ஒன்றும் கேட்கவில்லை. எட்டு மணிக்கு நீங்கள் கொடுத்த மாத்திரையைக் கையில் எடுத்தேன். கை தடுமாறியது. மாத்திரை கீழே விழுந்தது. குனிந்து தரையில் தேடினேன். ரொட்டி மடித்து வந்த பழைய பேப்பர் கிடந்தது. அற்ப ஆசை! பேப்பர் படித்து எத்தனை வருஷங்கள் ஆகிவிட்டன. அந்தப் பழையபேப்பரை எடுத்துப் பார்த்தேன்.என் வைதேகியின் படம் அதில் போடப்பட்டிருந்தது. அவள் பிறந்த தேதியும் இறந்த தேதியும்கூடக் குறிப்பிடப்பட்டிருந்தன. கீழே அவளுக்காகத் துக்கம் கொண்டாடும் மிஸ்டர் அண்டு மிஸஸ் கணேஷ், மிஸ்டர் அண்டு மிஸஸ் குமார்.... அப்புறம் மிஸ்டர் அண்டு மிஸஸ் பாஸ்கர்.... இந்தப் பைத்தியத்துக்கு அதில் கூட இடமில்லை.'' அவர் மீண்டும் விம்ம ஆரம்பித்தார்.

'' நீங்கள் பெரியவர்கள். அன்னையை இழந்து நிற்கும் அவர்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டியவர். நீங்கள் கலங்கினால் எப்படி?''

'' நான் அந்த மாத்திரையைச் சாப்பிடவில்லை, டாக்டர்... ஒரு நாள் சாப்பிடாவிட்டால் என்ன ஆகப் போகிறது என்று நினைத்தேன். அவர்கள் மேல் எனக்குக் கோபம் இல்லை. என் நன்மையைக் கருதித்தான் என்னிடம் சொல்லவில்லை என்பது எனக்குத் தெரியும். மல்லாந்து படுத்தவன் அப்படியே உறங்கிப் போனேன். திடீரென்று விழித்தபோது எங்கோ மணி பதினொன்று அடித்தது. கீழே பேச்சுக் குரல் கேட்டது. மாடிப் படி இறங்க யத்தனித்தேன்.... அவர்கள் பேசியது தெளிவாக விழுந்தது.

''உம்... குடும்பத்தில் மூத்த பிள்ளையாகப் பிறந்தால் எப்போதும் இந்தச் சிரமம்தான், நீங்கள் எல்லாம் ஏதோ காரணம் காட்டித் தட்டிக் கழித்து விட்டீர்கள்...! நான் என்ன செய்வேன்? நான்தான் அவரை வைத்துக் காப்பாற்றியாக வேண்டும். கற்பகம் நடுங்கிக் கொண்டிருக்கிறாள். அப்பாவைப்பார்த்தாலே பயப்படுகிறாள். சே சே!... அவருக்கு ஏன் இப்போது—அதுவும் அம்மா போன பிறகு குணமாக வேண்டும்? அப்படியே இருந்திருந்தால் வருஷம் இரண்டாயிரமோ, மூவாயிரமோ அழுதுவிட்டு நிம்மதியாக இருக்கலாமே!'' என அலுத்துக் கொண்டான் கணேஷ்.


''அத்தனையும் கேட்டுக் கொண்டு நான் சிலைபோல் நின்று கொண்டிருந்தேன். எப்படித் திரும்பி என் படுக்கையில் நிதானமாக வந்து படுத்தேன் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. என்னை அவர்கள் அப்பாவாக நினைக்கவில்லை. பத்து வருஷப் பைத்தியமாக — வேண்டாத சுமையாக நினைக்கிறார்கள்.

''நியாயம்தான் டாக்டர்! நான் என்ன செய்தேன், அவர்களுக்கு? அவர்களாகப் படித்தார்கள். அவர்களாக முன்னேறினார்கள். நல்ல வேலையாகத் தேடிக் கொண்டார்கள். அழகான குடும்பத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நல்ல 'போஸிஷன்' இருக்கிறது. எதற்காக அவர்கள் என்னிடம் அன்பு காட்ட வேண்டும்? நன்றி செலுத்த வேண்டும்?

''நான் செய்யக் கூடியது ஒன்று உண்டு. டாக்டர்...அவர்களுக்குத் தொல்லை இல்லாமல் — அவர்கள் விருப்பப்படி — நான் மீண்டும் ஒரு நோயாளியாக இங்கே திரும்ப வேண்டும்... இந்த இருபத்தேழாம் அறையை எனக்காகவே ஒதுக்கி விடுங்கள், டாக்டர்!'' என்றார் ராமாமிருதம் கையெடுத்துக் கும்பிட்டபடி.

மோகன் தம் கண்களில் துளித்த நீரைச் சுண்டி எறிந்தார். மேலே ஒன்றும் பேசத் தோன்றாமல் பிரமை பிடித்தவர் மாதிரி இருந்தார்.

''உங்களை மணந்த பின் உங்கள் கஷ்டத்தில் நானும் சம பங்கு கொள்வேன்!''
''எனக்கு ஒரு கஷ்டமும் இல்லையே!''
''திருமணத்துக்குப் பின் என்றுதானே சொன்னேன்!''
- சம்பத்குமார்



பொன்னியின் புதல்வர்

சுந்தா



55. பாரதி விவாதம்

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா"-அவன் பேரைமட்டும் சொன்னாலே போதுமேயடா

நேரில் காணாமலே பாரதியாரின் சீடரானவர் கல்கி; நேரில் கண்டு அன்னாரின் முதற் சீடரானவர் வ.ரா. இருவருமே பாரதியாரின் பாடல்களையும், அவற்றின் மூலம் மனத்தில் ஏற்றிக் கொண்ட தேச பக்திக் கனலையும் நிலையாகப் போற்றி, அவற்றை வாழ்நாள் முழுவதும் வெகுவாகப் பரப்பியவர்கள். இத்தகைய உத்தமச் சீடர்கள் இருவரும் தமக்குப் பொதுவான குருநாதர் சம்பந்தமாய் ஒரு சமயத்தில் பொதுவிலே சொற்போர் புரிய நேர்ந்தது என்றால், அதை என்னென்று சொல்வது!

இலக்கிய வட்டாரங்களில் மிக்க பரபரப்பை ஊட்டிய அந்த விவாதம் எப்படி மூண்டு நடந்தது என்பதைக் கட்டாயம் இந்த வரலாற்றில் கவனிக்கத் தான் வேண்டும். ஆனால் அதை மட்டுமே அப்படியே கவனிப்பது, கல்கிக்கும் வ. ரா.வுக்கும் இடையே தாற்காலிகமாய் ஏற்பட்ட ஒரு பிணக்கைத் தனியாக எடுத்துக் காட்டுவதாகிவிடும். ஆகவே, பரஸ்பர அன்பையும் ஆதரவையும் மதிப்பையும் அடிப்படையாய்க் கொண்டு, அவர்களிடையே முன்னும் பின்னும் நிலவிய நட்புறவுடன் பொருத்திய விதத்தில் அதைக் கவனிப்போம்.

''விமலா'' என்ற கல்கியின் முதல் நாவலை வ. ரா. வெளியிட்டு அவருக்கு எப்படி ஊக்கம் ஊட்டினார் என்பதையும், அதற்குக் கல்கி நெடுகிலும் நன்றி கொண்டிருந்து, வ. ரா. மணி மலரில் தமது புகழ் ஓங்கியிருந்த காலத்தில் வெளியிட்டார் என்பதையும் முன்னொரு அத்தியாயத்தில் பார்த்தோம். இன்னொரு அத்தியாயத்தில், கல்கியின் ''சாரதையின் தந்திரம்'' கதைக் கொத்துக்கான முன்னுரையிலிருந்து, சில கண்டன வாக்கியங்களை விலக்கி விடும்படி, எப்படி ராஜாஜியை வ.ரா. வற்புறுத்தினார் என்பதையும் பார்த்தோம்.

ஆனந்த விகடனின் மெய்யாசிரியராய் அமர்ந்த பிறகு, கல்கி, தமது பழைய நண்பர்கள் சிலரைக் கதை கட்டுரைகள் எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொண்டது போல், வ. ரா.வையும் கேட்டுக்கொண்டார். அதற்கு இணங்க வ. ரா. அனுப்பிய ''தோழன் கொத்தவால் சாஸ்திரி'' என்ற கட்டுரையை 20—7—33 விகடன் இதழில் ''சில காலமாக அலுத்து ஓய்ந்திருந்த தமிழ்ப் புலி ஒன்று கிளம்பி யிருக்கிறது'' என்ற அறிமுகக் குறிப்புடன் கல்கி வெளியிட்டார். அதைத் தொடர்ந்து கொஞ்சம் எழுதிய வ. ரா. தமது கட்டுரைகளை ''எடிட்'' செய்யாதபடி—அதாவது திருத்தாதபடியும் வாக்கியங்களை விலக்காதபடியும்—அப்படியே போட வேண்டும் என்று நிபந்தனை விதித்தாராம். இவ்வித நிபந்தனையை எந்தப் பத்திரிகாசிரியரும் ஏற்க மாட்டார்; வ.ரா.வே வெவ்வேறு பத்திரிகைகளின் ஆசிரியராய் இருந்தபோதும் ஏற்றிருக்க மாட்டார். ஆகவே, வ.ரா.வின் நிபந்தனை, மேலாவில் வாசன்வரை தாக்கலாகியும் ஏற்கப்படவில்லை. அவர் மனத்தாங்கல் கொண்டு, விகடனுக்கு எழுதுவதை நிறுத்திக் கொண்டார்.

அதற்குச் சிறிது காலத்துக்குப் பிறகு அப்போது இளைஞர்களா யிருந்த பிரபல எழுத்தாளர்கள் சிலர், வளர்ந்துகொண்டிருந்த கல்கியின் எழுத்துப் புகழைக் களங்கப் படுத்தும் விதத்தில், அவருடைய ''தழுவல்'' கதைகள் சிலவற்றைச் சுட்டிக் காட்டிப் பேசிக்கொண்டும், அதுபற்றிக் கட்டுரைகள் எழுதிப் பத்திரிகைகளில் வெளியிட்டுக் கொண்டும் இருந்தார்கள். அவர்களுடன் வ. ரா.வும் சம்பந்தப்பட்டிருந்தார். (இது பற்றிய தகவல்களைப் பல ஆண்டுகளுக்குப் பிறகும், 1965ல் வெளியான பி. எஸ். ராமையா மணி விழா மலரில், சங்கு சுப்ரமண்யன், ''மூவிலை வேல்'' என்ற கட்டுரையில் விவரித்து எழுதினார்.)

கிட்டத்தட்ட அதே சமயத்தில் அதாவது 1935 செப்டம்பர் மாதத்தில், தினமணி பத்திரிகையின் ஆண்டு அநுபந்தமாக ''பாரதி மலர்'' ஒன்று வெளியாயிற்று. அதில், ''நெல்லைநேசன்'' எனப் புனைபெயர் பூண்ட ஒரு தமிழ் அறிஞரின் ''வீர முரசு'' என்ற கட்டுரை சிறப்பிடம் கொண்டிருந்தது. பாரதியாரின் கவிதை பற்றிய அந்தக் கட்டுரையின் இறுதியில், ''பாரதியார் ஒரு நல்ல கவி; மகா கவி அல்லர்'' என்று ''நெல்லைநேசன்'' எழுதியிருந்தார். அந்தக் கூற்றை ஆட்சேபித்து, இலக்கிய இரட்டையர்களான ந. பிச்சமூர்த்தியும், கு. ப. ராஜகோபாலனும் எழுதிய கடிதம் ஒன்று, சில நாட்களுக்குப் பிறகு தினமணி நாளிதழில் வெளியாயிற்று. அதில் அவர்கள் தமது கட்சிக்கு ஆதரவாகச் சில மாதங்களுக்கு முன்னால் காரைக்குடி பாரதி விழாவில் வ. ரா. நிகழ்த்திய உரையிலிருந்து சில வாக்கியங்களை மேற்கோள் காட்டியிருந்தார்கள்.

அதை அடுத்து ஆனந்தவிகடன் 3—11—35 இதழில் ஒரு கடிதமும், அதன் அடியில் ஆசிரியரின் பதிலும் வெளியாயின:

ஐயா, சமீபத்தில் ஒரு தினசரிப் பத்திரிகையில் பிரசுரமான ஒரு கடிதத்தில் பின் வரும் விவரம் வெளியாகியிருக்கிறது:

''உதாரணமாக,.... காரைக்குடியில் ஒரு சமயம் பிரசங்கம் செய்தபோது, 'ஆங்கிலத்தில் கவிசிரேஷ்டர்கள் எனக் கருதப்படும் ஷெல்லியைப் படித்திருக்கிறேன்; ஷேக்ஸ்பியரைப் படித்திருக்கிறேன். இந்தியாவில் (நோபல்) பரிசு பெற்ற கவி ரவீந்திரநாத் தாகூரின் காவியங்களைப் படித்திருக்கிறேன். ஆனால் இவர்களுடைய புத்தகங்கள் யாவும் சேர்ந்தால்கூட பாரதியாரின் ஒரு வரிக்குச் சமமாகாது' என்று பேசியிருக்கிறார்.''

மேலே கண்ட அபிப்பிராயம் சரியானதல்லவென்று எனக்குத் தோன்றுகிறது. தங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டால் நலமாயிருக்கும்.


இப்படிக்கு, இலக்கிய மாணுக்கன்

[மேற்கண்டவாறு பேசியதாகச் சொல்லப்படுபவரின் பெயரும் கடிதத்தில் இருந்தது. பெயரை வேண்டுமென்றே எடுத்துவிட்டேன். ஏனெனில் அவ்வாறு அவர் பேசியிருக்கக் கூடும் என்று நான் நம்புவதற்கில்லை. மேற்படி அபிப்பிராயம் யாருடைய பெயருடன் வெளியிடப்பட்டாலும் அது அவரை அவமானப்படுத்துவதாகும் என்றே நினைக்கிறேன்.

மேற்கண்ட அபிப்பிராயத்தை உண்மையாகவே யாராவது வெளியிட்டிருந்தால், அவருக்கு இலக்கியம், கவிதை ஆகியவைகளைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்பது வெளிப்படை. அவர் நிரட்சரக் குட்சியோ என்று சந்தேகிப்பதற்குக் கூட இடமுண்டு. அவர் ஷெல்லியையும் தாகூரையும் ஷேக்ஸ்பியரையும் படித்திருப்பார் என்பது நம்பத்தக்கதல்ல. ஒருவேளை படித்திருந்தால் ஒரு வரிகூட அர்த்தமாகாமலே படித்திருக்க வேண்டும். அவர் பாரதியின் கவிதையைப் படித்து அநுபவித்தார் என்பதும் சந்தேகத்துக்கிடமேயாகும்.

புதல்வர்





★ பாரதி மண்டபத்தில் முதலாவதாக நடந்த பாரதி விழாவுக்கு வ. ரா. வைத் தலைமை தாங்கச் செய்தார் கல்கி.

★ ''முதல் எழுத்தாளர்'' வ. ரா., பாரதியின் ''முதல் சீடர்''.

பாரதியைப் போற்றுவதில் நான் யாருக்கும் பின்வாங்கியவன் அல்ல. ஆனால் தேசாபிமானமும், பாஷாபிமானமும் பகுத்தறிவை மறைத்துவிட இடம் கொடுக்கக் கூடாது. பாரதியை ஷெல்லியுடன் ஒப்பிடலாம்; ஆனால் ஷேக்ஸ்பியருடனும் தாகூருடனும் ஒப்பிடுதல்கூடச் சரியல்ல. வால்மீகி, திருவள்ளுவர், காளிதாஸர், கம்பர், ஷேக்ஸ்பியர், தாகூர் ஆகியவர்கள், நீண்ட காலத்துக்கு ஒருமுறையே தோன்றி உலகத்துக்கே பொதுவாய் விளங்கும் மகா கவிகள். ஷெல்லி, பாரதி போன்றவர்கள் அந்தந்தத் தேசத்துக்கே சிறப்பாக உரியவர்கள்.

இலக்கிய ஆராய்ச்சியும் கவிதை உணர்ச்சியும் சொற்ப அளவில் உள்ளவர்களுக்குக்கூட இவ்விஷயத்தில் சந்தேகம் ஏற்படக் காரணமில்லை. — விகடன்.]

இது வெளியானபோது வ. ரா. இலங்கையில் இருந்தார், ''வீரகேசரி'' ஆசிரியராக. அங்கிருந்து அவர் ''பாரதியும் இலக்கிய மதிப்புரையும்'' என்ற தலைப்புடன் எழுதிய கட்டுரை ஒன்று அதே ஆண்டு நவம்பர் 20ம் தேதிய ''சுதேசமித்திரன்'' இதழில் வெளியாயிற்று. அதற்குக் கல்கியின் பதில்—கட்டுரை ஒன்று அதே பத்திரிகையின் டிசம்பர் 7ந் தேதி இதழில் வந்தது. அதற்கு மறுப்பாகவும் முடிவுரையாகவும், மீண்டும் வ. ரா.வின் கட்டுரை ஒன்று அம்மாத 14ந் தேதிய இதழில் பிரசுரமாயிற்று.

அந்த மூன்று கட்டுரைகளையும் சி. சு. செல்லப்பா தேடி எடுத்து, தமது ''எழுத்து'' பத்திரிகையின் 1959 கடைசி மூன்று மாத இதழ்களில் வெளியிட்டார். இவற்றை இங்கே பயன்படுத்திக் கொண்டு, சுருக்கமாகவும், மொத்த நோக்காகவும், அந்தச் சர்ச்சையைப் பார்ப்போம்.

ஆனந்த விகடனில் பெயர் நீக்கிக் குறிப்பிடப்பட்டவர் தாம்தான் என்று வ. ரா. புலப்படுத்திக் கொண்டு, ''அன்பர் ரா. கி. என்னை எல்லை கடந்து திட்டி யிருக்கிறார்'' என்றார்.

அவருடைய வசவு எனக்கு வாழ்த்தாகும். ஏன், என்னுடைய பெயர் தமிழ் நாட்டில் அதிகமாக அடிபடாத காலத்தில், 'ஏட்டிக்குப் போட்டி' என்ற நகைச்சுவையும் காவிய ரஸமும் அபரிமிதமாக ஓடும் நூலை எழுதி, முகவுரையில் தம்மை முன்னுக்குக் கொண்டு வர அன்பும் ஊக்கமும் காட்டிய மூவருள் அடியேனும் ஒருவன் என்று என்னைப் பெருமைப்படுத்திப் பேசும் தைரியமும் அன்பும் அவருக்கு இருந்தபோது, நான் அதைத்தான் எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பேன்... அப்போது அவர் என்னைப் பற்றி என்ன எண்ணம் கொண்டிருந்தாரோ அதுதான் அவருடைய அந்தராத்மாவில் பக்குவமாகப் பதிந்து கிடக்கும் ஆணிவேர் ஆகும்.

அத்துடன் முன்பு, ''தினமணி'' மலரில் எழுதிய நெல்லை நேசன்தான், ஆனந்த விகடனில் ''இலக்கிய மாணாக்கன்'' என்ற மறுபெயருடன் எழுதியவர் என வ.ரா. தவறாக நினைத்துக்கொண்டு, ''இரண்டு பூனைகள் அடித்துக் கொண்டு, குரங்கினுடைய மத்தியஸ்தத்தைக் கோரினது போல், ஆனந்தவிகடன் ஆசிரியருக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதி அவருடைய தீர்ப்பை வேண்டினார்'' எனச் சொன்னார்.

இவை இரண்டுக்கும் கல்கியின் பதில்:

நம்முடைய பழைய சிநேகத்தையும், தங்களிடம் எனக்கு இருந்த மதிப்பையும் நினைவூட்டி, இப்போது தங்கள் மேல் நான் வசவுகளைப் பொழிந்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது ஓர் அபாண்டமான பழி. தங்களிடம் எனக்கு ஏற்பட்டிருந்த சிநேகமும் மதிப்பும் சொந்த முறையில் அல்லாமல் இலக்கிய சம்பந்தமாகவே ஏற்பட்டவை. அவை எப்போதும் குறையவே இல்லை. உண்மையில் இலக்கிய சம்பந்தமான மதிப்புக்களில் வேறு காரணங்களினால் ஏற்படும் விருப்பு வெறுப்புக்களைப் புகுத்தும் வழக்கம் என்னிடம் கிடையாது. நடுவில் கொஞ்ச நாட்கள் தாங்களும் தங்கள் சகாக்களும் என்னுடைய எழுத்துத் திறமையைப் பாதாளத்தில் ஆழ்த்தியபோதுகூட நான் சிரித்துக்கொண்டுதான் இருந்தேன். தமிழில் தோன்றியிருக்கும், தோன்றி வரும் எழுத்தாளர்களைப் பற்றி நான் இதுவரை ஒரு வார்த்தையேனும் குறைவாகச் சொன்னதில்லை. அதற்கு எனக்குச் சந்தர்ப்பங்கள் நிரம்ப இருந்தன. ஆனால் அவைகளை நான் பயன்படுத்திக் கொள்ளவில்லை. கூடுமான போதெல்லாம் நன்மொழிகளே கூறி வந்திருக்கிறேன்.

அப்படி இருக்க இத்தனை நாள் கழித்துத் தங்கள் மேல் நான் வசவுகளைப் பொழிய எவ்வித முகாந்திரமும் இல்லை. எதை நீங்கள் வசவு என்று குறிப்பிடுகிறீர்களோ, அதுவே எனக்குத் தெரியவில்லை. தாங்கள் வெளியிட்டதாகப் பிரசுரமான ஓர் அபிப்பிராயத்தை நான் கடுமையான மொழிகளால் கண்டித்தது உண்மைதான். தாங்கள் அவ்வளவு அபத்தமான அபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பீர்கள் என்று நம்ப முடியாதபடியாலும், இதில் விஷயம் முக்கியமே தவிர ஆசாமிகள் முக்கியமில்லை யாதலாலும், தங்களுடைய பெயரைக் குறிப்பிடாமல் விட்டிருந்தேன். ஆனால் இந்த விவாதத்தில் தாங்கள் விஷயத்தை விட ஆசாமிகளை முக்கியமென்று கருதியிருக்கிறீர்கள். விவாதத்துக்குச் சம்பந்தமில்லாத நெல்லை நேசனைக்கூட அகாரணமாய் இழுத்திருக்கிறீர்கள்.

வேருருவரின் கடிதத்தை ஆதாரமின்றி அவர் தலையில் சுமத்தியிருக்கிறீர்கள்.

ஆகவே, ''பாரதியார் மகா கவியா அல்லவா?'' என்ற விவாதத்தைத் தாம் எழுப்பவில்லை என்று கல்கி சொன்னார். அதை எழுப்பிய நெல்லைநேசனிடமே விவாதித்து முடிவு செய்து கொள்ளுமாறு வ. ரா.வைக் கேட்டுக்கொண்டார்.

இதற்கு எதிராக வ. ரா. கேட்ட கேள்விகள்: ''தேசக் கவி, உலகக் கவி என்று புதிய 'செட்டு'களை ஜோடித்துக் கொண்டு வந்து சபையிலே அன்பர் ரா. கி. நிறுத்திவிட, மகா கவியா அல்லவா என்பதை நானும் நெல்லைநேசனும் தனித்துத் தீர்த்துக் கொள்ள வேண்டுமா? முடிவு இதுவானால் அன்பர் ரா.கி இதை ஆ. வி. யில் வரைந்திருந்த குட்டி விமர்சனத்தில் குறிப்பிட்டிருக்கலாமே?

தமது கட்டுரையின் இறுதியில் கல்கி, தாம் சம்பந்தப்பட்டதான பிரச்னைக்கு மட்டும் தமது கருத்து என்ன என்பதைத் தொகைப்படுத்திச் சொன்னார்:

என் இதயத்தில் பாரதிக்கு எத்தகைய இடம் உண்டென்று தங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்...

ஷேக்ஸ்பியர், தாகூர் முதலியவர்களிடம் எனக்குப் பக்தி உண்டு. ஆனால் பாரதியாரிடம்தான் எனக்குப் பிரேமை உண்டு. நான் பிறந்து வளர்ந்த ஜில்லாவில் ஓடும் காவிரி நதியிடம் எனக்கிருக்கும் பிரியம் அளவில் அடங்காதது. ஆனால் அந்தப் பிரியம் என்னுடைய திருஷ்டியை மறைத்துவிடுவதில்லை. காவிரி கங்கையை விடப் பெரியது என்று ஒரு நாளும் சொல்ல மாட்டேன்.

இத்துடன், வ. ரா.வின் இறுதி வரிகளையும் பார்ப்போம்:

காவேரி கங்கையை விடப் பெரியது என்று ஒருநாளும் சொல்லமுற்படேன் என்று அன்பர் ரா.கி.தமது கட்டுரையை முடிக்கிறார். இவரை யாராவது கட்டாயப் படுத்தினார்களா?...

பாரதியார் வெகு காலத்துக்கு ஒருமுறை தோன்றும் கவி என்று நான் விமர்சனத்தின் மூலமாக ருசுப்படுத்த முயலுவேன். சிறிது காலம் செல்லும்...

இத்துடன் வ. ரா.வுக்கும் கல்கிக்கும் இடையே சர்ச்சை நின்று போயிற்று. ஆனால் பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி), பி. எஸ். ராமையா, இளங்கோவன், கு.ப.ரா., புதுமைப்பித்தன் ஆகியோர், வ.ரா.வின் கட்சிக்கு ஆதரவாய் எழுதிய கட்டுரைகள், சுதேசமித்திரனிலும், தினமணியிலும் வெளியாயின. சிட்டியும் கு. ப. ரா.வும் எழுதிய கட்டுரைகள், ''கண்ணன் – என் கவி'' என்ற புத்தகத்தில் தொகுக்கப்பெற்றன. அந்த விவாதம் பற்றிய விவரத்தை, 1969ல் வெளியான, ''சிறிது வெளிச்சம்''என்ற, கு.ப.ரா.வின் கதைகளும், கவிதைகளும் அடங்கிய நூலின் முன்னுரையில், சிட்டி சுருக்கமாய்க் கொடுத்துள்ளார்.

பாரதியாருக்கு எவ்வித அடைமொழியும் வேண்டியதில்லை. ஆயினும் பேசும் போதோ எழுதும்போதோ, ''தேசிய கவி'', ''மகா கவி'' அல்லது இரண்டையும் சேர்த்து ''தேசிய மகா கவி'' எனப் பலரும் குறிப்பிடுகிறார்கள். கல்கியும் இப்படியே பல இடங்களிலும் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அந்த விவாதத்துக்குப் பிறகுதான் அவர் யோசித்து மனம் திருந்தி, ''மகா கவி'' என்ற அடைமொழியைப் பாரதியாருக்குக் கொடுக்கலானார் என்று யாரேனும் நினைத்தால் அது தவறு. முன்பே கொடுத்ததுண்டு. உதாரணமாக அவர் 1931ல் எழுதி, வ. ரா. குறிப்பிட்ட அதே ''ஏட்டிக்குப் போட்டி'' நூலில்

அடுத்த இதழில்

புதுமைப் புகார்கள்!

இலக்கியத்தில் மட்டும்தான் புதுமை புக வேண்டுமா என்ன? இன்றைய சூழ்நிலைக்கு ஏற்பப் புகார்களிலும் புதுமை ஊடுருவிச் சிரிக்க வைக்கிறது!



எதையும் தாங்கும் இதயம்

மனத்தளவில் மட்டுமின்றிச் சரீர ரீதியாகவும் உங்கள் இதயம் எதையும், தாங்குவதாக இருக்க வேண்டுமானால் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?





கழுகுகள் - பரிசுக்கதை

சிவசங்கரி

இடம் பெற்ற ''பாரதியாரின் நகைச் சுவை'' என்பதில் — ''இக்கட்டுரையைப் படிக்கும் அன்பர்களின் உள்ளத்தில் நமது மகா கவியின் நூல்களைப் படிக்கும் ஆர்வம் ஒருசிறிதேனும் உண்டாகியிருக்குமாயின், என் முயற்சி பயன் தந்தது என்று எண்ணிப் பெரு மகிழ்ச்சி அடைவேன்.''

இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இந்த விவாதத்தைப் பார்க்கையில், வேண்டியதே இல்லாத ஓர் அடைமொழிக்காக நடந்த வேண்டாத ஒரு விவாதமாகவே தோன்றுகிறது. அதில் பிரதானமாய்ச் சம்பந்தப்பட்டிருந்த கல்கிக்கும் வ. ரா. வுக்கும் விரைவிலேயே அப்படித் தோன்றியிருக்க வேண்டும். அந்த விவாதத்தின்போது சிதறிய கோபதாபச் சொற்களை, மற்றவர்கள் எடுத்துச் சொல்லிக்கொண்டே இருந்தபோதிலும், அவ்விருவரும் மறந்துவிட்டார்கள் என்பதில் ஐயமில்லை.

1939ல் வ. ரா.வின் பொறுப்பில் ''பாரத தேவி'' ஆரம்பமானபோது, ''ஒரு புதிய பத்திரிகையை ஆரம்பிப்பதற்கோ நடத்துவதற்கோ ஒரு மனுஷரிடம் என்ன யோக்கியதை இருக்க வேண்டும் என்று நாம் நினைக்கிறோமோ, அந்த யோக்கியதை அவரிடம் பூரணமாய் இருக்கிறது'' என்று ஆகஸ்ட் எட்டாம் தேதிய விகடனில் கல்கி எழுதி அதை வரவேற்றார்.

1948 அக்டோபர் 31ந் தேதி வ.ரா. வுக்கு மிகச் சிறப்பாக ராஜாஜி மண்டபத்தில் மணி விழா நடைபெற்றது. அச்சமயம் அவருக்குப் பதினெண்ணாயிரம் ரூபாய் கொண்ட நிதி முடிப்பு அளிக்கப்பட்டது. விழாக் குழுவின் செயலாளர்களில் ஒருவராகக் கல்கியும், பொருளாளராகக் கல்கி பத்திரிகையின் மானேஜர் சதாசிவமும் பொறுப்பேற்று, கொண்டாட்ட ஏற்பாடுகளிலும், நிதி வசூலிலும் வெகுவான அக்கறையுடன் உழைத்தார்கள். பாரதியாருக்கு மண்டபத் திருப்பணி செய்த கையோடு, அக்கவிஞரின் முதற் சீடருக்கான பெருமைப் பணியில் ஈடுபட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வ. ரா. மணி விழா நிதிக்குக் கல்கி விண்ணப்பம் விடுத்து எழுதிய முதற் கட்டுரை அவருடைய பத்திரிகையின் ஜூலை 18ந் தேதிய இதழில் வெளியாயிற்று.

...மகா கவி பாரதியார்தான் ஆசிரியர் வ.ரா. அவர்களின் மாதா, பிதா, குரு, தெய்வம். பாரதியாருடைய பெருமையை இந்தியாவும் உலகமும் அறியும்படி செய்வதே வ.ரா.வின் புருஷார்த்தம். தமிழ்மொழியிடம் அன்பு அவருடைய மூச்சுக் காற்று...


ஸ்ரீ வ. ரா. அவர்களைத் தமிழ் நாட்டின் முதல் எழுத்தாளர் என்றும், தமிழ் எழுத்தாளர்களில் முதல்வர் என்றும், தமிழ் எழுத்தாளர்களில் நிரந்தரத் தலைவர் என்றும் சொல்வது மிகையாகாது...எழுத்துத் தொழிலுக்கு அவர் தனிக் கௌரவம் கொடுத்தார்; தனித்த கௌரவம் கோரினார். எழுத்துத் தொழிலை ஒரு கலையாகக் கருதி அதையே தமது இலட்சியமாகக் கொண்டார்.

''முதல் எழுத்தாளர்'' என்பதே, இந்தக் கட்டுரையின் தலைப்பு. அது வெளியான கல்கி இதழின் அட்டையை முதல் எழுத்தாளரின் முகத் தோற்றம் அலங்கரித்தது.

வ.ரா.வுக்கு மிகவும் உவப்பாய் இருந்திருக்கக் கூடிய இன்னொரு பெருமையையும் அவருக்குக் கல்கி அளித்தார். பாரதி மண்டபத்தில் முதலாவதாக நடந்த பாரதி விழாவுக்கு அவரைத் தலைமை வகிக்கச் செய்ததே அது. **(தொடரும்)**



இதோ ஒரு சிறந்த முறை—
புதிய ரம்யா
உங்கள் குடும்பத்தை சீரியமுறையில் சுத்தமாக்கும் டிடர்ஜன்ட்
பளபளப்பாய், வெண்மையாய் டிடர்ஜன்ட் சோப்பு துணிகளைத் தீவிரமாகச் சுத்தப்படுத்துகிறது — எப்படிச் செய்யவேண்டுமோ அப்படி. இன்னும் சிறப்பாக. பிரமிக்கத்தக்க அளவு சிறப்பாக.
புதிய ரம்யா விஞ்ஞான முறையில் கலவையானது. துணியில் ஆழச் சென்று, அழுந்தப் படிந்த ஒவ்வொரு துளி அழுக்கையும் இழுக்கும் தீவிரம் கொண்டது.
புதிய ரம்யா சர்பேக்டன்ட் (டோடிசில் பென்சேன் ஸல்போனேட்) தன் சுத்தமாக்கும் தன்மையால் அழுக்கைத் தாக்குகிறது; அதனை வெளியே இழுக்கிறது.
புதிய ரம்யாவிலுள்ள கார்பாக்ஸி மெதல் செல்லுலோஸ் கரைசலிலுள்ள வெளியேறும் அழுக்கைத் தனிப்படுத்துகிறது — உங்கள் ஆடைகளில் அது மீண்டும் படியாமல் பாதுகாக்கிறது; சுத்தத்திற்கு உத்திரவாதமளிக்கிறது.
அழுக்குத் துணி வெளுக்க— பளீரென ஒளிர்க
NEW
RAMYA
DEEP CLEANSING DETERGENT
SCIENTIFICALLY TESTED FORMULA
- WASHES SPOTLESSLY CLEAN
விரையுங்கள்! சலுகை முடியும் நாள் 31 ஆகஸ்ட், 1975
அல்ட்ராமரீன் & பிக்மன்ட்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை, தமிழ்நாடு
AA/UPL/1801



○ திரு ராமபத்திரனுக்கு விருது பத்திரம் வழங்குகிறார் திரு மணி அய்யர்.

மணி சூட்டிய மணி!

நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்களின் சௌகரியா அசௌகரியங்களை அனுசரித்து, மூன்று மாதங்களுக்கு நீடிக்கும் இசை விழாவில் அவர்களைப் பங்கேற்கச் செய்து, கோகுலாஷ்டமி சங்கீத உற்சவம் நடத்துவது என்பது ரொம்பக் கஷ்டமான காரியம். இதனை வெற்றிகரமாக நிறைவேற்றி வரும் கிருஷ்ணகான சபை காரியதரிசி திரு யக்ஞராமனுக்கு இந்த அளவு சாமர்த்தியம் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்வதில் இல்லை என்பது புரிந்து போயிற்று! இல்லாதபோனால் திரு அனந்தநாராயணன் அவர்களை விழாவை ஆரம்பித்து வைக்க அழைத்து விட்டு, மேலும் நாலு பேச்சாளர்களுக்கும் ஏற்பாடு செய்து விட்டு,எல்லாம் அரை மணி நேரத்தில் முடிந்து விடும் என்று எதிர்பார்த்திருப்பாரா? ஆகக் கூடி ஆறரைக்கு ஆரம்பிக்க வேண்டிய திரு சந்தானத்தின் கச்சேரி, ஏழே முக்காலுக்கு முன்பு தொடங்கவில்லை, எப்போது முடிந்ததோ, இருந்து பார்க்க எனக்குத் தைரியம் இல்லை!

அன்று திரு ராமபத்திரனுக்கு "சங்கீத சூடாமணி" என்ற விருது வழங்கினார்கள். திரு அனந்த நாராயணனுக்கு அந்த விஷயமே மறந்து போய்விட்டது! அந்த அளவுக்கு அவர் சங்கீத ஆராய்ச்சியில் இறங்கிவிட்டிருந்தார். மீன்களின் வளைவு நெளிவுகளை உணர்த்தும் பியானோ இசையை மோஸார்ட் அமைத்திருக்கிறார் தெரியுமா? அதைக் கேட்டு திரு அனந்தநாராயணன் மெய்சிலிர்த்திருக்கிறார். நாமும் ஏன் உருகக் கூடாது?

இவ்விதம் சங்கீத சாகரத்தின் வீச்சை அளந்தவர், அதன் ஆழத்தைக் காணவும் முற்பட்டார். ஒவ்வொரு ராகத்துக்கும் ஒரு பாவம் உண்டல்லவா? குறிப்பிட்ட பாவமுள்ள ஒரு ராகத்தை மாறுபட்ட ரஸமுள்ள ஒரு சாகித்தியத்துக்குமாமேதைகளான நமது வாக்கேயக்காரர்கள் எப்படிப் பொருத்திப் பார்த்திருக்கிறார்கள்? ஏன்?

பிரபலமான நமது பாடகர்கள் பிரபலமான ராகங்களுக்குப் பிரபலமான முறையில் ஸ்வரப் பிரஸ்தாரங்களை நிகழ்த்த வேண்டிய அவசியம் என்ன? அவர்களுக்கு இதையெல்லாம் பாட முடியும் என்பது நமக்குத் தெரியாதா? சாகித்திய பாவத்துடன் இரண்டறக் கலந்து அர்த்த புஷ்டியுடன் பாடி நமது மனம் உருகச் செய்தால் போதாதா?

இன்னும் திரு அனந்த நாராயணன் சொன்னதையெல்லாம் நினைவுபடுத்திக்கொண்டு நான் எழுதப்போனாலும் அது முடிக்கத் தெரியாமல் நான் ஆரம்பித்து விட்டுத் தவிக்கும் தனி ஆவர்த்தனமாகிவிடும்! இதோ முற்றுப்புள்ளி.

திரு ராமபத்திரனின் தகப்பனாரும் குருவுமான திரு கோபாலாச்சாரி அவர்கள் தமக்குக் கீழ் மாவட்ட நீதி மன்றத்தில் பணியாற்றியவர் என்பதைக் கடைசியில் நினைவுபடுத்திக் கொண்டு குறிப்பிட்டார் திரு அனந்தநாராயணன். அவர் கொன்னக்கோல் வாசிப்பதில் நிபுணர் என்பது நீண்ட காலத்துக்குப் பிறகுதான் நீதிபதிக்குத் தெரிய வந்ததாம்.

திரு கோபாலாச்சாரி வேலூரில் ஒரு சபா நடத்தி வந்ததையும் பல வித்வான்களை ஆதரித்ததையும் திரு செம்மங்குடி நினைவுகூர்ந்தார். அத்துடன் ராமபத்திரனின் குணச் சிறப்பை ஒரு நிகழ்ச்சியைக் கூறி விவரித்தார்.

அகாடமி மத்தியானக் கச்சேரிக்கு வந்து கொண்டிருந்த ஒரு லய வித்வானுக்கு வழியில் ஒரு சிறு விபத்து நேர்ந்து விட்டது. விஷயமறிந்த ராமபத்திரன் உடனே ஒரு மிருதங்கத்தை வரவழைத்து அந்த ஜூனியர் வித்வானுக்கு வாசித்தார். அகாடமி நிர்வாகிகள் கொடுத்த சன்மானத்தை அன்று மாலையே விபத்துக்கு ஆளான வித்வானிடம் சேர்ப்பித்தார்!

"லயம் என்றால் என்ன? லயம் என்றால் கடவுள்!" என்ற ஆணித்தரமான வாதத்துடன் தமது பேச்சை ஆரம்பித்தார் பாலக்காடு திரு மணி அய்யர். "லயம்னு கணக்கு; காலம். காலப்பிரமாணம் தப்பாமல் கணக்குப் பிசகாமல் நடத்து கொள்ளக் கூடியவன் யாரு? கடவுள் ஒருத்தன்தான்!"

அண்ட சராசரத்தையே ஒரு நியதிக்குட்பட்டு இயங்கச் செய்கிறவன் அல்லவா அவன்! அந்த லய வித்வானை மறக்காமல் நாம் நமது வாழ்க்கையையே லயத்தோடு நடத்த வேண்டும் என்ற மணி அய்யர், வேஷ்டி துவைப்பதில் கணக்குத் தப்பியதற்காக சிஷ்யனிடம் கோபித்துக்கொண்ட குருநாதர் கதையைக் கூறினார். வேஷ்டி துவைக்கும் சத்தம் கிடக்கட்டும், அன்று என்ன பேச வேண்டும் என்பதற்காக ஒரு துண்டு அட்டையில் குறிப்பு எழுதிச் சட்டைப் பையில் வைத்திருந்த மணி அய்யர், அதைக் காலப் பிரமாணம் தப்பாமல் சற்று 'நேரத்துக்கொரு தரம் எடுத்துப் பார்த்துவிட்டுத் திரும்ப வைத்துக் கொண்ட கச்சிதத்தை என்னவென்று சொல்ல!

திரு டி. என். கிருஷ்ணன், '' 'விஷய ஞானமுள்ளவர்கள் எதற்காகப் பயப்பட வேண்டும்?' என்று சாதாரணமாகச் சொல்வார்கள். ஆனால் உண்மையில் ஞானமில்லாதவர்களுக்குத்தான் பயமும் இருக்காது'' என்றார். கூடவே அவர் பேசுவதற்கு ஒரே மடியாகப் பயந்து தொண்டை வரள சோடா குடித்துத் தாம் கூறியதை நிரூபித்துக்கொண்டும் இருந்தார்! மதுரை மணி அய்யர் ராமபத்திரன் வாசிப்பை 'ஜிலே' என்றிருந்தது என வர்ணிப்பாராம். ''ஜிலே என்றால் என்ன, எப்படி இருக்கும் என்று எனக்குப் புரியவில்லை'' என்றார் திரு கிருஷ்ணன். ''ராமபத்திரன் வாசிப்புப் போல் இருக்கும்!'' என்று திரு கிருஷ்ணனுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்!

முன் வரிசையில் அமர்ந்திருந்த திரு ஒய். ஜி. துரைசாமி, ''சங்கீத சூடாமணி என்ற பட்டத்தைத் திரு ராமபத்ரனுக்கு வழங்குவானேன்? லய சூடாமணி என்றல்லவோ பட்டம் வழங்க வேண்டும்?'' என்று கேட்டார். இதே சந்தேகம் வேறு பலருக்கும் எழலாம் என்று எதிர்பார்த்ததுபோல் கடைசியாகப் பேசிய திரு வேணுகோபால், சாகித்தியத்தின் அர்த்த பாவம் உள்பட சங்கீத சாஸ்திரத்தின் பல்வேறு அம்சங்களையும் நன்றாக உணராதவர் சிறந்த லய வித்வானாகப் பிரகாசிக்க முடியாது என்பதைக் கூறி சங்கீத சூடாமணி பட்டத்தைத் திரு ராமபத்ரனுக்கு வழங்குவது ரொம்பப் பொருத்தமே என்றார்.

இப்படிப் பொருத்தம் பார்த்துப் பாலக்காடு மணி அய்யர் மூலம் தமக்கு வழங்கப்பட்ட விருதைத் திரும்பவும் குருசிரேஷ்டர் மணி அய்யருக்கே தாம் சமர்ப்பிப்பதாக ராமபத்ரன் அடக்கத்துடன் கூறியபோது, எங்கே சங்கீத சூடாமணி பட்டம் மெய்யாலும் சூடா — மணியாகவே இருந்துவிடுமோ என்று எனக்குக் கவலையாகப் போய்விட்டது. நல்ல காலம், மணி அய்யர் விடவில்லை. ராமபத்திரன் கழுத்தில் அந்த நீல ரிப்பன் கட்டிய தங்க மெடலைத் தழையத் தழையத் தொங்கவிட்டு அழகு பார்க்கத்தான் செய்தார்.

சும்மா சொல்லப்படாது, ராமபத்திரனின் வாசிப்பைப் போலவே அந்தத் தங்க மெடலும் ஜொலித்தது!

—சுட்டி கிருஷ்ணன்



அந்த முஸ்லிம் வாலிபருக்கும் பச்சை குத்திக் கொள்ள வேண்டும் என்று ஆசை. கையில் அகலமாகப் பச்சை குத்திக் கொண்டு விட்டார்.

அவரது குடும்பத்தினர் மதப் பற்று அதிகமுடையவர்கள். முஸ்லிம் மதச் சம்பிரதாயப்படி பச்சை குத்திக் கொள்ளக் கூடாதாம். பச்சை குத்திக்கொண்ட 'குற்றத்துக்காக' அந்த வாலிபரை அவர் இல்லத்தினர் விலக்கி வைத்தனர். சில நாட்கள் கழித்துத் தமக்குத் திருமணத்தையாவது நடத்தித் தந்துவிடுமாறு வீட்டாரிடம் கெஞ்சினார் அவர். நடக்கவில்லை.

பிறகு ஒரு மருத்துவரின் யோசனைப்படி அந்த இளைஞர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் பச்சை குத்தியிருந்த தோல் முழுவதையும் எடுத்து விட்டுப் புதுத் தோலை டாக்டர்கள் பொருத்தினார்கள். சர்ஜரிக்குப் பிறகு பச்சை குத்திய இடமே சுத்தமாகத் தெரியவில்லை!

வாலிபரை அவர் குடும்பம் ஏற்றுக் கொண்டு, திருமணத்தையும் நடத்தி வைத்தது. உண்மை நிகழ்ச்சி இது.

—இ.எஸ்.எஸ். இராமன்

நாய்களுக்கு ஓட்டல்!

ஜப்பானில் நாய்களுக்காக என்றே பிரத்தியேகமாக ஓட்டல் கட்டப்பட்டுள்ளது!

டோக்கியோ நகரில் கட்டப்பட்டுள்ள இந்த ஓட்டலில் மனிதர்கள் தங்க முடியாது. நாய்கள்தான் தங்க முடியும்! வெளியூர்களுக்குச் செல்லும் பணக்காரர்கள் சில காரணங்களால் தங்கள் நாயை உடன் அழைத்துச் செல்ல முடியாவிட்டால் இந்த ஓட்டலில் விட்டுச் செல்லலாம். அதற்குத்தான் இந்த ஓட்டல். இங்கு நாய்களுக்காக அவை தங்கும் அறைகளில் டெலிவிஷன் உண்டு! இனாமும் நாய்களுக்கு மருத்துவப் பரிசோதனையும் உண்டு!

—சம்பத்குமாரி

ஆதாரம்: வெஸ்டர்ன் டைம்ஸ்



அருட் கலவை

அநுத்தமா

வியாச பூஜைக்காக இரவு 10–30 மணிக்குப் புதுப் பெரியவர்கள் கலவைக் கிராமத்தின் எல்லைக்கு வந்துவிட்டார்கள். கிராமத்து ஜனங்கள் அங்கு கூடி வரவேற்பளித்தனர். தப்பட்டை, கொம்பு, நாதஸ்வரம், ஜாலரா, சிலம்பம் - இப்படி ஓர் ஒலிக் கலவை அவர்களை வரவேற்றது. அங்கு கூடியுள்ளோரின் மனங்கள் தாளத்துக்கு ஏற்பக் குதித்து உற்சாகமாகத் தாண்டவமாடின.

பெட்ரோமாக்ஸ் விளக்குகளின் வெளிச்சமும், பெண்கள் எடுத்த மங்கள ஹாரத்தியின் கற்பூர ஒளியும் பௌர்ணமியை எதிர்பார்த்த ஆகாயத்தின் நிலவொளியுடன் கலந்தன. புதுப் பெரியவர்கள் அதன் மத்தியில் ஜோதிப் பிழம்பாக அருட்பார்வை வழங்கிக் கொண்டு வந்தார்கள். எல்லாக் கண்களும் ஆனந்த பாஷ்பம் சொரிந்தன.

மறுநாள் சந்திரமௌளீச்வரர் திரிபுர சுந்தரி பூஜையைக் கண்டு கண் பெற்ற பயனை அடைந்தனர் எல்லோரும். மாலை பௌர்ணமி பூஜையின்போது, நிலவைக் கண்ட கடலைப் போல் ஆனந்தவாரிதி பொங்கி அலை அலையாகக் கிளம்பியது. ஒவ்வொரு பூஜையின் போதும் அடுத்த தீபாராதனைச் சமயத்தில் பெரியவர்களும் புதுப் பெரியவர்களும் சேர்ந்து காட்சி அளித்தபோது மக்கள் புளகாங்கிதமடைந்து ஹர ஹர கோஷம் எழுப்பினர்.

வெளியூர்களிலிருந்து வந்த பஸ்களில் பணிதார்கள் வந்தவண்ணம் இருந்தனர். 'தங்க வசதியாக இடங்கள் இல்லையே, தண்ணீர்க் கஷ்டமாமே' என்று எல்லோரும் அங்கலாய்த்தார்களேயன்றி, வந்து இறங்குபவர்களின் ஆவலையோ, அங்கே இருந்து உபசரித்தவர்களின் ஆர்வத்தையோ அது பாதிக்கவில்லை.

ஒரு மாதத்துக்குமுன் நான் சென்றிருந்தபோது வறண்டிருந்த ஏரியும், குளமும், கிணறுகளும் இப்பொழுது ஊற்றெடுத்து நம்பிக்கை ஊட்டின.

புதன்கிழமை வியாசபூஜையன்று விடியற்காலையிலேயே கூட்டம் கூடிவிட்டது. மடுக்கரையில் புதுப் பெரியவர்கள் வபனம், ஸ்நானம் எல்லாம் முடித்து, உபநிஷத்துக் கோஷம் முழங்க, வாத்திய ஒலி துணையிருக்க அலங்காரக் குடையின் கீழ், பக்தர்களின் பக்தி வெள்ளத்தில் மிதந்து வந்தார். அப்புண்ணிய யாத்திரையில் ''ஜய ஜய சங்கர, ஹர ஹர சங்கர'' என்று வாயார பஜித்துக் கொண்டு மடத்தை அடைந்தோம்.

மேடை மீது வியாச பூஜைக்குப் பூர்வாங்கமாக, தானியம் பரப்பி, கணக்குப்படி எலுமிச்சம் பழங்களை அமைத்து வைத்திருந்தனர். அதன் மத்தியிலே தாமரை வடிவிலே இதழ் இதழ்களாக, அடுக்கு அடுக்காக எழும்பிய ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் அரிசி பரப்பி வைத்திருந்தது. கலவைக் கிராமமே கல்யாணக் கோலத்துடன் எங்கு பார்த்தாலும் மலர்ந்த முகமும், பஜித்த வாயும், நிறைந்த மனமுமாகக் காட்சி அளித்தது.



பெரியவர்கள் சாளிக்கிராமம் எடுத்து வர, புதுப் பெரியவர்கள் வியாசரின் விக்கிரகத்தைத் தாமரைக் கிண்ணத்தின் மீது வைக்க, மகிழ்ச்சி ஆரவாரம் பந்தலை நிரப்பியது.

பெரியவர்கள் மேடைமீது அமர்ந்து பூஜை செய்தார்கள். புதுப் பெரியவர்களும் மற்ற யதிகளும் கீழே அமர்ந்திருந்தனர். அன்று ஆதிசங்கரரையும், சிஷ்யர்களையும் கண்டு களிக்க முடியாதவர்களுக்காக இன்று மீண்டும் அக்காட்சி நமக்காக நடப்பதுபோல் பிரமையூட்டியது. அண்மையில் முன்னோர்களின் இரண்டு அதிஷ்டானங்களும் சாட்சியாக நின்றன. மெய்சிலிர்க்கும் அந்தச் சூழ்நிலையில், வந்தவர்கள் அனைவரும் தம்மை மறந்து பூஜையைக் கவனித்தனர். பூஜை சாமான்களைக் கைக்குக் கை மாற்றி உள்ளே அனுப்புவதும், நாமாவளி பாடுவதுமாக எல்லோருமே தொழுகையில் கலந்து கொண்டனர். ஒவ்வொரு ரிஷிக்கும் பெரியவர்கள் தியானம், ஆஹ்வானதிகள் செய்யும்போது அத்தனை மனமும் அவருடன் ஒன்றி அப்பூஜையில் ஈடுபட்டது. தீபாராதனை முடிந்து, அவர்கள் ஒவ்வொரு முறை வணங்கும் போதும், அத்தனை இதயங்களும் உடன் வணங்கின. காலம் நின்றது.

கூடியவர்கள் இதயத்திலே பொங்கி எழுந்த உணர்ச்சிதான் பெருக்கெடுத்தாற் போல் மழை பெய்தது. பஞ்ச பூதங்களுமே அன்றைய பூஜையைக் காணப் பிரத்தியட்சமாயின போலும். காலை 10–30 மணிக்கு ஆரம்பித்த பூஜை மாலை ஆறு மணி அளவில் முடிந்தது. மழை பெய்ததில் பந்தலில் நீர் சொட்டுச் சொட்டென்று சொட்டியது. ஏற்கனவே பக்தியில் நனைந்தவர்கள் இதை எங்கே பொருட்படுத்தினார்கள் ?

பூஜை முடிந்து, பெரியவர்கள் சம்பிரதாயப்படி சங்கல்பம் செய்து கொண்டு, '' நாங்கள் இங்கு இரண்டு மாதங்கள் தங்கினால் உங்களால் பராமரிக்க முடியுமா? இல்லையேல், வேறு ஊருக்குப் போகிறோம்'' என்று சம்ஸ்கிருதத்தில் கேட்டதை ஒரு பெரியவர் தமிழில் மொழிபெயர்த்துக் கூறியபோது, உள்ளூர்ப் பிரமுகர்கள் கண்களில் நீர் பனித்தது. அந்தக் காட்சி கண்டவர் மனத்தைத் தொட்டது.

பூஜை பார்க்க வந்தவர்களின் வசதியை முன்னிட்டு, அன்றே புனர்ப் பூஜையும் முடிந்துவிட்டது. பிரசாதமும் கிடைத்தது.

மாலை நேரமாகியும் கருணை உள்ளம் வற்றாமல், அருட்பார்வை வாடாமல் புதுப் பெரியவர்கள் பிரசாதம் வழங்கினார்கள். பிரியாவிடை பெற்றுப் பலர் ஊர் திரும்பினர். அப்படியும் பல பேர்களுக்கு வெளியூர் செல்ல பஸ் தவறிவிட்டது. கருணாமூர்த்தியான ஆசார்யாள் விருப்பப்படி இரண்டு பெரிய மோட்டார் வாகனங்களில் வந்தவர்களை ஏற்றி, காஞ்சிபுரத்திலும் ஆர்க்காட்டிலும் கொண்டு இறக்கிவிட ஏற்பாடாகியது.

பெரியவாளைத் தரிசித்துவிட்டு வந்து ''Wonderful '' என்ற அயல்நாட்டவரை, ''பேசினீர்களா?'' என்று விசாரித்தேன். ''அவசியமில்லை, தரிசனமே நிறைவு தரும்'' என்று பதில் அளித்தார்கள். பாரினிலேயே நம் ஆன்மீக நூல்களின் மொழிபெயர்ப்புகளைப் படித்துவிட்டு வந்திருக்கிறார்கள். உபநிஷத்து, சங்கர பாஷ்யம், சூத்திரங்களைப் பற்றி சகஜமாக, நல்ல தேர்ச்சியுடன் பேசுகிறார்கள். ராமகிருஷ்ண, விவேகாநந்த கிரந்தங்களையெல்லாம் படித்திருக்கிறார்கள்.

நம் சம்பிரதாயத்தில் உடை அணிந்து சகஜமாக நடமாடும் வெளிநாட்டவரும், நம்மவரிலேயே தொலைதூரத்திலிருந்து வந்தவர்களும் அக்கம்பக்கத்தில் உள்ள பல கிராமங்களிலிருந்து வந்தவர்களும், வசதி உள்ளவர்களும், வசதியற்றவர்களும் சிந்தனையால் ஒன்றி அங்கே கலந்தனர்.

அனைவரும் ஒருமுகப்பட்ட மனத்துடன் பெரியவர்கள் தாம் பட்டம் சூட்டிக் கொண்ட அந்தக் கலவைக் கிராமத்தில் முதன்முறையாக வியாச பூஜை செய்ததையும், அவர்களுக்கு உறுதுணையாகப் புதுப் பெரியவர்கள் அருகில் வீற்றிருந்ததையும் கண்டு களித்தார்கள்.

அந்த அருட் கலவையின் இன்பம் என்றும் மறக்க முடியாத ஓர் அநுபவம்.



எனக்குப் பிடிக்காதது அர்த்தமற்ற பேச்சுக்கள். அநாவசியக் காலதாமதங்கள். முடிவு தெரியாமல் குழம்பிக் கிடப்பது.

வேகம்... வேகம்... எதிலும் ஒரு வேகம். எழுவாய், பயனிலை என்றோ அல்லது வினைச் சொற்களுக்காகவோ தேடி அலைவதா? தேவையில்லை ! கருத்துக்களைப் புரிந்துகொள்ளக் கூடிய சொற்கள் போதும்... சொல்ஜாலங்கள் தேவையில்லை.

நான் அவசரக்காரன். இருக்கலாம்... வயதும் ஒரு காரணம். இளைஞன். நம்புங்கள். கனவுகள் டெக்னி கலர்களில்! நம்ப மறுத்தால் நஷ்டம் உங்களுக்குத்தான் !

என் கனவுகளின் பிரும்மாண்டம்! எப்போது ? 70 எம். எம். இல்! சிரிக்காதீர்கள். நிஜமாக 'அவள்' அழகின் ஒரு மொத்த வாரிசு ! 'அவளை'ப் பற்றிய கனவுகள் விஸ்தாரமானவை ! அது என் சொந்தச் செலவு! படப்பிடிப்பு! 'தோராஹா' இல்லை! நான் நல்லவன்! அவள்...? பற்களின் பளபளப்பு, முகத்தின் புன்சிரிப்பு, தலையின் புஸு புஸுப்பு !

இடை — மெல்லிடை! மயில் சாடை ! மாந்தளிர் மேனி! பிரும்மன் பார்த்துச் செதுக்கி வைத்த காதல் சிற்பம். உதடுகள் சிரிக்கும்போது கண்களும் சிரிக்கின்ற அழகு. 'களுக்'கென்ற சிரிப்பின் சிதறல்கள் —

பெயரைத் தெரிந்துகொள்ள வேண்டாமா ? ராதிகா!

இன்னும் என்ன அங்கே பார்வை ? பார்த்தது போதும்.

பார்வை சரியில்லை ! உங்கள் பார்வை தான் !

எதிர் வீட்டு மாடி ஜன்னலில் அடிக்கடி தெரியும் அந்த அழகு வதனம்.

'பளிச்' — மின்னல் அல்ல'. அவள் சிரிப்பு!

'லோதுதிப் ஸாரி' அசைந்தாட 'டாடா' சொல்லிவிட்டு (தன் தாய்க்குத்தான்!)

வீதியில் இறங்கி நடக்கும் அழகு!

எனக்கு...?

பெருமூச்சுக்கள்! காத்திருப்புக்கள்! காதல் மயக்கங்கள்!

மனத்துள் நானும் 'டாடா' சொல்லிப் பார்த்துக் கொள்ளும் அழகு !



காலை நேரம். ஜன்னல் திறப்பதற்காகக் காத்திருக்கிறேன்.

எதிர்வீட்டு ஜன்னல்.

திறந்தாள்.... மெல்லச் சிரித்தாள் !

என்னைப் பார்த்து !

குப்பென்று பரவும் உணர்வு! படபடக்கும் இதயம்! செய்வதறியாது தவிக்கும் உள்ளம்!

அப்போதே இறக்கை கட்டிப் பறந்து போய் எதிர்வீட்டு ஜன்னலில் தாவும் வேகம்!

நிதானம் ! நிதானம் ! சாணக்கிய உள் மனத்தின் எச்சரிக்கை.

கட்டுப்படுகிறேன்.

திறந்த ஜன்னல் வழியே எதிர்வீட்டுப் பிம்பம் ! அந்தக் கண்கள் ! அந்த உதடுகள்! அந்தச் சிரிப்பின் சிதறல்கள்!

ஐயோ ! அவள் என்னைக் காதலிக்கிறாள் ! நிச்சயம் ! சத்தியம் !

திடீரென்று ஆட்டோவின் உறுமல் !

என் வீட்டிலேயே குலுங்கி நிற்கும் ஆட்டோ! அட சனியனே! இதுஎங்கேவந்தது?

தூரத்து உறவென்ற ஓர் அசட்டுக் கமலா! அவள் அம்மா !

அடிக்கடி கிராமத்திலிருந்து விஜயம் செய்யும் கட்டுப்பெட்டிகள்! எனக்குக் கட்டோடு பிடிக்காத ஜன்மங்கள் !

''அத்தான் எங்கே?'' — கமலாவின் குரல்.

அந்த எருமை மாட்டுக் கத்தல் ! நாகரிகமற்ற காட்டுமிராண்டிச் சிரிப்பு ! முரட்டுத்தனத்தின் மொத்த வாரிசு !

காலடிச் சத்தம் அருகில் கேட்கிறது.

படுக்கையில் 'தொப்'பென்று விழுகிறேன்!

''இன்னும் அத்தான் எழுந்திருக்கவில்லை.''

கத்திக் கொண்டே கீழே இறங்கி ஓடும் கமலா !

நான் இப்போதைக்குப் பிழைத்தேன். அத்தானும் அத்தான் ! நான் அங்கீகரிக்கவில்லை! இவளாக வைத்துக் கொண்ட உறவு! யார் கேட்டார்கள்?

ஆசையுடன் மீண்டும் எதிர்வீட்டு மாடி ஜன்னலைப் பார்க்கிறேன்.

அவள் கீழே இறங்கிக் கொண்டிருக்கிறாள்.

இன்று தாயைக் காணவில்லை !

அக்கம்பக்கம் பார்த்துவிட்டுக் குறும்பாக என்னைப் பார்த்துச் சிரித்து 'டாடா' காட்டுகிறாள் !

மரமண்டை நான் ! மனத்துள் ஆயிரம் முறை பார்த்துக் கொண்ட ஒத்திகைகள் தோற்கின்றன !

அந்தத் துணிச்சலில் திகைத்து நிற்கிறேன்!

ஐயய்யோ ! பதிலுக்கு 'டாடா' சொல்ல வேண்டாமோ ? நானே வராமலா போகப் போகிறது? மனச் சமாதானம்.

என் மனத்தின் வேகம் ! என் செயல்களின் தாமதம் !

குளிக்கப் போகும்போது கமலா பிடித்துக் கொள்கிறாள் !

''ஹாய், அத்தான்...! உனக்குக் குளிக்கப் போகும் பழக்கம்கூட உண்டா ?''

பெரிய ஜோக்! மனத்துள் எரிச்சல்! வெளியில் சிரிப்பு!

''உனக்காகக் கிராமத்திலிருந்து நார்த்தங்காய் ஊறுகாய் கொண்டு வந்திருக்கிறேன்....

தயிர் சாதத்துடன் சாப்பிடு... ரொம்ப ஜோரா இருக்கும் !''

தின்னிப் பண்டாரம் ! சாப்பாட்டு நினைவே! நார்த்தங்காய்! மண்ணாங்கட்டி!

ராதிகா என்ன பேசுவாள்? கற்பனை வேகம் பறக்கிறது !

''டியர்... உங்களுக்காக 'ஸ்வீட்' வாங்கி வந்திருக்கிறேன்.... ப்ளீஸ் ஹெல்ப் இட்....''

முகத்தில் திமிர் சில்லிப்பு!

''அட ! அசட்டு அத்தான் என்ன அப்படியே நின்னுட்டே ! நான்தான் முகத்திலே தண்ணி தெளிச்சேன் !''

நேஸ்டி கர்ல் ! என் ராதிகா பன்னீர் தெளிப்பாள்!

''குளிச்சுட்டு வந்து தொலையேன்.... தண்ணீர் ஆறிப் போறது....''

அம்மாவின் அர்ச்சனை ஆரம்பம் !

நான் குளியல் அறைக்கு ஓடுகிறேன்.

''சாயங்காலம் சினிமாவுக்குப் போகலாமா அத்தான் ?'' — கமலாவின் நச்சரிப்பு.

'' குழந்தை கேட்கிறாள்... கூட்டிண்டு போயேன்.'' — அம்மாவின் சிபாரிசு.

''என்ன படம் ?''

''ராமனும் நீயே கிருஷ்ணனும் நீயே!''

மக்கு! மண்டு! சரியான பத்தாம் பசலி!

என் ராதிகா இப்படிக் கேட்கமாட்டாள்!

'ரோமியோ ஜூலியட்', 'யாதோன் கி பாராத்' — இப்படித்தான் கேட்பாள் !

மாலை நேரத்தில் கடைத்தெருவுக்கு அப்பா விரட்டுவார்! அதிலிருந்து தப்பிக்கலாம் !


பையன் கல்லூரியில் படிக்கிறான் என்று தப்பாக நினைத்து (படிப்பதை மட்டும்தான் குறிப்பிடுகிறேன்) எனக்கென்று மாடியில் ஒரு தனி அறை ஒதுக்கித் தந்த என் தந்தை வாழ்க ! 'காம்பேக்டாக' கனவு காண அது ரொம்ப வசதியான அறை !

புன்சிரிப்புப் பரிமாறல்கள் !

நாட்கள் நகருகின்றன.

காலை நேரத்தின் பரபரப்பில், தவமிருந்து காத்து நிற்கிற லயிப்பில் ஒரு புன்சிரிப்புக்குப் பல மணி நேரம் செலவிடுகிறேன். காரணம்..?

விமலா ரமணி





டிகால் பிரான்ஸ் நாட்டு அதிபராக இருந்தபோது டெலிவிஷன் நிகழ்ச்சிகளைத் தவறாமல் பார்ப்பதுடன் நிகழ்ச்சி பற்றிய தம்முடைய கருத்தையும் உடனடியாக டெலிவிஷன் நிலைய அதிகாரிகளுக்குத் தெரிவிப்பாராம்.

நிகழ்ச்சி மோசமாக இருந்தால் "உங்கள் டெலிவிஷன் பார்த்தேன்!" என்பாராம்.

சுமாராக இருந்தால் "டெலிவிஷன் பார்த்தேன்" என்பாராம்.

அருமையாக இருந்து விட்டாலோ, "நம் டெலிவிஷன் பார்த்தேன்!" என்பாராம்!

கமலாவின் நச்சரிப்பு! அடிக்கடி தலையீடு! அவளுக்குப் பிறந்த நாள் வருகிறதாம்! அந்தத் தேதியை நான் மறக்கக் கூடாதாம்!

இன்னமும் சிரிப்புகளுடன்தான் எங்கள் அறிமுகம் நிற்கிறது! தொடரவில்லையே! என்னால் அவளுடன் கிளம்ப முடியவில்லை!

இன்று கட்டாயம்... கண்டிப்பாய் அவளைச் சந்திக்கப் போகிறேன்...

பேச முடியாது! வெட்கம்! கூச்சம்! ஆ! ஒரு கடிதம் எழுதித் தந்துவிட்டால்? வார்த்தைகளைக் கொட்டி, மனத்தைத் திறந்து காட்டிக் கடிதம் எழுதி முடிக்கிறேன்! நாளை அவள் படிப்பாள்! ரசிப்பாள்!

பிறகு....? சந்திப்பு! பஸ் ஸ்டாண்டு! காலேஜ், பார்க், பீச்!

நான் காதல் வேகத்தில் பறக்கிறேன்...

மறு நாள் —

அதோ... அதோ அவள் எழுந்துவிட்டாள்! சிரிக்கிறாள்! நான் பறக்கிறேன்! அவசரம் அவசரமாக என் கடமைகளை முடிக்கிறேன்.

நான் புத்தகங்களைத் தேடும்போது —

"அம்மா நான் வரேன்" — அவள் குரல்... அவள் குரல் இனிமையாய் என் காதில் விழுகிறது!

அவள் கிளம்பிவிட்டாள்! எனக்கு 'இண்டிமேஷன்' தருகிறாள்!

பௌடரைத் தேடுகிறேன்... சனியன் திறக்க வரமாட்டேன் என்கிறது. பல்லால் கடிக்கிறேன்.....

அவசரத்தில் கை கடிபடுகிறது. இரத்தம்! சே! சே! இது வீரப் புண்! விழுப்புண்!

கடலைச் சாமியார் விபூதி பூசிய மாதிரி பௌடர்!

'கர்சிப்' தேடுகிறேன்... கிடைக்கவில்லை... அவசரத்தில் 'ஷர்ட்டில்' துடைத்துக் கொள்கிறேன்.....

அவசரமாக நடக்கிறேன்...அதோ அதோ.. அவள்... ராதிகா... என் முன்னே பத்தடி தூரம்கூட இல்லை... நடக்கிறாள்! கடிதம் என் பனியனுக்குள் அடக்கம்! தொட்டுப் பார்த்து உறுதிப்படுத்திக் கொள்கிறேன்....

இதோ இன்னும் கொஞ்ச தூரம்....

அவளை...நெருங்கிக்கொண்டிருக்கிறேன்...

இதோ நெருங்கிவிட்.....

"ஹலோ, ராது!"

"ஹலோ டார்லிங்!"

சத்தியமாகக் கூப்பிட்டது நான் இல்லை!

ஆனால்...

அழகான தறிப்பு வாலிபன்.... அவன் உடை அலங்காரங்களே பல 'நூறு' தேறும்! 'மேக்கப்'புக்குச் செலவிட்ட நேரம் பல மணி தேறும்!

ஸ்கூட்டரில் ஸ்டைலாக வந்து நிற்கிறான்! ஸ்கூட்டரை நிறுத்துகிறான்... இருவரும் அந்த 'ரெஸ்டாரெண்'டில் நுழைகிறார்கள்!

நான் நிற்கிறேன்... கை வலிக்கிறது! கடிபட்ட இடம்! நானே என்னைக் கடித்துக் கொண்டேன்! ராதிகாவின் கையோடு கைகோத்தபடி, சிரித்தபடி, நெருங்கியபடி, அவன் நடக்கிறான்! நான் நினைத்தமாதிரி... நான் கற்பனை கண்ட மாதிரி...

ஆனால் அவன் நானில்லை! என் மனம்..?.

கொதிக்கிறது! என்ன செய்யலாம்? என்ன செய்யலாம்? கோபம்! வேகம்!... இல்லை இதை விடக் கூடாது!

நான் ஆவேசமாக வீடு திரும்புகிறேன்!

இன்று காலேஜ் மட்டம்! ஆனால், ராதிகாவையும் மட்டம் தட்டிப் பார்க்க வேண்டும்! வீட்டிலும் யாரோ விசும்பும் ஒலி! யார்? யாராக இருக்கும்?

நிதானிக்கிறேன்.... கமலா! அழுகிறாளா? ஏன்?

"பைத்தியம்! உன் அத்தான் எதிர் வீட்டுப் பெண்ணைக் காதலிச்சா என்ன? உனக்குத்தான் உரிமை இருக்கே! நீ சண்டை போட்டு உன் உரிமையைப் பெறலாம்."

"இல்லேம்மா... அத்தான் அந்தப் பொண்ணை எவ்வளவு தூரம் நேசிக்கிறார்ங்கிறது அந்த லெட்டரைப் படிச்சப்புறம் புரிஞ்சது! தப்புத்தான்... ஆனா எனக்குத்தான் அத்தான் லெட்டர் எழுதி இருக்கார்னு நினைக்கத் தெரியாம படிச்சுட்டேன்! அன்பா இணையற ரெண்டு உள்ளங்களைப் பிரிக்கிறது பாவம், அதைவிடப் பாவம் அத்தானை என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி வற்புறுத்தறது! அவா ரெண்டு பேரும் அன்பா வாழறதைப் பார்த்து நான் வாழ்த்தணுமே தவிர பொறுமைப்பட்டு அதைப் பிரிக்கக் கூடாது! அத்தானுக்கேற்ற படிப்போ, அழகோ, எனக்கில்லை! நான் பொறுமைப்பட்டு என்ன பயன்?"

நான் நிதானிக்கிறேன்....

ராதிகா.... அந்த தறிப்பிப் பையன் இணைப்பு! அவன் உடைகள்! அவன் 'பர்சனாலிடி'! 'ஸ்கூட்டர்' சவாரி!

அவன் தைரியம்! அவன் துணிச்சல்!

நிச்சயமாக எனக்கில்லை!

நான் ஏன் பொறுமைப்பட்டேன்?

என் வேகம் குறைகிறது.

இன்று... இன்று... ஓ! கமலாவின் பிறந்த நாள்! ஞாபகம் வந்துவிட்டது!

இந்த நாளை வீண் பண்ணக் கூடாது! இதைக் கொண்டாட வேண்டும்.

கமலாவுக்குப் பிடித்தது கடலை மிட்டாய்!

நான் கடலை மிட்டாய் வாங்கக் கடைக்குப் போகிறேன்!

மூவாயிரம், நாலாயிரம் என்று கொடுத்து டெலிவிஷன் செட்டுகளை வாங்க முடியாத பொருளாதார நிலையில்தான் பெரும்பாலான மக்கள் இன்று இருக்கிறார்கள். ஆசைப் பட்டுக் கடனுக்கு வாங்கி விட்டு அடைக்க முடியாமல் திணறுவோர் பலர். அப்படியே சிரமத்தைப் பாராமல் வாங்கி விட்டாலோ வேறுவித கஷ்டங்கள். தில்லியில் டெலி விஷன் வைத்திருக்கும் பலரது அனுபவங்கள் குறிப்பிடத் தக்கவை.

டெலிவிஷன் வாங்கிய புதிதில் இரவு பத்தரை மணி வரை தொடர்ந்து நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க விரும்பும் பலரது இரவுச் சாப்பாட்டு நேரமும், படுக்கப் போகும் சமயமும் ஒத்திப்போடப் படுகிறது. டி. வி. காண வரும் உறவினர்களும் சிநேகிதர்களும் டெலிவிஷன் வைக்கப் பட்டுள்ள அறையில் நிரம்பி விடவே, நாளடைவில் டெலிவிஷன் செட்டின் சொந்தக் காரரின் கதி கூடாரத்தில் மழைக்கு ஒதுங்க ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த கதையாகி விடுகிறது. நாளுக்கு நாள் அதிகரித்து வந்த இந்தத் தொல்லையிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள, அயலார் வருவதற்கு ஒருவர் தடை போட்டார். மறுநாள் அவரது விலை உயர்ந்த டெலிவிஷன் செட் கோபம்கொண்ட சில சிறுவர்களின் கல்வீச்சுக்கு இலக்காயிற்று! அழையாமல் நுழையும் டெலிவிஷன் ரசிகர்களின் எண்ணிக்கை வீட்டில் அதிகரிக்கவே, மேசை, நாற்காலி, மோடா, சோபா முதலியவை அளவுக்கு மீறிய பளுவைச் சுமக்க நேர்ந்தது. விளைவு, மோடாக்கள் நசுங்கின; சோபாக்கள் கிழிந்தன. ரசிகர்களை அனுமதிப்பதில் புதியதொரு யோசனையைக் கையாண்டார் ஒரு நபர். வீட்டின் முன் வாசற் கதவைப் பூட்டிவிட்டுத் தமக்கு வேண்டியவர்களை மட்டும் பின்வாசல் வழியே அனுமதித்தார். இப்படிக் கதவடைப்பு செய்து கெட்ட பெயர் சம்பாதிக்காதவர் வீட்டில் டி. வி. பிரியர்களின் எண்ணிக்கை மிகக் கூடுதலாகி, குளியலறை ஏகமாகத் துர்நாற்றம் வீச ஆரம்பித்து விட்டது. நாலு பேர் பயன்படுத்த வேண்டிய கழிவு அறையை நாற்பது பேர் பயன்படுத்தினால்? 'ஃபினைல்' பாட்டில்களுக்காகத் தமது மாத பட்ஜெட்டை உயர்த்திக் கொண்டிருக்கிறார் இவர். சனி, ஞாயிறு கிழமைகளில் ஒலிபரப்பாகும் சினிமாப் படங்களை மிக சுவாரசியமாக ரசித்துக் கொண்டிருக்கும் பெண்களுக்குச் சமையல் அறையின் மீதான கவனம் குறைந்து விடுவதால் அங்குள்ள பாலும் சோறும் பூனைக்கும் 'காஸ்' அடுப்புக்கும் இரையாகிவிடுவதுண்டு. வேலைக்காரன் உட்பட வீட்டில் உள்ள எல்லோரும் டெலிவிஷன் அறையில் தம்மை மறந்து ஈடுபட்டிருக்கும் சமயம் மற்ற அறைகளில் இருடர்கள் தேட்டை போட்டதும் உண்டு. வீட்டுக்கு வந்திருக்கும் பல விருந்தாளி ரசிகர்களின் முன்னிலையில் காப்பி, டிபன் அல்லது சாப்பாட்டைத் தாம் மட்டும் உண்ண சங்கோசப்பட்டு உபசரிக்கப் போய்க் குடும்பப் பட்ஜெட் ஏகமாக உயர்கிறது. உபசரிக்காமல் இருப்பதென்றால், டெலிவிஷன் சொந்தக் காரர்கள் தங்கள் சாப்பாட்டு நேரத்தை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

டெலிவிஷன் வீட்டுக்கு வந்த புதிதில் சிறுவர்களின் கவனம் அதில் ஈர்க்கப்படுகிறது. அவர்களது படிப்பில் கவனம் குறைகிறது. ஆனால் நாளடைவில் அவர்களது ஆர்வம், அவர்கள் ரசிக்கக் கூடிய நிகழ்ச்சிகளில் மட்டுமே ஈடுபடுகிறது. **—நமது டில்லி நிருபர்**

டெல்லிவிஷன்!



சுவரில் இருவிழிகள்

3. புதிய திருப்பம்!

ஏரிக் கரையில் சம்பவம் நடந்த இடத்தில் நாலாபுறமிருந்தும் போலீஸ் மோட்டார்களின் ஹெட் லைட்டுகள் ஒளி வெள்ளத்தை வாரி வீசிக் கொண்டிருந்தன. அப்படியும் அங்கே போதிய வெளிச்சம் இல்லாமல் மங்கலாகத்தான் இருந்தது.

ஏழெட்டுப் போலீஸ்காரர்கள், ஒரு ஸப்–இன்ஸ்பெக்டர், நாலைந்து கூலியாட்கள், — ஏராளமான அக்கம் பக்கத்துக் குடிசைக்காரர்கள் அங்கே சூழ்ந்து நின்றார்கள். அவர்கள் நடுவே அப்போதுதான் ஏரியிலிருந்து எடுத்துப் போட்ட ஒரு பெண் உடல் கிடந்தது.

ஒரு பக்கமாக, ஒரு ஜீப்பின் முன் ஸீட்டில் உட்கார்ந்து கலா விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்.

சேகர் அவள் அருகில் பேழ பாண்ட் பாக்கெட்டுக்குள் கைகளைப் போட்டுக் கொண்டு தலை குனிந்து சோகத்தில் மூழ்கியவனாய் நின்றான்.

விம்மினாள் கலா. ''ஓர் எறும்புக்குக்கூடக் கெடுதல் நினைக்கமாட்டாளே — அவளுக்கா இந்தக் கதி ?''

கலாவைப் பார்க்கத் துணிவின்றி எங்கோ பார்க்கிற மாதிரி முகத்தைத் திருப்பிக்கொண்டான் சேகர். 'விமலா ! விமலா ! பாவி, நான்தான் உனக்கு யமனாக வந்து சேர்ந்துவிட்டேன். உன்னை இந்தக் காரியத்தில் நான் ஈடுபடுத்தியிருக்கக் கூடாது' என்று அவன் உள்ளம் கதறிக் கொண்டிருந்தது.

'' பாவி ! சண்டாளன் ! என்னதான் கொடியவனாக இருந்தாலும் இப்படியா முகத்தில் பெரிய கல்லாகத் தூக்கிப் போட்டு ஒருத்தன் அடையாளமே தெரியாதபடி நசுக்குவான்..... என்ன பண்ணித்து அவளை அந்த முகம் !'' என்று புலம்பினாள் கலா.

''ஸார் ! ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிடலாமா?'' என்று ஒரு கான்ஸ்டபிள் வந்து சேகரைக் கேட்டான்.

''இரு அப்பா, கொஞ்சம். ரமேஷும் வந்து பார்த்துவிடட்டும்'' என்று துக்கம் தொண்டையை அடைக்கச் சொன்னான் சேகர். ''கடவுளே! அவன் வந்து பார்த்து, 'இது நம்ப விமலா இல்லை' என்று சொல்லி விடக் கூடாதா ?'' என்று ஆகாசத்தைப் பார்த்துப் பரிதவித்தான்.

'' சொல்லிட்டாத்தான் வயத்துலே பால் வார்த்த மாதிரி இருக்குமே. ஆனால் எப்படி முடியும்? அந்தப் புடவை, ஜாக்கெட் எல்லாமே விமலாவுடையவைதானே! போன வாரம்கூடச் சினிமாவுக்கு வந்தபோது உடுத்திக் கொண்டிருந்தாளே! எனக்கு நன்றாக நினைவிருக்கிறதே !'' என்றாள் கலா.

''உயரம், பருமன், நிறம் எல்லாம்கூட நம்ப விமலாவேதான்'' என்ற சேகர், ''இருங்கள் மிஸ் கலா! அதோ, ஓர் ஆட்டோ வருகிறது. ரமேஷ்தான் வர்றான் போல் இருக்கு'' என்று பரபரப்புடன் கூறிக் கொண்டே சாலையை நோக்கி ஓடினான்.

சாலையில் அவன் மேடு ஏறவும் ஆட்டோ வந்து நிற்கவும் சரியாக இருந்தது. ''சேகர் ! நிஜமாகவே நம்ப விமலா செத்துப் போய்விட்டாளா?'' என்று கதறிக் கொண்டே இறங்கின ரமேஷின் உடம்பு தள்ளாடியது. சேகர் அவனை உடனே கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

''கண்ட்ரோல், யுவர்செல்ப், ரமேஷ் !'' என்று கூறிய போது அவனாலும் தன்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை.


'' எப்படி முடியும், சேகர்.... அவள் என் தங்கை ஆயிற்றே. என் உயிர்த் தங்கை ஆயிற்றே!'' என்று ரமேஷ் கதறினான்.

இதற்குள் கலாவும் இறங்கி வந்துவிட்டாள். அவளைக் கண்டதும் ரமேஷின் துயரம் இன்னும் அதிகமாகி விட்டது. ''மிஸ் கலா! வாட் ஹாப்பண்ட் டு ஹர்... நிஜமாகவே விமலா இறந்து விட்டாளா?'' என்று கதறினான்.

''எஸ் ரமேஷ்! கடவுள் நம்மை ரொம்பச் சோதித்து விட்டார் ரமேஷ்! இப்படி ஒரு துர்மரணத்துக்கு அவள் ஆளாவாளென்று நான் நினைக்கவே யில்லை. ஓ, மைகாட்!'' என்று நெற்றியில் அறைந்து கொண்டாள் கலா. ''அதுவும் நீங்க போன வருஷம் அருமையாக வாங்கிக் கொடுத்தீங்களே, அந்தப் புடவையையே கட்டிக் கொண்டு கிளம்பியிருக்கா.... அதோடேயே இந்த உலகத்தை விட்டுப் போகணும்னு விதி போலிருக்கு—''

இதைக் கேட்டதும் ரமேஷால் தாங்கவே முடியவில்லை. ''சேகர்! அவள் எங்கே இருக்கிறாள்?... இப்பவே எனக்கு அவளைப் பார்த்தாகணும்... என் நெஞ்சு வெடிச்சுடும் போலிருக்கிறது'' என்று கதறினான்.

கலாவும் சேகரும் அவனை ஆளுக்கொரு பக்கமாகப் பிடித்துக் கொண்டு மெதுவாகப் பிணம் கிடந்த சரிவுக்கு அழைத்துப் போனார்கள்.





ரேகா சந்திரநாத்

'விமல்... மை டியர் விமல்!' என்று கதறிக் கொண்டே பிணத்தைத் திருப்பின ரமேஷ் திடுக்கிட்டான். ''என்ன கோரம் இது? யார் இப்படி நசுக்கினது? என் விமலாவின் ரோஜா முகத்தை — கடவுளே!'' என்று முகத்தில் அறைந்து கொண்டு அழுதான்.

கலாவாலும் சேகராலும் இந்தக் காட்சியைக் காணச் சகிக்கவில்லை. அவர்கள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு மௌனமாகக் கேவினார்கள்.

''விமலா! விமலா! என்னை விட்டுப் போய் விட்டாயா? எப்படி மனசு வந்தது, விமலா?'' என்று பிணத்தின் மீது விழுந்து முட்டிக் கொண்டு அழுதான் ரமேஷ்.

''ஸார், வர வரக் கூட்டம் சேர்ந்துக்கிட்டே வரது... சீக்கிரமா பாடியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப்போய் விட்டால் தேவலை'' என்று ஒரு சப் இன்ஸ்பெக்டர் சேகரின் காதருகில் வந்து கிசுகிசுத்தார்.

''அப்படியே செய்யுங்கள் இன்ஸ்பெக்டர்! பாடியை வண்டியில் ஏற்றிவிட்டு இந்த இடத்துக்குக் 'காவல்' போடுங்கள். அந்தப் பெரிய கல்லில் கைரேகை ஏதாவது இருக்கும்... காலையில் விசாரணை செய்து கொள்ளலாம்.'' என்று வறண்ட குரலில் சொன்னான் சேகர்.

சிறு குழந்தையைப் போல் கதறிக் கதறி ஏறத்தாழ உணர்வே அற்றுப் போய்விட்ட ரமேஷை மெதுவாகப் பிடித்து வந்து ஜீப்பில் ஏற்றிக் கொண்டார்கள் சேகரும் கலாவும்.

''அழாதீங்க ரமேஷ். தைரியமாய் இருங்க ரமேஷ்!'' என்றாள் கலா ஆறுதலாக.

''இனிமேல் எனக்கு யார் இருக்கிறார்கள்?'' என்று கேவினான் ரமேஷ்.

போலீஸ் தலைமையகத்தில், இண்டலிஜென்ஸ் பிரிவில், தனியறையில் நீண்ட சதுர மேஜை ஒன்றின் பின்னால் ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் சேகர் உட்கார்ந்து மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு எதிரே துயரமே உருவாக ரமேஷ்!

கடச் கட ஒலியுடன் உள்ளே வந்த மாலதி ரமேஷின் தலையை ஆதரவாக அணைத்துக் கொண்டு அவன் வாயருகில் டம்ளரைக் கொண்டு போனாள். யந்திரம் போல் ரமேஷ் மடக் மடக்கென்று அதைக் குடித்தான்.

திடீரென்று அவனுக்கு அசுர பலம் வந்து விட்டது போலிருந்தது. சிலிர்த்துக்கொண்டு எழுந்து மேஜை மீது ஓங்கிக் கையால் ஓர் அறை அறைந்துவிட்டு ''நீதான் காரணம்! அவள் இப்படிச் செத்ததற்கு நீதான் காரணம்'' என்று உறுமினான்.

சேகர் தலையைத் தாழ்த்தவே இல்லை. மௌனமாக இந்தக் குற்றச்சாட்டைத் தாங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் கண்ணோரத்தில் ஒரு துளி நீர் மட்டும் வழிந்தது.

''அழுகிறாயா, முட்டாளே — நன்றாக அழு! நான் அப்பவே சொன்னேன்.... இந்த ரகசிய வேலையில் அவளை ஈடுபடுத்தாதே! அவனிடம் அனுப்பாதே... அவன் அத்தனை நல்லவன் இல்லை என்றேன்...நீ கேட்கவில்லை!''



சேகரின் தொண்டை ஒரு தடவை விம்மி அடங்கிற்று.

அவனுடைய மௌனம் ரமேஷின் கோபத்தை இன்னும் அதிகமாகக் கிளறி விட்டுவிட்டது. ''நீ ஒரு அயோக்கியன். நீ அவளைக் காதலிக்கவே யில்லை. காதலித்திருந்தால் அவளை இப்படி ஓர் ஆபத்தில் மாட்டி விட்டிருக்க மாட்டாய் உன் சொந்தத் தங்கையாக இருந்தால் அனுப்பியிருப்பாயா?—''

''ரமேஷ்!'' என்று கத்திக் கொண்டு, எழுந்து நின்றான் சேகர். அவன் உடல் முழுக்கப் பதறிக் கொண்டிருந்தது. ''நிச்சயமாக அனுப்பியிருப்பேன் ரமேஷ்!... மாலதிக்கு மட்டும் 'நர்ஸிங்' தெரிந்திருந்தால் அவளைத்தான் மதுர பவனத்துக்கு அனுப்பியிருப்பேன். விமலாவை நான் எத்தனை அந்தரங்க சுத்தியாக நேசித்தேன் என்பது அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும். வீண் அபாண்டம் சொல்லாதே... நான் அவளை இழந்துவிட்டு உள்ளூறப் புழுப்போலத் துடித்துக்கொண்டிருக்கிறேனுக்கும்...'' என்றான்.

''உன்னை யார் நம்புவது?'' என்று குரோதமாகச் சிலிர்த்தான் ரமேஷ். ''கேவலம் ஒரு பெண்ணை உத்தியோக உயர்வுக்காகப் பயன்படுத்திக் கொண்டாய்.... அவார்டுக்காக... பிரஸிடெண்ட் மெடலுக்காக...!''

''இல்லவே இல்லை. நூற்றுக் கணக்கான அபலைப் பெண்களை அக்கரைச் சீமையில் சீரழியாமல் காப்பாற்றின பெருமை விமலாவுக்குத்தான் கிடைத்திருக்கும். அதைப் பற்றிய துப்பு அறிந்து வரவே அவள் போனாள். இந்தக் கோவிந்து பெரிய ஆள்...இவன் ஒரு பெரிய விஷச் சக்கரத்தின் ஒரு பல். இவன் பின்னால் ஒரு பெரிய கோஷ்டியே இருக்கிறது. துபாய்க்கு இளம் பெண்களைக் கடத்திச் சென்று விற்றுவிடுகிற கோஷ்டி. அதைக் கண்டுபிடிக்கத்தான் இரண்டு வருஷங்களாக எங்கள் இலாகா அரும் பாடுபட்டுக்கொண்டிருக்கிறது. பெங்களூரில் தனம் என்கிற பெண்ணைக் கண்காணித்ததில் இந்தக் கோவிந்து மீது சந்தேகம் வந்தது. கோவிந்து—தனம் சம்பாஷணைகளை டேப் பண்ணவும், கோவிந்தை 'ஸ்டடி' பண்ணவும் அவன் வீட்டுக்குள்ளேயே ஓர் ஆள் இருக்க வேண்டும் என்று நினைத்தோம். நோயாளியான அவன் மனைவிக்கு 'நர்ஸிங்' செய்கிறவளாக ஒருத்தியை உள்ளே நுழைத்தோம். விமலாவைத் தவிர நம்பிக்கையான ஆள் யார் இருந்தார்கள்?''

''நீ போலீஸ்காரன். எதையும் அழகாக ஜோடிக்க உனக்குக் கற்றுக் கொடுக்கவே வேண்டாம். உங்களுக்கெல்லாம் நெஞ்சில் ஈரம் என்பதே எப்போதும் கிடையாது.''

'ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்' என்று டெலிபோன் இடையில் புகுந்து ரமேஷின் பேச்சை வெட்டியது.

மாலதி டெலிபோனை எடுத்து ''ஹலோ! போலீஸ் ஹெட்குவார்ட்டர்ஸ்! இன்டலி

மாலை சூட வா

'டீன் ஏஜ்' குழுவினரைத் திருப்திப்படுத்தும் படம். மோதலில் பிறந்த காதல் திருமணத்தில் போய் முடிவதற்குள்ளேதான் எத்தனை சுவாரசியமான தடைகள்! கல்லூரியில் பிறந்த காதல் கிடுகிடுவென்று வளர்ந்து பெற்றோருக்குத் தெரியாமல் வீட்டைவிட்டு ஓடுகிற வரையில் தொடர்ந்து, கடைசியில் கதாநாயகனின் சிற்றன்னையின் உதவியினால் நல்லபடியாக முடிகிறது. நடிகர் வெண்ணிற ஆடை மூர்த்தி தமிழ்த் திரை உலகம் வரவேற்கக் கூடிய கதையாகப் புனைந்திருக்கிறார். ஹாஸ்யமாக வசனம் புனைந்துவெற்றி கண்டிருப்பவர் கோபு. சி. வி. ராஜேந்திரன் சிறப்பாய்ப் படத்தை டைரக்ட் செய்திருக்கிறார்.



கமலஹாஸன் கதாநாயகன். கல்லூரி மாணவனாயிருந்ததிலிருந்து, காதல் பாதையில் நடையாக நடந்து ஓட்டமாக ஓடித் தவித்து வெற்றி கண்ட வரையில் நன்றாய் நடித்திருக்கிறார். அவரோடு இணைந்து நடிக்கும் குமாரி மஞ்சுளா (கன்னடம்) தம் பொறுப்பைக் கூச்சம் இல்லாமல் நிறைவேற்றியிருக்கிறார். நமக்குத்தான் கூச்சமாக இருக்கிறது, பார்க்க.

மேஜர் சுந்தரராஜன், வி. கே. ராமசாமி இருவரும் அப்பாக்கள்! இருவருக்குமே அப்பாவாக நடித்து நல்ல அனுபவம்! சக்கைப் போடு போடக் கேட்பானேன்!

கிட்டத்தட்ட 'பாபி' டைப்பில் வளர்ந்திருக்கிறது திரைக் கதை. நகைச்சுவைப் படத்தை அதிகம் வளர்த்து, அலுப்புத் தட்டும்படி செய்யாத தயாரிப்பாளர்களைப் பாராட்ட வேண்டியதுதான்.

— காந்தன்





மலர் மங்கை

விரிந்த கூந்தல் கண்டால் வனதேவதை,
சிரித்த முகம் பார்த்தால் மனத்தேவதை!
கையில் மலர் கண்டாய், யாருக்கு?
மையல் மனம் பார்த்த மன்னருக்கு!

மேலட்டை வண்ணப்படம் : எம். சங்கர்

ஜெண்ஸ்!... எஸ்... எஸ்... இருக்கிறார். ஒன் மினிட்'' என்றவள் சட்டென்று ரிசீவரை மூடிவிட்டு ''அண்ணா! உனக்குத்தான் 'கால்' — ஜி. எச்.சிலிருந்து பேசுகிறாராம்.... சப் இன்ஸ்பெக்டர். முக்கியமான விஷயமாம்'' என்று பரபரப்புடன் ரிசீவரை நீட்டினாள்.

சேகர் அதைப் பாய்ந்து பற்றிக்கொண்டு ''ஹலோ, இன்ஸ்பெக்டர் ஐ ஆம் சேகர்! என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

''ஸார்! இங்கே ஒரு பெரிய தகராறு நடந்து போச்சு!''

''புரியும்படி சொல்லுங்கள் இன்ஸ்பெக்டர்!''

''அந்தப் பெண்ணின் உடலுக்கு உரிமை கொண்டாடிக் கொண்டு இன்னொருத்தன் வந்திருக்கிறான், ஸார். ஏகக் கலாட்டா பண்ணி விட்டான், ஸார்... அவன் 'கிப்' பாம் ஸார், அவள்... பெயர் சீலாவாம்—''

''என்னது?'' என்று திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான் சேகர்.

''இவனிட்டே ரொம்ப விசுவாசமாக இருந்தாளாம். அதைப் பொறுக்காத யாரோ தான் 'க்ளோஸ்' பண்ணி விட்டாங்களாம்... விதவையாம்.''

''?அப்படியா'' என்று கூவினான் சேகர்.

''ஏன் ஸார்! 'பாடியை இப்பவே என்கிட்டே குடுங்க' என்கிறான். சுவரில் முட்டி மோதிக் கொள்கிறான்.''

''மை காட்! இது என்ன குழப்பம்! - இன்ஸ்பெக்டர், அவள் 'கிப்'தான் என்கிறதுக்கு என்ன அடையாளம் காட்டுகிறான்?''

'' 'அவள் முதுகில் ஒரு மச்சம் நட்சத்திரம் மாதிரி இருக்கும்; பாருங்க' என்றான். பார்த்தோம். இருந்தது. விமலாவுக்கு அப்படி உண்டா ஸார்—?''

''இருங்கள், இன்ஸ்பெக்டர்! ஒன் மினிட்'' என்ற சேகர், கண்களை மூடிக்கொண்டான். அவன் கண் முன் விமலாவின் முதுகு வந்தது. ஒருநாள் அவன் அவளைத் தேடிப் போனபோது அவள் டிரஸ் செய்து கொண்டிருந்தாள். 'சேகர்! இந்த 'பாக் ஹுக்'கைச் சித்தே போட்டு விடுங்களேன்' என்றாள்...

''கிடையாது இன்ஸ்பெக்டர் - நிச்சயமாகக் கிடையாது. எனக்கு நன்றாக நினைவிருக்கிறது'' என்று மகிழ்ச்சியோடு கூவினான் சேகர். பிறகு, ''அந்தப் பயலைப் பிடித்து வையுங்கள்! நான் இதோ இரண்டு நிமிஷத்தில் அங்கே வருகிறேன்'' என்று போனை வைத்துவிட்டு எழுந்தான்.

''என்ன அண்ணா விஷயம்? எங்கே அவசரமாகப் புறப்படுகிறாய்?'' என்றாள் மாலதி.

''மாலு — ரமேஷ்! விஷயம் அடியோடு மாறிப் போய் விட்டது. ஏரிக்கரையில் கிடந்த பிணம் நம் விமலா இல்லை...''

''என்ன?'' என்று ரமேஷும் மாலதியும் வியப்புடன் கூவினார்கள்.

''ஆமாம். அது விமலாவுடையது இல்லை. யாரோ ஒரு கிறுத்தரமான பெண்ணுடையதாம். ஒரே மாதிரி ஜாக்கெட், புடவை, இருட்டு, சிதைந்துவிட்ட முகம் எல்லாம் நம்மை ஏமாற்றிவிட்டன. கலங்க அடித்து விட்டன.... அதற்கு உரிமையாளன் வந்து விட்டான்.''

''அப்படியானால் நம் விமலா எங்கே?'' என்று கேட்டான் ரமேஷ்.

''அவள் உயிரோடுதான் எங்கோ இருக்கிறாள். அதைத்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும். ரமேஷ்! நிச்சயமாக நாம் அதைக் கண்டுபிடித்தே தீருவோம்.... நீமட்டும் ஒத்துழைக்தால்—''

''என் ஒத்துழைப்பு நிச்சயமாக உண்டு. என் தங்கையைக் கண்டுபிடிக்க நான் எந்த ஆபத்தையும் சந்திக்கத் தயார்'' என்றான் ரமேஷ்.

சேகர் ஒரு நிமிஷம் மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டே தாடையைத் தடவினான்.

''சொல்லு அண்ணா! ஏதாவதும் நாங்கள் செய்கிறோம்'' என்றாள் மாலதி.

சேகர் தலையைக் கீழே கொண்டு வந்தான். ''ரமேஷ் — மாலதி! கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். மதுரபவனத்தில் ... ஒரு பெரிய விஷயம் நடக்கப் போகிறது. ... நான் ஊகிக்கிறேன். என்ன நடக்கப் போகிறது என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஏதோ ஒன்று — பயங்கரமான ஒன்று— நடக்கப் போகிறது என்பது மட்டும் நிச்சயம். அது நடக்கும்போது விமலா அங்கே இருப்பதை ''யாரோ'' விரும்பவில்லை. அதனால் தான் அவளை அப்புறப்படுத்திவிட்டார்கள்!'' என்றான்.

(தொடரும்)



ஸ்வீடன் நாட்டில் விவாகரத்துகள் ஏற்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் டெலிவிஷன் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. — பேஜண்ட்—பாலி

திறமை மிக்க திலகங்கள்

ஸ்ரீமதி விசாலாட்சி நெடுஞ்செழியன்



சொல்பவர்:
திரு கே. என். ஜார்ஜ்

பாரதப் பிரதமர் இந்திரா காந்தி எங்கள் சமூகப் பணிப் பள்ளிக்கு (*Madras School of Social Work*) விஜயம் செய்தபோது ஒவ்வொரு சிறு ஏற்பாட்டையும் நன்கு ஒத்திகை பார்த்து எங்கள் நிறுவனத்துக்கே சிறந்த பெயரை வாங்கிக் கொடுத்தார், ஸ்ரீமதி விசாலாட்சி. இந்தப் பள்ளியின் இயக்குனராகிய நான் அவரது சுறுசுறுப்பை இன்று நேற்றல்ல, நீண்ட காலமாகவே கவனித்து வந்திருக்கிறேன்.

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மூலம் டாக்டராகப் பரிணமித்த இவர், அந்நாளைய சேலம் மாவட்ட, ஜில்லா போர்டு நிர்வாகத்தில் தாய்சேய் நலத்துறை மருத்துவராகப் பணி செய்ய முன்வந்தார். அப்போது சேலம் மாவட்டம் விஸ்திரணத்தில் பெரியது. அதில் இருபதுக்கும் மேற்பட்ட தாய் சேய் பராமரிப்புக் கிளைகள் ஆங்காங்கு பரவி யிருந்தன. அவற்றுக்கு பஸ்களிலும், கட்டை வண்டிகளிலும், ஜட்கா வண்டிகளிலும் போய் மேற்பார்வை



பார்த்தாக வேண்டும். உடல் அலுப்பைப் பார்க்க அனுமதிக்காத அலுவல் இது. இந்தப் பணியில் இவர் ஈடுபட்டதால், இவரால் பொறுமையையும், அமைதியையும் தன்னுள் வளர்த்துக்கொள்ள முடிந்தது. இது பொது வாழ்விலும், சமூகப்பணியிலும் இவருக்கு இன்றும் வெகுவாக உதவுகிறது.

இவருக்குக் கோபம் வந்து நான் பார்த்ததில்லை. தம்மிடம் வேலை செய்பவர்களிடம் பொறுமையாக இன்சொல் பேசி வேலை வாங்கும் சாமர்த்தியம் உள்ளவர். பொது நிகழ்ச்சிகளின் முடிவில் வந்தனோபசாரம் சொல்லும் பொறுப்பை ஏற்றுக்கொண்டால், ஒரு சாதாரணத் தொண்டனைக்கூட அலட்சியம் செய்ய மாட்டார்.

சேலம் மாவட்டத்தில் இவர் செய்த 'தாய் – சேய் நல'ப் பணியைத் தொடர்ந்து ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கமே, இவரைச் சுமார் ஒன்றரை\வருட காலத்துக்குப் பூந்தமல்லிப் பகுதியில் 'குழந்தைகள் இறப்பு விகிதத்தை' ஆராயப் பணித்தது. இந்தப் பணியில் இவருக்குக் கிடைத்த அனுபவங்கள் அநேகம். வியாதியால் அவஸ்தைப்படும் குழந்தைகளைப் போய்ப் பார்த்து முடிந்தவரை காப்பாற்ற முயற்சி செய்ய வேண்டும். போதிய மருத்துவ வசதிகள் இல்லாமலோ வேறு காரணங்களாலோ ஏதாவது குழந்தை மரித்தாலும், அதற்கான காரணங்களைக் கண்டு பிடிக்க வேண்டும். இடையே, கிராமங்களில் தாயாகவிருக்கும் பெண்களைச் சந்தித்துப் பிறக்கவிருக்கும் குழந்தைகளை, வியாதிகளிலிருந்து தடுக்க என்ன முன்னேற்பாடுகள் எடுக்க வேண்டும் என்று எளிமையாக விளக்க வேண்டும். பாதிப் பேர்களுக்குச் சுலபத்தில் புரியாது. அப்படிப் புரிந்து கொண்டவர்களில் பலர் 'சரிதான்! எல்லாம் எங்களுக்குத் தெரியும்' என்று அலட்சியமாக இருந்துவிடுவார்கள்.

நாசரத்பேட்டைக்குப் பக்கத்தில் ஒரு குக்கிராமம். ஒரு கர்ப்பிணியைச் சந்திக்க, உதவியாளருடன் கால்நடையாகவே போய்ச் சேர்ந்தார். ஏழாவது அல்லது எட்டாவது குழந்தைக்குத் தாயாகப் போகும் ஒரு பெண்ணுக்குப் பிரசவ வேதனை கண்டிருந்தது.

இவர், பெண்ணின் கணவனைக் கூப்பிட்டு, ''இங்கே எந்த விதமான வசதியும் இல்லை. ஒரு கயிற்றுக் கட்டிலுக்குக்கூட வழியில்லை. உடனடியாக உன் மனைவியை ஒரு வண்டியில் போட்டு, பக்கத்து ஊர் பிரசவ விடுதிக்கு எடுத்துச் செல்ல வேண்டும். ஏற்பாடுகளைச் செய்'' என்று வேண்டினார். அந்த நாட்டுப்புறத்தான் சும்மா இருந்தான்.

இவருக்கு அபூர்வமாக அப்போது கோபம் வந்தது. 'ஆயிரம் அழுதாலும் அவன்தான்



''எங்க வீட்டு டெலிவிஷன் செட்டுக்குள்ளே ஓர் எலி புகுந்து எல்லாத்தையும் கடிச்சு நாசம் பண்ணிடுத்து..... வெளியிலேயும் வரமாட்டேங்குது....''

''ஐயையோ! அப்படின்னா இப்போ என்ன பண்ணறீங்க?''

''தினமும் டெலிவிஷனுக்குப் பதிலா எலிவிஷன் பார்த்துண்டிருக்கோம்!''

ஐயா பிள்ளை பெறவேண்டும். உனக்கென்ன! உடனே ஏற்பாடு செய்' என்று தாய்க்குலத்தின் சீற்றத்துடன் சொன்னார். ஆனால் அந்த ஆசாமிக்கோ அதைவிட ஆத்திரம்! ''அங்கே வந்தா மாத்திரம் அவளுக்குப் பதிலா நீங்களா பிள்ளை பெறப் போறீங்க! அந்தப் பிள்ளையை அவள் இங்கேயே பெறட்டும். நீங்க போங்க!'' என்று முடித்து விட்டான்.

ஆனால் ஸ்ரீமதி விசாலாட்சி பிரச்னை முடிந்ததாகக் கருதவில்லை. தமது உதவியாளரைப் பூந்தமல்லிக்கு அனுப்பி, 'ஆம்புலன்ஸ்' வரவழைத்து வலுக்கட்டாயமாக அந்தக் கிராமத்துப் பெண்ணை ஏற்றி அனுப்பி அவளுக்குச் சுகப் பிரசவம் ஏற்பட வழி செய்தார்.

குழந்தைகள் நலத்தில் போதிய அறிவும் அனுபவமும் பெற அரசாங்கத்தால் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டார். பெஞ்சமின் ஸ்பாக்ஸ் என்ற உலகப் பிரசித்தி பெற்ற டாக்டரிடம் மாணவியாக இருந்து நல்ல பயன் அடைந்தார். தாயகம் திரும்பியதும் அந்த அமெரிக்கர் எழுதியிருக்கும் 'குழந்தை நலம்' என்ற குறிப்புப் புத்தகத்தைத் தமிழாக்கம் செய்து விநியோகித்தார். ஐம்பதினாயிரம் புத்தகங்கள் தாய்மார்களுக்கு உபயோகப்பட்டன.

இதேபோல் ஆரோக்கிய வாழ்வு சம்பந்தமான பல ஆங்கிலக் கைப் புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். குழந்தை வளர்ப்பு, குழந்தை போஷாக்கு, கல்வி போதனை முதலிய விஷயங்களில் இவருக்கு நிறைய ஈடுபாடு.

இவர் கணவர் மாண்புமிகு நெடுஞ்செழியன், தமிழக அரசில் சுகாதார அமைச்சராக இருந்த வேளையில், இவர் நான்கு ஆண்டு காலம் தாம் வகித்து வந்த அரசாங்க மருத்துவத் துறைப் பொறுப்புக்களிலிருந்து விடுமுறை எடுத்துக் கொண்டு விட்டார். வீண் பேச்சுகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்னும் காரணத்தால்தான். கணவனும் மனைவியுமாக உலகப் பயணத்தை மேற்கொண்ட போது, உலகின் பல பாகங்களிலும் இவர் பெண்கள், உழைப்புக்கு மதிப்புக் கொடுத்து எந்தப் பாதகமான சூழ்நிலையிலும் தங்கள் பணிகளைச் செய்துகொண்டிருப்பதைக் கவனித்தார். தாமும் விடுமுறையை ரத்து செய்துவிட்டுத் தம் பணியில் ஈடுபட நினைத்தார். இவர் அதிருஷ்டம், இவருடைய கணவரிடமிருந்து சுகாதார இலாகா வேறு ஒருவருக்குப் போயிற்று. இவரும் தயக்கமில்லாமல் தம் பழைய அலுவலில் சேர்ந்தார். இப்போது தமிழகப் பொது சுகாதாரத் துறையில் இவர் ஓர் உதவி இயக்குனர்.

குழந்தைகள் நலனில் எவ்வளவு அக்கறையோ, அத்தனை அக்கறை இவருக்கு முதியோர் நலத்திலும் உண்டு. சற்று வசதியுள்ள வயோதிகர்கள் இளைய தலைமுறையினருக்குப் பாரமாய் இராமல் ஒதுங்கி வாழ ஒரு திட்டம் தயாரிக்கப் பட்டது. வெளி நாடுகளில் இப்படிப்பட்ட இல்லங்கள் நிறைய இருப்பதை இவர் பார்த்திருக்கிறார்.

இதற்கும் ஆட்சேபணைக் குரல் கிளம்பாமலில்லை. திருவல்லிக்கேணி அன்பர் ஒருவர் பத்திரிகையில் 'பணக்கார முதியவர்களுக்கு இல்லம் ஒரு கேடா?' என்று எழுதினாராம். ஒருவேளை இதையும் அனாதை இல்லம் என்று குழப்பிக் கொண்டு விட்டாரோ என்று சிரிக்கிறார் ஸ்ரீமதி விசாலாட்சி நெடுஞ்செழியன்.

தேசிய பெண்கள் சங்கத்தில் பிரதான பங்கு பெற்றிருக்கும் இவர், சர்வதேச மகளிர் ஆண்டை ஒட்டி, இந்த வருடம் சில திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகிறார்.

தமிழகக் குழந்தைகளின் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்துக்கும் உழைக்கும் அன்புத் தாய் இவர்.

கேட்டு எழுதியவர்: கோமதிஸ்வாமிநாதன்




சிந்தை கவரும்
இந்தியப் பிரிண்டுகள்
முந்தைய உலகின்
மோகனச் சாயல்
கட்டழகு மேனியைத்
தவழும் உறவு
சுவாசி நிறைந்த
டெரிகோஸா
கட்டாவ்


மனைவி : டெலிவிஷனுக்கு எதிர்லே உட்கார்ந்துகிட்டு போண்டா சாப்பிடாதீங்கன்னு சொன்னேனே, கேட்டீங்களா?
''ஒரு வாரமா டெலிவிஷன் பார்த்ததிலே எனக்குக் கழுத்து வலி வந்துவிட்டது டாக்டர்.....''
''ஏன்?''
''பசங்க எதுவும் செய்துவிடக் கூடாதேன்னு டெலிவிஷன் செட்டைத் தூக்கிப் பரண் மேலே வைச்சுட்டேன்.... அதனாலேதான்!''
டி.வி...ஹரி ஹரி!









அமெரிக்காவில் டெலிவிஷன் பெருமளவில் புகுத்தப்பட்டபோது பிரபல நகைச்சுவையாளரான பென்னெட் ஸெர்ஃபிடம் ஒருவர் கேட்டார்:

"டெலிவிஷன் வந்துவிட்டதனால் பத்திரிகைகளின் விற்பனை பாதிக்கப்படுமென்று நினைக்கிறீர்களா?"

"நிச்சயமாகப் பாதிக்கப்படாது."

"அதெப்படி அவ்வளவு நிர்மானமாகச் சொல்கிறீர்கள்?"

"வீடு திரும்பும்போது பத்திரிகையில் மீனைக் கட்டி எடுத்து வர முடியும்.... டெலிவிஷனுல் அப்படி முடியாதே!"

குருஷ்சேவ் மக்கள் தம்முடைய டெலிவிஷன் பேச்சை எப்படி ரசிக்கிறார்கள் என்று பார்ப்பதற்காக மாறுவேஷத்தில் நகர்வலம் வந்தார். ஒரு வீட்டில் ஒருவன் தன் மனைவியிடம், "உஸ், பேசாதே!..... கவனி!.... பேசாமல் குருஷ்சேவ் பேசுவதைப் பார்!" என்றான்.

குருஷ்சேவ் மகிழ்ந்துபோய் அவனிடம், "உனக்குக் குருஷ்சேவிடம் இத்தனை மதிப்பா?" என்றார்.

"மதிப்பாவது மண்ணாங்கட்டியாவது!.... அந்த மொட்டைத் தலையன் பேசும்போது நிமிஷத்துக்கொரு தரம் அவன் வாய் கோணும் என்று என் மனைவியிடம் சொன்னேன்.... அவள் நம்பவில்லை. இன்றைக்குக் கவனமாகப் பார்க்கச் சொன்னேன், அவ்வளவுதான்!" என்றான் அவன்.







சினிமாக் கதை 5

மானுடம் மடிந்தது

"இன்ஸ்பெக்டர் சார்! என் பெயர் மகிம் கோஷால். இந்த ஊர்க் கிராமப் பஞ்சாயத்துத் தலைவன். சொல்லப் போனால் சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்தவன்."

தனியா காளி கிராமத்துக் காவல் நிலையத்துக்குப் புதிதாக மாற்றலாகி வந்திருந்த இன்ஸ்பெக்டர் புவன்சேனிடம் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார் மகிம்கோஷால்.

"வாங்க, வாங்க! அமருங்க! உங்களைப் போன்ற பெரியவங்க இப்படித் தாமாக வந்து அதிகாரிகளை அறிமுகம் செய்து கொள்றது அபூர்வம். உங்களைச் சந்திச்சதிலே எனக்கு ரொம்ப மகிழ்ச்சி! எனக்கு ஏதாவது பணி இருந்தால் சொல்லுங்க, செய்யச் சித்தமாயிருக்கிறேன்!" என்றார் புவன்சேன் உபசாரமாக.

"ஹி...ஹி... ஒண்ணுமில்லீங்க. வந்து... வந்து... ஊரிலே வர வர அக்கிரமம் பெருத்துப் போச்சு. இதோ பாருங்க! ஏதோ என் பிழைப்புக்கு இரண்டு தோணி வாங்கி வாடகைக்கு விட்டிருக்கிறேன். ஒரு தோணிக்காரப் பயல் வாடகையைச் சரியாகத் தர்ற இல்லே. அவன் தோணியைக் கைப் பத்திக்குவோம்னு ஆளை அனுப்பிச்சா, அந்த அக்கிரமத்தை ஏன் கேட்கிறீங்க, மாபாவிங்க அவனை அடிச்சுப் பிய்ச்சுப் பிரிவைக் கட்டிட்டானுங்க! இதோ பாருங்க—இவன்தான் என் ஆள்; பேருபிது—எப்படிச் சேத்தை வாரிப் பூசி அனுப்பி யிருக்கிறானுங்கன்னு!"

"யாரு வேலைங்க இது?"

"மதுசூதன சௌதுரின்னு ஒரு தறிதலைப் பையன்! எப்போ பார்த்தாலும் போதையிலே மிதந்துகிட்டிருப்பான்! திருட்டுப் பயல், இப்போதான் கம்பி எண்ணிட்டு வெளியே வந்திருக்கிறான். சாதுப் பிள்ளைங்களை உசுப்பிவிட்டு வேடிக்கை பார்ப்பான். நீங்க கொஞ்சம் கண்டிச்சு வைச்சீங்கன்னா நல்லா இருக்கும்!"

"அதுக்கென்ன? உங்களுக்கு நேரேயே செய்துட்டாப் போச்சு! ஹவல்தார்! போய் அந்த மதுசூதனனைக் கையோடு அழைத்து வா!" என்று புவன்சேன் உத்தரவிட்டார்.



திரும்பிய ஹவல்தாரும் சகதியில் குளித்து விட்டு வந்திருந்தான். உண்மையாகச் சொல்லப் போனால், தோணித் துறைக்குப் போலீஸ் மிடுக்கோடு சென்றவன், தெரியாமல் சகதியில் காலை வைத்துவிட்டு வழுக்கி விழுந்து உருண்டு எழுந்திருந்தான். அதைக் கண்டு மதுசூதனன் கோஷ்டி சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்திருக்கிறது. விழுந்தவனைப் பார்த்துச் சிரிப்பதாவது என்ற ஆத்திரத்தில் இன்ஸ்பெக்டரிடம் வந்து வத்தி வைத்தான். மதுசூதனனும் அவன்

ஆட்களும் தன்னை இந்தக் கதிக்கு ஆளாக்கி விட்டார்கள் என்று!

இருவருக்கும் நேர்ந்த கதியைக் கண்ட பொழுது இன்ஸ்பெக்டருக்கு மதுசூதனன் காவாலியாக இருப்பான் என்றே தோன்றியது. போய்க் கட்டிப் பிடித்து இழுத்து வருமாறு அவர் உத்தரவிட்டுக் கொண்டிருக்கும் பொழுதே மதுசூதனன் வந்தான். '' என் பெயர்தானுங்க மதுசூதன சௌதுரி. இந்த ஊரிலே நல்லவங்களுக்கே காலமில்லேங்க. அவங்க அவங்க குடும்பம் நடத்தறது பெரும் பாடாயிருக்குங்க. தோணித்துறை வரும்படியும் குறைஞ்சு போச்சுங்க. போதாக்குறைக்குப் படகோட்டி நஸருத்தீன் குடும்பத்திலே குழந்தைகளை நோய் வேறு பாடாய்ப்படுத்திக்கிட்டிருக்குது! 'ஒரு நாள் பொறுங்க! உங்க வாடகைப் பணத்தைத் தந்துடறேன்'னு அவரு சொன்னாரு ! நெஞ்சிலே ஈவு இரக்கம் உள்ளவங்களா இருந்தால் விட்டுட்டுப் போக மாட்டாங்களா? அவரை அடிச்சுத் துன்புறுத்தித் தோணியைப் பிடுங்கிக்கப் பார்த்தாலுக. நான்தான் குறுக்கே புகுந்து மடக்கிப் போட்டேன். அடிக்கலே, கொல்லலே! ஏங்க, இது ஒரு தப்பா ?'' என்று கேட்டான்.

''பின்னே? நியாயம் வழங்குகிற காரியத்தை நீ உன் கையிலே எடுத்துக்கிறது நியாயமா? பஞ்சாயத்தார்கிட்டமல்ல போகணும்!''

'' இந்தப் பெரிய மனிசருகிட்டயா ? அப்போ நியாயம் கிடைச்சாப் போலத்தான் !'' மகிம் கோஷாலைச் சுட்டிக் காட்டினான் மதுசூதனன்.

''அதோடு போலீஸ்மேலே வேறே கைவைச்சிருக்கே நீ !''

''ஏழை மேலே அநாவசியப் பழியை ஏத்தாதீங்க! விறைப்பாக வந்த இவரு சகதியிலே வழுக்கி விழுந்தாருங்க! நாங்க சிரிச்சோம், மெய். வாழைப் பழத் தோலியில் காலை வைச்சு வழுக்கி விழுகிறவங்களைப் பார்த்தால், ஒருபுறம் 'ஐயோ, பாவம்'னு தோணினாலும் சிரிப்பு வரத்தானே செய்யுது. இந்த இயல்பை யாராலும் மாத்த முடியறதில்லீங்களே !''

'' ஷட் அப்! செய்யறதையும் செய்து விட்டு எகத்தாளம் வேறயா? தோலை உரிச்சுப்பிடுவேன், உரிச்சு! ஜாக்கிரதை!'' போலீஸ் கர்ஜனை புரிந்தார் புவன்ஸேன்.

'' மெய் பேசறதுக்கு இது தான் தண்டனைன்னு இந்தாங்க சவுக்கு!'' என்று அங்கிருந்த சாட்டையை எடுத்துக் கொடுத்தான் மதுசூதனன்.

அவனது செய்கை தமக்கு இளக்காரமாகப் படவே, புவன்ஸேன் ஆத்திரம் தீர அடிக்கலானார். அத்தனை அடிகளையும் பொறுத்துக் கொண்ட அவன், அவர் கை சளைத்து ஓய்ந்ததும், ''இப்போது திருப்திதானுங்களே!'' என்று அமைதியாகக் கேட்டான்.

'இவன் என்ன ஏகநாதரா, காந்தியடிகளா ?'

மனிதத் தன்மை இழந்து, தாம் செய்த காரியத்துக்காக வெட்கிய அவர் வாயிலிருந்து புறப்பட்ட சொல்: ''கெட் அவுட்!''

'' என்ன கல்லுளிமங்கன், பார்த்தீங்களா? இத்தனை அடிக்கும் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டானா?'' என்றார் மகிம் கோஷால்.

''கெட் அவுட் !''

அவருக்கும் அதே வார்த்தையைப் பிரயோகித்து விட்டுத் தலையைப் பிடித்துக்கொண்டார் இன்ஸ்பெக்டர் புவன்ஸேன்.

இப்படி அடிபட்டுக் கொண்டு போன மதுசூதனசௌதுரி தனியா காலி கிராமத்துக்கே பெரும் புள்ளியாக இருக்க வேண்டியவன். அவனது சித்தப்பா அல்லூர் பெருந்தனக்கார ஜமீன்தார்களில் ஒருவர். பிள்ளையில்லாத அவருக்கு அவன்தான் வாரிசாக விளங்கினான். ஆனால் பிள்ளையில்லா வீட்டுச் சொத்தை அபகரித்துச் செல்லக்

ரா. கிருஷ்ணன்



வங்காளப் போர்வை போர்த்திக் கொண்டு, சென்னை பம்பாய் படக் கோட்பாடுகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டு வெளிவந்துள்ள படம் அமானுஷ். காதலன்-காதலி, அவர்களை மேலும் வில்லன், அடிதடி, காதலி கடத்தல்—என்று இப்படிப் படிப்படியாக முன்னேறி இறுதியில் 'சுபம்' போடும் கதை.

கதாநாயகன் அதிர்ஷ்டசாலி! தீமையை அகற்றி நன்மைக்கு அடிகோலும் கட்டங்களில் எல்லாம், 'நான் இருக்கப் பயமேன்?' என்று நினைத்தபொழுது நினைத்த இடத்தில் தோன்றிப் படத்துக்கும் கதைக்கும் உயிர் ஊட்ட முயல்கிறான்.

வில்லனாக வரும் உத்பலதத் நாடகபாணி நடிப்பையே நினைவுபடுத்துகிறார். போலீஸ் அதிகாரியாக வரும் அனில் சட்டர்ஜியும் கதாநாயகனாக வரும் உத்தம் குமாரும் கூட இவ்விஷயத்தில் தங்கள் பங்கு சோடையில்லை என்று நிரூபிக்கிறார்கள்.

முகபாவத்தில் உணர்ச்சிகளைப் பின்னிக் காட்டி நடிப்புக்குப் பெருமை சேர்ப்பவர் ஷர்மிளா டாகுர். அடுத்தபடி பிரேமா நாராயணின் துறுதுறுப்பைக் கூறலாம்.

பொருள் பொதிந்த இந்திவரின் பாடல்கள், ஆலோக்தாஸ் குப்தாவின் படப்பிடிப்பு — இவை சக்தி ஸாமந்தாவுக்கு உதவுகின்றன. கலையை மறந்து காசைக் கருத்தில் கொண்டு விட்டதனாலோ என்னவோ, சக்தி ஸாமந்தா பாடல்களின் 'சிசுவேஷன்' கணக்கூடக் கோட்டை விட்டிருக்கிறார். போலீஸ் அதிகாரி விசாரணைக்கு வந்திருக்கும் நேரத்தில் கதாநாயகன் ஒரு பாடலை எடுத்து விட்டு அதிகாரியைப் பிரமிக்கவைக்கும் இடம் ஒன்று போதுமே!

சக்திபாத ராஜகுருவின் கதை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முந்திய நிலைகளில் உருவானது. ஆனால் படத்தில் வரும் ரூபாய் நோட்டுகளோ வெகு சமீபத்தில் வெளியானவை! ஆக மொத்தம் சக்தி ஸாமந்தா தூங்கி விட்டார்!

கழுகு ஒன்று காத்திருந்தது அவனுக்குத் தெரியாது.

"சித்தப்பா! ரேகா நடத்தும் பள்ளிக்கு அந்த நிலத்தைக் கொடுத்துவிடலாம் என்றிருக்கிறேன்! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான் மகிழ்ச்சி மீதக்க வீட்டுக்குள் நுழைந்த மதுசூதனன்.

ரேகாவுக்கும் அவனுக்கும் ஏற்பட்டிருந்த காதலையும், அது நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வரும் அதிசயத்தையும் பராபரியாகக் கேள்விப்பட்டிருந்த அவன் சித்தப்பா உள்ளூற மகிழ்ந்து, அந்த மகிழ்ச்சியை முகத்தில் தேக்கி, "நான் என்ன சொல்லக் கிடக்கிறது? உன் விருப்பத்துக்கு ஜமாய், போ!" என்றார்.

அருகிலிருந்த கணக்குப்பிள்ளை, "அந்த நிலத்தை எசமாவர் எனக்குத் தருவதாகச் சொல்லியிருந்தீர்களே!" என்று நினைவு படுத்தினார்.

"ஆமாம், சொல்லியிருந்தேன். குழந்தையின் ஆசையைக் கெடுக்கப்படாது. உனக்கு வேறு இடத்திலே தந்துவிட்டுப் போகிறேன்! கவலைப்படாதே! — ஆமாம், பள்ளிக்கூடம் கட்டுவதற்குப் பணம்....?" என்று கேட்டார் ஜமீன்தார்.

"அதற்கும் உங்களைத் தொந்தரவு படுத்தக் கூடாது. பள்ளிக்கூடம் கட்டிக் கொள்வது அவர்கள் பொறுப்பு — கிராமத்திலே சந்தா கிந்தா சேர்த்துக் கட்டிக் கொள்ளட்டுமே!" என்றான் மதுசூதனன்.

இரண்டு நாட்கள் கழித்து ஜமீன்தாரின் இரும்புப் பெட்டியிலிருந்து பெருந் தொகை திருட்டுப் போயிருந்தது. திருட்டுப்போன அந்தத் தொகை மதுசூதனின் அறையிலிருந்து கிடைக்கவும் செய்தது.

ரேகா — மதுசூதனன் காதலுக்கும் இந்தத் திருட்டுக்கும் முடி போட்டார் கணக்குப் பிள்ளை. இருவரையும் இணைத்து முடி போடுவதற்குப் பதிலாகப் பிரித்து வைக்கும் திட்டம் தான் அவருக்கு இலகுவாகப்பட்டது. ஜமீன்தாரும் அவர் கூற்றை நம்பினார்.

'நானே முந்திக் கொண்டு பணத்தைப் பற்றிக் கேட்டேன். கேட்டிருந்தால் கொடுத்திருக்கமாட்டேனா? எதற்கு இவனுக்கு இந்தத் திருட்டுப் புத்தி வரவேண்டும்? எனவே இவன் என் சொத்துக்கு வாரிசாக வர அருகதையற்றவன்!' இந்த முடிவுக்கு வந்த ஜமீன்தார் அவனைப் போலீசில் பிடித்துக் கொடுத்துச் சிறைக் கம்பிஎம் எண்ண வைத்து விட்டார்.

அபாண்டமாகத் தன் மீது திருட்டுக் குற்றம் சுமத்தப்படவே, விசாரணைக் கட்டத்தில் மதுசூதனன் ஆறுதலும் ஆலோசனையும் பெறக் காதலை நாடினான். ஆம், காதலி ரேகாவைச் சந்திக்கச் சென்றான். காதல் கை கொடுத்துவிட்டால் எந்தச் சுமையும் இலேசாகிவிடும் என்ற நினைப்போடு சென்ற அவனுக்கு, அது எரிமலையாக வெடிக்கவும் கூடும் என்ற நினைப்பே எழவில்லை.

"இனி இந்த வீட்டுப் படி ஏறாதீர்கள்! உங்களுக்கும் எனக்கும் ஒரு தொந்தமும் இடையாது!" அடியுண்ட பெண் நாகமெனச் சீறினாள் ரேகா.

"உண்மையில் நான் திருடவில்லை, ரேகா! எனக்கு எதிரியாக யாரோ முளைத்திருக்கிறார்கள், இந்தப் பழியை என் மீது சுமத்தியிருக்கிறார்கள். நான் ஒரு பாவமும் அறியேன்!" என்றான் மதுசூதனன்.

"எதற்கு இந்தக் கபட நாடகம்? 'இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா?' என்றுதான் இன்று வரை எண்ணிக் கொண்டிருந்தேன். சம்பா வந்து சொன்ன பிறகுதான் உங்கள் வண்டவாளம் முழுதும் தெரிந்தது!"

"சம்பாவா? யார் அது?"

"ஒன்றும் தெரியாதமாதிரி நடிக்காதீர்கள்! சம்பாவின் வயத்திலே உங்கள் குழந்தை வளருகிறது!"

"அபாண்டம்! இந்தக் கதையை யார் கட்டி விட்டது?"

"பிறத்தியார் யாரும் வந்து கதை கட்டிவிடவில்லை. நடந்ததைச் சம்பாவே நேரில் வந்து சொன்னாள்!"

''ஒரு பெண் வாய் கூசாமல் இந்தப் பொய்யைச் சொன்னாளா ?''

''பொய்யாக இருந்திருந்தால் இத்தகைய சொற்கள் ஒரு பெண்ணின் நாக்கில் புரண்டிருக்குமா ?'' பெண்மைக்குப் பெண்மை வக்காலத்து வாங்கிப் பேசியதோடு வாசற்கதவை அறைந்தும் சாத்திக் கொண்டது.

மதுசூதனனுக்கு இரத்த ஓட்டமே நின்று விட்டாற் போலிருந்தது. அப்படியானால் சுந்தர்வனத்து நீரோடைக் கரையிலே, நிலவு எரிக்கும் வேளையிலே, அவனும் ரேகாவும் பேசிக் கொண்டிருந்தது பொய்யா ?

''உங்களுக்கு என்மீது உண்மையான காதல் என்றால், இந்த நீரோடைக் கரையிலே எனக்கு ஒரு 'தாஜ்மகால்' நீங்கள் எழுப்ப வேண்டும்!''

''முடியாது !''

''அப்படியானால் உங்கள் காதல் பொய்!''

''இல்லை. காரணம், நான் ஷாஜஹான் இல்லை, நீ இறந்த பின் நான் உயிரோடு இருப்பதற்கு? — அதனால் முடியாத காரியத்தை நான் எப்படிச் செய்ய முடியும்?''

''அப்படியானால், இருவரும் இணைந்தே 'ரேகா சதன்' கட்டுவோம்.''

'இப்படிச் சொல்லி என் உள்ளத்தில் காதல் கோயில் கட்டியவள் என்னை ஏன் இப்படி வெறுக்கிறாள்! அப்படியானால் எங்கள் காதலுக்குச் சமாதி கட்டிவிட வேண்டியதுதானோ? காதல் மரித்தபின் மனிதத் தன்மைக்கும் சாவுமணிதானே அடித்தாக வேண்டும்?' இணைப்பு அறுந்த சங்கிலியாக அவன் சிந்தனை தொடர நடந்தான். கை விலங்கு வரவேற்று அவனைச் சிறையில் தள்ளியது.

தண்டனை முடிந்து திரும்பி வந்தவனுக்குச் சித்தப்பா உலகைவிட்டே ஏகிவிட்டார் என்பதும், அவரது சொத்து முழுதும் கணக்குப் பிள்ளையின் வசமாகி விட்டது என்பதும் தெரிந்தது. ஆயினும் சொந்த மண்ணை விட்டுப் பிரிய மனம் இல்லாமல், ஏழை எளியவர்களோடு அவர்களுக்கு உதவிய வண்ணம் வாழ்ந்து வந்தான். அதற்குக் கைமேல் கண்ட பலன்தான், அவன் அன்று முதுகில் செம்மையாக வாங்கிய சவுக்கடி.

''இன்ஸ்பெக்டர்! என்ன இருந்தாலும், நீங்கள் மதுசூதனனைப் பட்டை விரிட்டுப் போகும்படி அடித்திருக்கக் கூடாது. அவன் மானி; மனித தெய்வம்!'' என்றார் டாக்டர் ஆனந்தன்.

''எனக்குச் சொன்னவர்கள் அவனை மனித மிருகம் என்றல்லவா சொன்னார்கள்!'' என்றார் புவன்ஸேன்.

''அது அவரவர்கள் நோக்கு. ஒரு காலத்தில் இவன் என் தங்கைக்கு மனித தெய்வமாகத் தோன்றினான். இப்போது மனித மிருகமாகத் தோன்றுகிறான். திரும்பவும் அவன் கருத்து மாறுபட நாளாகாது என்று நினைக்கிறேன்!— இந்த ஊரில் இருந்தால், அவன் பல சூழ்ச்சிகளில் சிக்கி இப்படித்தான் அடிபடுவான். எங்கேயாவது தொலைவில் அவனுக்கு வேலை வாங்கிக் கொடுத்து அனுப்பிவிடுங்கள். பிழைத்துக் கொள்வான். நல்ல பெயரும் எடுப்பான்!''

டாக்டர் ஆனந்தன் சொன்னது பொய்க்கவில்லை. அவன் எல்லோருக்கும் நல்லவனாக நடந்து கொண்டு பணியாற்றினான்.

இருந்தாலும் சொந்த மண் நினைவு மட்டும் அடிக்கடி அவனுக்கு எழுந்து கொண்டே இருந்தது. அவனைக் காதலித்தவள் எத்தனை தான் வெறுத்தாலும், அவன் தூய காதல் மடிய மறுத்தது. எனவே சொந்த மண்ணை மிதித்துவரும் ஆசையில், அவன் அந்த நீராவிப் படகில் பயணமானான். அதில் எத்தனை இசைகேடான நிலையில் ரேகா சிக்கியிருந்தாள்? அவளது கற்பு சூறையாடப்படும் நிலையில் அல்லவா இருந்தது? அவளது வெறுப்புக்கு ஆளாகியிருந்தாலும், அவனால் அவளுக்கு உதவாமல் இருக்க முடியவில்லை. இரவு முழுதும் பாரா இருந்து அவள் கற்புக்குப் பங்கம் ஏற்படாமல் பாதுகாத்தான். அவனை மனித மிருகம் என்று எண்ணிய ரேகாவுக்கு...

''அண்ணா! அவர் நேற்றிரவு என்னோடு படகில் வரவில்லை என்றால் என் கதி என்னவாயிருக்கும்? நினைத்தாலே நெஞ்சம் நடுங்குகிறது!'' என்றாள் ரேகா.

''அவர் என்றால் எவர்?''

''அவர்தான் அண்ணா! சொத்து முழுவதையும் அந்தப் பாவி மகிம் கோஷாலிடம் பறிகொடுத்து விட்டுத் திருட்டுப் பட்டமும் சூட்டிக்கொண்டு அநாதைப் பிழைப்பு பிழைக்கிறாரே....''

''மதுசூதனனைச் சொல்கிறாயா? அவன் பெயரைக் கேட்டாலே முகத்தைச் சுளுங்கிக் கொள்வாயே, இன்று இத்தனை கரிசனத்துக்குக் காரணம்?''

''அவன் மீது சுமத்தப்பட்ட அத்தனை குற்றங்களும் பொய்யென ஆகிவிட்டன!'' திரும்பிப் பார்த்தால் இன்ஸ்பெக்டர் புவன் ஸேன் நின்று கொண்டிருந்தார்: ''ஜமீன்தாரின் இரும்புப் பெட்டியைத் தேட்டை போட்டு, மதுசூதனனின் அறையில் கொண்டு வைத்துத் திருட்டுப் பட்டம் சூட்டியவன் கணக்குப்பிள்ளை. அப்புறம் சம்பாவை ஏவி ரேகாவின் மனத்தில் வெறுப்பை விதைத்தவன் அதே கணக்குப்பிள்ளை. ஏன், ஜமீன்தாரின் உயிருக்கே உலைவைத்துச் சொத்து முழுவதையும் அபகரித்துக் கொண்டவனும் அதே கணக்குப்பிள்ளைதான்! ரேகாவையும் அபகரிக்கத் திட்டமிட்டு ஏமாந்து போனான்.''

''அடப் பாவி! என் தெய்வத்தை என் கண்களில் மண்ணைத் தூவி மிருகமாக்கப் பார்த்தாயே!'' என்று ரேகா கிறீச்சிட்டாள்.

''என் பெயர் மகிம் கோஷால். இந்த ஊர்க் கிராமப் பஞ்சாயத்துத் தலைவன்.. சொல்லப் போனால் சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்தவன்!''

இப்படித் தன்னை இன்ஸ்பெக்டர் முன் அறிமுகப்படுத்திக் கொண்ட மகிம் கோஷால் எல்லோருடைய கண்களிலும் மனிதத் தன்மை இழந்த மிருகமாக நின்றான்.




இண்டர்வியூவுக்குப் போன எல்லோரிடமும் கேட்கப்பட்ட கேள்வி - 'நீங்கள் சீட்டாட்டத்தில் எல்லாப் பணத்தையும் இழந்து விட்டீர்கள். ஒரே ஒரு பத்து ரூபாய் நோட்டு மட்டும் பாக்கியிருக்கிறது. என்ன செய்வீர்கள்?' - என்னபதில் சொன்னவருக்கு வேலை கிடைத்திருக்கும் ?
விடை: 'எனக்குச் சீட்டாடத் தெரியாது' என்று சொன்னவருக்குத்தான் ! -பேஜனட் - பாலி

ரிப்பேருக்காக அதிக செலவு செய்யாதீர்கள்

தவறாமல் உபயோகியுங்கள், முச்செயல் புரியும்

3 IN 1

த்ரீ-இன்-ஒன் ஆயில்



தையல் மெஷின், சைக்கிள், மின்விசிறி, பூட்டு, கீல் மற்றும் பல்வேறு வீட்டுப் பொருட்களைத் தவறாமல் மசகிட்டு பராமரிக்க வேண்டும். இல்லையேல், அவை துருப்பிடித்து பாழாகிவிடும்; தூசி அடைத்துக்கொள்வதால், தடங்கலின்றி அவை இயங்குவது பாதிக்கப்படும்.

எல்லா எண்ணைகளுமே ஒரே சீராகப் பலன் தருவதில்லை. த்ரீ-இன்-ஒன் ஆயில் தரமுயர்ந்த எண்ணை. அது 3 வழிகளில் செயலாற்றுகிறது.

✓ **மசகிடுகிறது**
—உங்கள் இயந்திரம் தடங்கலின்றி இயங்க உதவுகிறது.

✓ **சுத்தம் செய்கிறது**
—இது பிசுக்கை அகற்ற பிரத்தியேகத் திண்மையுடன் தயாரிக்கப்பட்டிருப்பதால், சீராகப் பரவி, தூசி அடைத்துக் கொள்ளாமல் தடுக்கிறது.

✓ **துருப்பிடிப்பதைத் தடுக்கிறது**
—இந்த எண்ணையில் மட்டுமே அலாதியான, துருவை எதிர்க்கும் பொருள் கலந்துள்ளது.

உங்கள் வீட்டிலுள்ள விலையுயர்ந்த பொருள்களைத் தவறாமல் சரியான மசகெண்ணை இட்டுப் பாதுகாத்திடுங்கள். த்ரீ-இன்-ஒன் ஆயில் உபயோகியுங்கள்.

த்ரீ-இன்-ஒன் ஆயில்

பாதுகாப்புக்கு—ஓர் இணையற்ற எண்ணை.



19

''கொலை செய்வதற்கு என்ன சாமர்த்தியம் வேண்டும்? உங்கள் திருமணம் தோற்றுவிட்டது என்று தெரிந்தபோதே, மனைவியிடமிருந்து விலகிக்கொள்ள முடியாத சாமர்த்தியம், கொலை செய்வதிலா இருக்கிறது? இந்தச் சாமர்த்தியங்கூட எனக்குக் கிடையாதா? என்று நீங்கள் கேட்பது ஆச்சரியமாக இருக்கிறது.''

கபூர் பதில் கூறவில்லை. இதுவரை பேசாமல் இருந்த விஜயா இப்போது அவரை மடக்கிக் கேள்விக்கு மேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டே இருக்கிறாள். கொலை செய்வதற்குச் சாமர்த்தியம் வேண்டுமா? இன்னொர் உயிரைப் பறிப்பதற்குச் சட்டம், சொந்த நாட்டு நலன் தூண்டுகிற தேசியம், பண்பாட்டுத் தற்காப்பு போன்ற நுண்மையான காரணங்கள்தாம் உரிமையைத் தருகின்றனவேயன்றி, பாதிக்கப்படுகின்ற தனி மனிதர்களுக்கு உரிமை கிடையாது. அணுகுண்டு என்ற 'டாமக்கிள்ஸ் கத்தி'யை மேலே தொங்க விட்டுக்கொண்டு, மனித சமுதாயம் தனிமனிதனுடைய நாகரிகத்தைப் பற்றிப் பேசுவது வேடிக்கைதான். என்னை வாழ்நாள் முழுதும் சித்திரவதை செய்தவளைக் கொல்ல எனக்கு உரிமை இல்லை. ஆனால் மானஸீகமான ஒரு கற்பனை உணர்ச்சிக்காக ஆயிரக் கணக்கானவர்களை நான் கொன்றால் வீரன் என்ற பட்டயத்தை நான் தொங்கவிட்டுக் கொள்ளலாம். கொலையைப் பொறுத்தவரையிலும் தார்மிக, அதார்மிக வரைமுறைக்கு இடையேயுள்ள எல்லைக் கோட்டைக் கண்ணுக்குத் தெரியாத ஆனால் சக்தி வாய்ந்த ஒரு மானஸீக ஸ்தாபனம் நிர்ணயித்து அதைத் தனிமனிதர்கள் மீது சட்டமாகச் சுமத்துவதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? நான் மோகினியைக் கொலை செய்தேனோ இல்லையோ — அதைப் பற்றி எனக்கே சந்தேகம் இருப்பது உண்மைதான். 'பாடி'யை விஜயா கேட்பது போல் அவர்கள் எப்படி அப்புறப்படுத்தியிருக்க முடியும்? அவளை நான் கொலை செய்துவிட்டதாக நான் நம்புவதுதான் ஏதோ ஒரு வகையான — குரூரமாக இருக்கலாம்; வக்கிரம் என்றும் வைத்துக் கொள்ளலாம் — திருப்தியை எனக்குத் தருகிறது. அப்படியானால் நான்தான் மோகினியைக் கொலை செய்தேன் என்று போலீஸில் சரணடைய என் உள் மனம் ஏன் மறுக்கிறது? வாழ்க்கையில் இழந்துவிட்ட தருணங்களை இன்னும் கொஞ்ச நாட்கள் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசைதான் காரணம். அப்படி நான் கொலை செய்திருந்தால், இது வெளி வராமல் போகாது. அப்படியே வெளிவராமலே போனாலும் மனச்சாட்சி என்னைக் கொன்றுவிடும். 'மனச்சாட்சி நம்மைக் கோழைகளாக்குகிறது!' மிகவும் வாஸ்தவமான வார்த்தை!

மோகினி இறந்திருக்கக் கூடாது என்றே நான் விரும்புகிறேன். அவர்கள் அவளைப் பதுக்கி வைத்துக் கொண்டு என்னிடமிருந்து பணம் பறிக்கட்டும். இதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. மோகினி வீட்டிலில்லை என்ற இந்நிலைக்காக நான் எத்தனை பணம் வேண்டுமானாலும் தரத் தயார்.

''நீங்கள் இப்படிப் பிடிவாதமாக இருந்தால் நான் உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறும்படியாக இருக்கும்'' என்றாள் விஜயா. சோபாவில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

''என்ன வாக்குறுதி?''

''நான் இதைப் பற்றி யாரிடமும் சொல்ல இல்லை என்ற வாக்குறுதி. ராகேஷுக்குச் சொல்லப் போகிறேன்.''

''என் பிரச்னை என்னுடையது. மற்றவர்களுடைய ஆலோசனை எனக்குத் தேவையில்லை.''

இந்திரா பார்த்தசாரதி

''அப்படியானால் என்னை ஏன் ஷம்மீனிடம் அனுப்பினீர்கள்? நீங்களேபோயிருக்கலாமே?''

''நீ என்னுடைய அந்தரங்கக் காரியதரிசி. எனக்காக அந்தரங்கமான காரியங்களைச் செய்ய வேண்டும். மற்றவர்களிடம் இதைப் பற்றி விவாதிக்க உனக்கு உரிமை இடையாது.''

''அந்தரங்கக் காரியதரிசி, ஆபீஸ் சம்பந்தமான அந்தரங்கக் காரியங்களைச் செய்யலாமே தவிர, உங்களுடைய தனிப்பட்ட அந்தரங்கமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்பது கட்டாயமில்லை.''

''நீ மறுத்திருக்கலாமே?''

''நீங்கள் ஏன் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.''

''என்னைக் கொஞ்ச நாட்கள் சந்தோஷமாக இருக்க விடமாட்டாயா? அப்படிக் கொலை நடந்தது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டால் நானே போலீஸில் சரண் அடைந்து விடுகிறேன்.''

''அப்படியென்றால் உங்களுக்கும் இதைப் பற்றிச் சந்தேகம்தான் என்றுதானே அர்த்தம்? பழியை உங்கள்மேல் போடுவதற்காக, நீங்கள் கழுத்தை நெரித்ததினால் மயக்கமடைந்திருக்கக் கூடிய மோகினியைக் கடத்திக் கொண்டு போய் அவர்களே கொலை செய்திருந்தால்? செய்யாத கொலைக்கு நீங்கள் ஏன் பழியைச் சுமக்க வேண்டும்?''

''மயக்கமடைந்த ஒரு பெண்ணை அப்புறப் படுத்துவது சுலபமான காரியமா? ஒரு பெரிய ஹோட்டலில் மற்றவர்களுக்கு இது தெரியாமலா இருக்கும்?''

''மயக்கம் தெளிந்த பிறகு அழைத்துச் சென்றிருக்கலாம். இதைப் பற்றி விசாரிப்பதில் என்ன தப்பு?''

''விசாரித்து உடனுக்குடன் இதற்கு முடிவு ஏற்பட வேண்டும் என்பதை நான் விரும்பவில்லை. ஒன்றுமே நடக்கவில்லை என்பதுபோல் நான் ஷம்மீனுடன் இன்னும் சில நாட்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பது தான் என் ஆசை.''

''அப்படியானால் என்னை ஏன் இதில் சம்பந்தப்படுத்தினீர்கள்? அவர்கள் உங்களை 'பிளாக்மெய்ல்' செய்கிறார்கள் என்பதற்கு உடன்பட்டு, ஷம்மீனுடன் சந்தோஷமாக இருப்பதுதானே?''

'''பிளாக் மெய்ல்' பணத்தை நானே நேரிலே போய்க் கொடுத்துவிட்டு, 'இதோ இருக்கிறது நீ கேட்ட பணம்' என்று சொல்லி அவளை என் விருப்பத்துக்கு இணங்கச் செய்தால் அது எப்படி 'ஒன்றுமே நடக்கவில்லை' என்று நான் பாவித்துக் கொள்வதற்கு உதவும்? ஷம்மீனை எப்படி நான் பாவிக்க விரும்புகிறேனே அந்தக் கற்பனைக்கு இது இடைஞ்சல்



செய்யாதா? பாவனைகளில் தப்பித்துக் கொள்ள விரும்பும் ஒரு கிழவனை ஏன் இப்படித் தாக்கிப் பேசுகிறாய்?''

கபூர் மிகவும் பலஹீனமான குரலில் இறைஞ்சுவது போல் இதைச் சொன்னார்.


விஜயாவுக்கு அவரைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது. நடப்பது நடக்கட்டும் என்ற அளவில், பாவனைகளையே சொர்க்கமாக நினைக்கும் அவர், யதார்த்தத்தை நோக்க விரும்பவில்லை. பெரிய பெரிய வியாபார நிறுவனங்களின் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்ப்பதில் தீர்க்க தரிசனம் காட்டும் இவர், தமது சொந்தப் பிரச்னையில், இப்படிப் பொறுப்பில்லாமல் நடந்து கொள்வது, அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு துறையில் மேதைத்தனம் என்பதை, வேறு பல துறைகளில் மனப் பக்குவத்தை விலையாகக் கொடுத்துப் பெற வேண்டும் போலிருக்கிறது! மோகினி இறந்திருக்கக் கூடும் என்று இவரே நம்பவில்லை; அதனால் தான், அப்படி அவள் திரும்பி வந்தாலும், விவாகரத்து செய்யப் போவதாக அவர் அப்பொழுது கூறியிருக்க வேண்டும். மோகினி இறந்தாளோ இல்லையோ, அவள் தம்முடன் இல்லை என்ற நிலையே இவருக்குப் போதுமானது! தாம் கொலை செய்துவிட்டதாக அவர்கள் கூறுவது இவருக்கு ஒரு பிடித்தமான கற்பனையாகவும் இருக்கிறது! அப்படிக் கொலை செய்திருந்தாலும், குற்றம் வெளிப்படும்போது, தண்டனையை ஏற்கவும் இவர் தயாராக இருக்கிறார்.... தம்மைத் தாமே வருத்திக் கொள்ளும் ஒரு வக்கிர ஆசையும் இவருக்கு இருக்கிறது!

இந்தப் பிரச்னையை எப்படித் தீர்ப்பது? ஒன்றும் நடந்து விடவில்லை என்பது போல் நானும் பேசாமல் இருந்துவிட வேண்டியது தானா? பின்னால் உண்மை வெளிப்படும்போது ஷம்மினுக்குப் பணம் கொடுக்கப் போனவள் என்ற முறையில், சாட்சி சொல்லும் அவசியம் எனக்கு ஏற்படாமலா இருக்கப் போகிறது? அப்பொழுது எனக்குத் தெரிந்த விவரங்களை நான் சொன்னால், ராகேஷ் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வார்? உண்மையை அவரிடம் சொல்லாமல் நான் மௌனமாக இருந்ததை அவர் மன்னிப்பாரா? எனக்கு யார் முக்கியம்? கபூரா? அல்லது ராகேஷா? தெய்வமே! என்ன தர்மசங்கடமான நிலைமை!

யார் எக்கேடு கெட்டுப் போனால் என்ன? நான் பேசாமல் வீட்டுக்குத் திரும்பிப் போய்






Incremin*
drops LYSINE-VITAMINS
TONIC APPETITE
STIMULANT



மகனின் வருங்காலத்தைப் பற்றிக் கவலைப்பட்ட ஒரு தந்தை அவனைச் சோதிப்பதற்காக ஒரு பரீட்சை வைத்தார்.

ஓர் ஆப்பிள், ஒரு புத்தகம், ஒரு பத்து ரூபாய் நோட்டு ஆகிய மூன்றையும் ஓர் அறையில் வைத்து அவனை உள்ளே போகச் சொன்னார்.

மகன் ஆப்பிளைச் சாப்பிட்டால் குடியானவனாகவும், நாவலைப் படித்தால் எழுத்தாளனாகவும், பணத்தை எடுத்தால் வியாபாரியாகவும் மாற்றத் திட்டமிட்டார்.

அரை மணி கழித்து அந்த அறையில் தந்தை ஆவலுடன் நுழைந்தார். அவரது மகன் ஆப்பிளைக் கடித்துக் கொண்டே, புத்தகத்தைச் சுவாரசியமாகப் படித்துக் கொண்டிருந்தான். பணம் அவன் சட்டைப் பையில் இருந்தது.

உடனே அச்சிறுவனின் தந்தை அவனை அரசியல் வாதி'யாக்கத் தீர்மானித்தார்!

—மன்னை சௌரிராஜன் நன்றி: மிர்ர்

விடுவதில் என்ன தப்பு? அம்மா சொல்வதி லும் நியாயம் இருக்கிறது. 'பெரிய இடத்து விவகாரம் சிக்கலில்தான் கொண்டு போய் விடும். மை காட்! இது எப்பேர்ப்பட்ட சிக்கல்! கபூர் ஏன் இவ்வளவு முட்டாளா யிருக்கிறார்?

டெலிஃபோன் ஒலித்தது. விஜயா எழுந் தாள்.

''மிஸ்டர் கபூரிடம் டாக்டர் சாட்டர்ஜி பேச வேண்டுமாம்'' என்றான் மணி.

கபூர், யார் என்று அறியும் பாவனையில் விஜயாவைப் பார்த்தார்.

''டாக்டர் சாட்டர்ஜி'' என்றாள் விஜயா. கபூர் ஃபோனை வாங்கிக் கொண்டார்.

''எஸ்... கபூர்..... உங்களுக்கு யார் சொன்னார்கள்? ஐ ஸீ... ஆமாம்... தினசரி நடக்கிற குடும்பச் சண்டைதான்.... சிநேகி தர்கள் வீட்டுக்குத்தான் போயிருப்பாள், வந்துவிடுவாள் என்று நம்புகிறேன்... இதைப் போய்ப் பெரிதுபடுத்தி உங்களுக்கு ஃபோன் பண்ணி அஷோக் கேட்பான் என்று நான் எதிர்பார்க்கவில்லை. தாங்க்யூ....''

அவர் போனை வைத்துவிட்டு அணைந் திருந்த சுருட்டை மறுபடியும் பற்ற வைத்துக் கொண்டார்.

''ஸ்டுப்பிட் ஃபூல்...!'' என்றார் கபூர் கோபத்துடன்.

விஜயாவுக்குப் புரிந்தது. அஷோக் டாக் டர் சாட்டர்ஜிக்குப் போன் செய்து விசாரித் திருக்கிறான். இன்று காலையிலிருந்து இது தான் அவன் வேலையாக இருந்திருக்க வேண் டும். மிஸஸ் கபூர் காணாமல் போய்விட்டாள் என்ற செய்தி கபூருடைய நண்பர்கள் அனைவ ருக்கும் இதற்குள் தெரிந்திருக்கும். கபூர் இதைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ள வில்லை என்பது குறித்தும் பலர் சாட்சி கூறப் போகிறார்கள்! மிஸஸ் கபூருக்குப் 'பெரிய இடங்களில்' நிறைய 'சிநேகிதர்கள்' உண்டு. அவர்கள் சும்மா இருக்கப் போவதில்லை. அஷோக்கையே தூண்டிவிட்டுப் போலீஸில் புகார் செய்யும்படி அவர்களே யோசனை கூற லாம்..... குடும்பப் பொறுப்பையும், கௌர வத்தையும் தாங்கிக் கொண்டிருப்பதாக நினைக்கும் அஷோக போலீஸில் புகார் செய் தாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை...

கபூர் ஃபோனை எடுத்து 'டயல்' செய்தார்.

''யார் பேசுவது? ஷம்மீனா? இன்றிரவு என்னால் அந்த ஹோட்டலுக்கு வர முடி யாது. வந்தால், இது பலருடைய கவனத்தை ஈர்க்கலாம். ரத்தன்லால் அறைக்கு நீ வந்து விடு..... நீ எனக்குத் தேவை.... நான் உனக்கு வேறு காரணங்களுக்காகத் தேவை யாக இருக்கலாம்... ஐ நோ, ஓ.கே.....''

''மறுபடியும் அவளைப் பார்க்கப் போகி றீர்களா?'' என்று கேட்டாள் விஜயா.

''எஸ்....''

''இவ்வளவு நடந்த பிறகுமா? அவர்கள் அயோக்கியர்கள் என்று உங்களுக்கு இன் னுமா புரியவில்லை?''

''அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நானும் யோக்கியன் இல்லை.''

''ஹுக்... மிஸஸ் கபூரைக் காணவில்லை என்பது இப்பொழுது நிறையப் பேர்களுக்குத் தெரிந்துவிட்டது.... இது எங்கு கொண்டு போய்விடும் என்பதைப் பற்றி யோசிக்கவே இல்லையா?''

''தெரியும்..... தெரிவதால்தான் இழந்த தருணங்களுக்காக நான் பின்னால் வருத்தப் படக் கூடாது என்பதற்காக இப்போது ஷம்மீனைப் பார்க்க நான் விரும்புகிறேன். வியாபார உலகில் எத்தனை அயோக்கியர்களை நான் தினந்தோறும் சந்திக்கிறேன்? அவர்க ளோடு சமரசம் செய்து கொண்டு நான் ஒவ் வொரு நிமிஷத்தையும் காசாக்கவில்லையா? இப்படிப் பார்க்கும்போது, நான் எந்த அள வுக்கு யோக்கியன்? என் பொருளாதார அறிவு இந்த முதலைகளுக்குத்தானே இதுவரை பயன்பட்டிருக்கிறது! ஷம்மீன் மீது கல் லெறிவதற்கு முன்னால் அப்படிக் கல்லெறிவ தற்கு எனக்குத் தகுதி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்...கருமீன்கள் ஆளும் நாட் டில் எது செய்தாலும் அது நியாயந்தான்.''

மறுபடியும் ஃபோன் ஒலித்தது. கபூரே எடுத்தார்.

''எஸ்...கபூர்... ஹலோ... குட்மார்னிங் மிஸ்டர் ரவோஜா...உடனே நான் வர வேண் டுமா? என்ன விஷயம்? என்னது? ரீட்ஜ் அஃ லிலா? மைகாட்...இஸ் இட் ட்ரூ? அஞ்சலி அங்கு இருக்கிறாளா? இதோ வருகிறேன்....''

அவர் போனைக் கீழே வைத்தபோது, முகம் வெளிறிப் போயிருந்தது.

''என்னது?'' என்று கேட்டாள் விஜயா.

''உடல் கிடைத்துவிட்டது...'' என்றார் கபூர். (தொடரும்)


சிந்தால்
வாக்குறுதி...
*மேனியெழிலுக்கு முழுப் பராமரிப்பு
*புதுமை குன்றாத நறுமணம்
*துர்நாற்றத்திலிருந்து சிறந்த பாதுகாப்பு
CINTHOL
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
...சிந்தால் மட்டுமே நிறைவேற்றக்கூடியது.

வெகு தூரத்தில் நடக்கும் ஒரு நிகழ்ச்சியைச் சினிமாப் படம் பிடித்து, அப்படத்தை மின் அலைகளாக மாற்றி வாயு மண்டலத்தில் பரவச் செய்து மீண்டும் அந்த அலைகளை நம் வீட்டு அறையிலுள்ள ரேடியோ போன்ற ஒரு பெட்டியின் இரண்டடி அகலமுள்ள கண்ணாடித் திரையில் சினிமா போன்று படமாக விழச் செய்வது **டெலிவிஷன்**.

கடந்த 1959ம் ஆண்டு பாரதத்தில் முதலாவதாகத் தில்லி நகரில் டெலிவிஷன் ஒளி—ஒலிபரப்பு (இனி ஒலிபரப்பு என்றே கூறுவோம்) எளிய முறையில் தொடங்கியது. தொடர்ந்து ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாசார (Unesco) நிறுவனத்தைச் சேர்ந்த ஜான் வில்கின்ஸ் என்ற நிபுணரது தலைமையில் பாரதம் வந்த குழுவின் யோசனையின் பேரில் பாரதத்தில் 112 கோடி ரூபாய் பெறுமானமுள்ள டெலிவிஷன் வளர்ச்சித் திட்டம் உருவாகி, தற்சமயம் பம்பாய், ஸ்ரீநகர், அமிர்தசரஸ் ஆகிய நகரங்களில் டெலிவிஷன் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகி வருகின்றன. நிகழும் ஆகஸ்ட் ஒன்பதாம் தேதியிலிருந்து கல்கத்தா



விலும் டெலிவிஷன் ஒலிபரப்பு தொடங்கியுள்ளது.


1923ம் ஆண்டு டாக்டர் விளாட்மீர் ஸ்வொரிகின் (Vladimir Sworykin) என்ற விஞ்ஞானி (அமெரிக்க பிரஜை) கண்டுபிடித்த Iconoscope என்ற கருவி இந்நாளைய டெலிவிஷன் பெட்டியில் உள்ள எலெக்ட்ரானிக் கருவிக்கு (TUBE) ஆதாரமாக விளங்குகிறது. இதன் காரணமாக டாக்டர் ஸ்வொரிகின் ''டெலிவிஷனின் தந்தை''யாகக் கருதப்படுகிறார். நமது கண்கள் ஒரு புத்தகத்தின் பக்கத்தை இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் படிப்பதுபோல் டெலிவிஷனில் உள்ள எலெக்ட்ரானிக் கருவி நிகழ்ச்சிகளின் பிம்பத்தை செகண்டுக்கு 625 வரிகள் வீதம் திரையில் விழச் செய்து நமக்குப் படமாகத் தெரிய வகை செய்கிறது.

ஆகஸ்ட் 15ந் தேதி முதல் சென்னையின் கூவம் நதிக் கரையில் அமைந்துள்ள டெலிவிஷன் கேந்திரத்திலிருந்து மாலையில் சுமார் இரண்டரை மணி நேரம் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளை அக்கேந்திரத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள (மேற்கே கிண்டிவரை) மக்கள் தமது டெலிவிஷன் பெட்டிகளில் காண முடியும். இந்தத் தூரம் வருகிற பொங்கல் தினத்தை யொட்டி 80 கிலோ மீட்டராக அதிகரிக்கப்படும். தவிர காலையில் புதுமுக வகுப்பு மாணவர்களுக்கெனப் பாடங்களும் டெலிவிஷனில் ஒலிபரப்ப ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. தமிழக அரசு இப்பாட நிகழ்ச்சிகளுக்காகப் பல டெலிவிஷன் 'செட்'டுகளைப் பள்ளிகளுக்குக் கொடுத்துதவ முன்வந்திருக்கிறது.

சென்னை டெலிவிஷன் கேந்திரத்துக்குத் தேவையான புரொட்யூசர்கள், காமிரா நிபுணர்கள் முதலிய பல அலுவலர்கள் தில்லியில் உள்ள பயிற்சி நிறுவனத்திலும் பூனாவில் உள்ள பிலிம் டெலிவிஷன் இன்ஸ்டிட்யூட்டிலும் பயிற்சி பெற்றவர்கள்.



- விண்வெளி ஒலிபரப்பு - கிராமத்துக்கான விசேஷ டெலிவிஷன் 'செட்'.
- ஆந்திர மாநிலத்துக் கிராமம் ஒன்றில் அமைக்கப் பட்டுள்ள SITE டெலிவிஷன் '' ஏரியல் ''
- வகுப்பறையில் டெலிவிஷன்.
- டெலிவிஷன் காட்சியை ஆவலுடன் காணும் கிராம மக்கள்.
- டாக்டர் ஸ்வொரிகின்.
- கிராம ஒலிபரப்புக்குப் பயனாகும் செயற்கைச் சந்திரன்.








கடந்த பதினாறு ஆண்டுகளாக வளர்ந்து வந்துள்ள அகில இந்திய டெலிவிஷன் பிரிவை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுத் திறமையாக நடத்தி வரும் பெருமை திரு பி. வி. கிருஷ்ணமூர்த்தியைச் சாரும். கடந்த முப்பத்தைந்து வருடங்களாக வானொலி ஒலிபரப்புக்கும் டெலிவிஷனுக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட திரு கிருஷ்ணமூர்த்தி செல்லாத தேசமில்லை. கிராமிய ஒலிபரப்பு சம்பந்தமாக உலகத்தில் நடக்கும் எந்த மகாநாட்டிலும் திரு கிருஷ்ணமூர்த்தி கலந்து கொள்கிறார். ஐ.நா.வின் ஓர் அங்கமான உணவு, விவசாய நிறுவனத்தின் கிராமிய ஒலிபரப்புப் பிரிவுக்கும் ஆலோசனையாளராக இருந்து வருகிறார்.

ஆசியாவில் ஜப்பானில்தான் அதிக எண்ணிக்கையுள்ள (சுமார் இரண்டரைக் கோடி) டெலிவிஷன் செட்டுகள் இயங்கி வருகின்றன. தற்சமயம் பாரதத்தில் (சென்னை தவிர) மொத்தம் சுமார் மூன்று லட்சம் டெலிவிஷன் செட்டுகள் உபயோகத்தில் உள்ளன.

டெலிவிஷன் மூலம் ஏற்படக் கூடிய பலன்கள் பலவுண்டு. டெலிவிஷன் செட்டுகளையும் அதற்குத் தேவையான இன்ஜினியரிங் கருவிகளையும் தயாரிக்கும் ஆலைகள் பல தோன்றிப் பாரதத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். பலருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. கல்வி நிகழ்ச்சிகள் தவிர கிரிக்கெட் 'டெஸ்ட்' மாட்ச் போன்ற விளையாட்டுக்களையும் வீட்டிலிருந்தபடி பார்க்கலாம். சென்னையில் தீப்பற்றிய எல். ஐ. ஸி. கட்டிடத்தில் நடந்த தீயணைப்பு வேலைகளைத் தில்லியிலுள்ளவர்கள் தம் டெலிவிஷன் செட்டுகளில் காண முடிந்தது. பெரிய அளவில் டெலிவிஷன் துறை வளர்ச்சி அடையும்போது விவசாய வளர்ச்சி, குடும்பக் கட்டுப்பாடு முயற்சி போன்றவற்றுக்குப் பேருதவி புரியும்.

பாரதத்தில் டெலிவிஷன் மற்றொரு சாதனையையும் உருவாக்கியுள்ளது. Satellite Instructional Television Experiment (SITE) என்று கூறப்படும் பரீட்சார்த்த விண்வெளி ஒலிபரப்பு அது. அஹமதாபாத், தில்லி, இவ்விரு நகரத்து டெலிவிஷன் கேந்திரங்களிலிருந்து நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் மின் அலைகளாக மாற்றி அவற்றைப் பூமிக்கு உயரே இருபதாயிரம் மைல்களுக்கு அப்பால்



உள்ள செயற்கைச் சந்திரன் மூலம் பிரதி பலிக்கச் செய்வார்கள். அந்நிகழ்ச்சிகளை ஆந்திரா, கர்நாடகம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய ஆறு மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 2400 கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள டெலிவிஷன் செட்டுகளில் மக்கள் காண்பார்கள். இத்திட்டத்தை ஆகஸ்டு முதல் தேதியன்று பிரதமர் இந்திரா காந்தி தொடங்கிவைத்தார்.

இந்த விசேஷ செயற்கைச் சந்திரனைக் கடந்த மே மாதம் அமெரிக்கா கேப் கென்னடி தளத்திலிருந்து விண்வெளிக்கு அனுப்பி வைத்திருக்கிறது.

கிராம மக்களுக்குப் பயன் தரும் வகையிலும் எளிதில் புரியும் வகையிலும் நிகழ்ச்சிகள் தயாராகியுள்ளன. இந்த மாபெரும் முயற்சியை நிர்வகிக்கும் பொறுப்பையும் திரு பி. வி. கிருஷ்ணமூர்த்தியே ஏற்றிருக்கிறார்.

—ஜனார்தனன்

ஜூன் 29ந் தேதி கல்கி இதழ் கடைசிப் பக்கத்தில் திரு கண்ணதாசன் எழுதியிருப்பது ஏற்புடையதாக இல்லை. தொழில் சார்புடையதாகக் கல்வி அமைந்திருப்பது வேலை இல்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கும் என்பது உண்மையேயானாலும் அதற்காக மருத்துவத் துறையில் குறைந்த காலப் படிப்பினை பரீட்சித்துப் பார்ப்பது சரியல்ல. இதில் ஆபத்துக்கள் பல உள்ளன. இப்போது மருத்துவக் கல்லூரியில் படித்து வெளியே வரும் புதிய டாக்டர்களின் ஆற்றல் குறைவாக இருப்பதாகத் திரு கண்ணதாசனே கூறியுள்ளார். அவ்வாறிருக்க, குறைந்த கால அளவில் டாக்டர் பயிற்சி அளிப்பது என்பது ஒப்புக்கொள்ளக்கூடியதாக இல்லை. எங்களது வி. எச். எஸ். (வாலண்டரி ஹெல்த் சர்வீஸஸ்) கிராமப்புற மக்களுக்கு உதவுகிற அருமையான திட்டம் ஒன்றை அமல்படுத்தி வருகிறது. இதுபற்றிய கட்டுரை ஒன்று கல்கி 12–5–74 இதழில் இடம்பெற்றுள்ளது. இத்திட்டம் (Mini Health Centres) விரிவாக்கப்பட்டால் கிராமப்புறங்களுக்கு வைத்திய உதவி அளிக்கும் பிரசினைக்குத் தீர்வு காணலாம்.

சென்னை-20
12-7-75 டாக்டர் கே. எஸ். சஞ்சீவி

'நான் இப்போது சிறு குழந்தைபோல் நூல்களைப் படித்துக் கொண்டு வருகிறேன்' என்ற ராஜாஜியின் வாசகத்தைத் திருவள்ளுவரும் நம்மாழ்வாரும் என்ற கட்டுரையில் படித்தேன். 'பாரத வர்ஷத்தின் முதல் குழந்தை ராஜாஜி. அவர் க்ஷேமமாக இருந்தால் தேசம் க்ஷேமமாக இருக்கும்' என்று ஸ்ரீ காஞ்சி பெரியவர்கள் ஸ்ரீ சதாசிவம் அவர்களிடம் பல ஆண்டுகளுக்கு முன் சொன்ன வாசகம் என் நினைவில் வந்தது.

குழந்தை உள்ளம் படைத்த ராஜாஜி பாரதியாரைத் 'தமிழ்த் தாயின் செல்வக் குழந்தை, வரப்பிரஸாதர்' என்று ஞானரதம் நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் வருணித்துள்ளதும் நினைவில் எழுகிறது.

சென்னை—75
31—7—75 வி. ச. வாசுதேவன்

'ரேகா சந்திரநாத்தின் ''கவரில் இரு விழிகள்'' சிறப்பான ஆரம்பம் போங்கள். முடிவுப் போட்டியில் பங்கு கொள்கிறேனோ இல்லையோ தொடர்கதையைக் கவனமாகப் படிப்பேன்.

ஆமாம், ஆகஸ்ட் 31 இதழ் காதல் சிறப்பிதழ் என வெளியிட்டு, கண்ணதாசனின் ''காதல் என்பது....'' கட்டுரையை 3—8—75 இதழிலேயே வெளியிட்டு விட்டீர்களே! அட்வான்ஸாக இருக்கவா?

ராணிப்பேட்டை
31—7—75 டி. பி. கோபால்

நெடுங்காலமாய்க் கல்கி பத்திரிகையைப் படித்து வரும் நான் விலை உயர்வினை அறிந்தும் வருத்தமடைந்தேன். ஆனால் 3—8—75 கல்கி இதழில் ஆசிரியர் ''அன்பார்ந்த நேயர்களுக்கு'' பகுதியில் விலை உயர்வுக்கான இரு காரணங்களை 'பானைச் சோறுக்கு ஒரு சோறு பதம்' என்பதுபோல் விவரமாய் விளக்கி எழுதியிருப்பதைப் பார்த்தபோது என்னுடைய மனம் நெகிழ்ச்சி அடைந்தது. புதிய அம்சங்களை அளித்து மேலும் மேலும் கல்கி இதழைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.


திருவான்மியூர்
31—7—75 ந. வே. பாலசுப்ரமணியன்

ருக்மிணி பார்த்தசாரதி அவர்கள் எழுதியுள்ள மகள் மாலதி மிகவும் கருத்துச் செறிந்ததாயுள்ளது. ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்பதைத் தகர்த்து எறிந்துள்ள அருமையான சிறப்புச் சிறுகதை. ஆயிரமென்ன பதினாயிரமே தரலாம். அமரர் கல்கி அவர்களின் ஆன்மாவுக்கு மகிழ்ச்சியாயிருக்கும்.

வேலூர்—6
31—7—75 லட்சுமி சபேசன்

கல்கி 3—8—75 இதழில் தலையங்கம் படித்தேன். இன்றையச் சூழலுக்கு ஏற்ப எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து அகில இந்திய அடிப்படையில் செயல்படக் காமராஜ் ஒருவரால்தான் முடியும். இந்திய ஒருமைப்பாட்டில் கருணாநிதிக்கு உண்மையான பற்று இருக்குமானால், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தம் கட்சியின் பெயரை, பாரத முன்னேற்றக் கழகம் என்று மாற்றட்டுமே!

மெட்டுக்குண்டு—1
1—8—75 எ. தமிழ்மணி ரெட்டி


பெண்கள் என்றாலே 'குறிப்பிட்ட' சில
தினங்களில் அசௌகரியமும்
வேதனையும் ஏற்படுவது சகஜம்.
அமைதியற்ற 'குறிப்பிட்ட' இக்காட்
களில் மனச்சோர்வும் அயர்ச்சியும்
ஏற்படக்கூடும். கவலை வேண்டாம்.
ஸாரிடான் உங்களுக்கு
உறுதுணையாக இருக்கும்.
அதன் விசேட
கலவைமுறை
வலியிலிருந்து
உங்களுக்கு
நிவாரணமளித்து,
மனச்சோர்வை அகற்றி,
அமைதியூட்டிப்
புத்துணர்ச்சியளிக்கிறது.
இங்குதான் ரோஷின்
சர்வதேச ஆராய்ச்சி
உங்களுக்காக செயல்
படுகிறது.
ஒரே ஒரு ஸாரிடான் போதும்
ட்ரேட்மார்க்
'ரோஷ்'
HT-RP. 8613


தேவைகளை சொந்தமாகப் பூர்த்தி செய்வதை நாங்கள் வலியுறுத்துவது எஃகுத் தயாரிப்புத் துறையுடன் மட்டும் நிற்கவில்லை.

ஆதித்யபூரில் உள்ள எங்களது மாபெரும் பராமரிப்புத் தொழிற் கூடம் ஒன்றிலேயே நாங்கள் சிக்கலான மிஷின்களையும் துணை பாகங்களையும் சொந்தமாக உருவாக்குவதன் மூலம் இவற்றின் இறக்குமதியைத் தடுத்து ஆண்டுதோறும் தேசத்திற்காகப் பெருமதிப்புள்ள அன்னியச் செலாவணியை மீதப்படுத்துகிறோம்

ஆண்டுகள் பல உருண்டோடினும், நாங்கள் இளமை குன்றாது திறம்படச் செயல்படுவதற்கு இது ஓர் சீரிய எடுத்துக்காட்டாகும்

தேவைகளை சொந்தமாகப் பூர்த்தி செய்யும் துறையில் நாங்கள் வளருகிறோம்.

எஃகினை யொத்த உறுதியான குறிக்கோள்



டாடா ஸ்டீல்

TtL 8730

ஏற்று நடக்க எளிய கருத்துக்கள்

நான் வணங்கும் மனித தெய்வம்-7.

நாம் இருக்கப் போவதோ இவ்வுலகில் சில நாட்களே! இதற்குள் ஏன் சுக போகங்களை அனுபவியாதிருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் பலர். அந்த எண்ணம் ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளது தான். கையளவு உள்ளம் வைத்துக் கடலளவு ஆசை வைத்தது இறைவனின் திருவிளையாடல் அல்லவா ?

இதையெல்லாம் அறிந்துதான்—காலத்தை நிர்ணயிக்க முடியாத கருணை வள்ளலாய் — அறிவுச் சுடராய் — அருளின் ஒளியாய்— ஆன்மீகக் கலையரசாய் — கற்பக விளக்காய் — கலியுகத்தின் தெளி தேனாய் அவதரித்த தெய்வத்திரு மகான் ஞானானந்தகிரி சுவாமிகள் மனிதன் கலியுகத்திலும் கடவுளை உணர அவனது மனம் போன போக்கிலேயே செல்ல விட்டுத் திசை திருப்புகிறார்.

அந்தக் கருணை விளக்கின் — கலியுகத்தின் விடிவெள்ளியின் "அருள் மொழிகள்" துறவறத்தை ஏற்க வேண்டும் என்று சொல்லவில்லை — பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படியானால் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

பற்றற்றிரு ஆனால் காட்டுக்குப்போய்விடாதே
இல்லறத்தை நடத்து ஆனால் காமவெறியனாய்
விடாதே.
கொடையாளியாயிரு ஆனால் ஒட்டாண்டி
யாய் விடாதே.



இரக்கம் காட்டு ஆனால்
ஏமாந்துவிடாதே.
சுறுசுறுப்பாயிரு ஆனால் படபடப்பாயிராதே.
பொறுமையாயிரு ஆனால் சோம்பலாயிராதே.
அன்பாயிரு ஆனால் அடிமையாயிராதே.
நல்லோரை நாடு ஆனால் அல்லோரை
வெறுக்காதே.
வீரனாயிரு ஆனால் போக்கிரியாயிராதே.
சிக்கனமாயிரு ஆனால் கருமியாயிராதே.

இந்த எளிய மொழிகளை ஏற்று நடக்காத ஜீவன் இக்கலியுகத்திலே இருக்குமானால் அது சிவனை அடைய முடியாது. இக்காலத்திலே—

'கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள் முகங் காட்டி —

மால்காட்டும் மங்கையரை மறந்திருப்ப தெக்காலம்?' என்று உன்னை இல்லறத்தை நடத்தாமல் இருக்கச் சொல்லவில்லை, அந்த வழிகாட்டும் ஒளிவிளக்கு. இல்லறத்தை நீ நடத்து. ஆனால் காமவெறியனாய் விடாதே என்றுதான் கூறுகிறது.

'தந்தைதாய் மக்கள் சகோதரரும் பொய் யெனவே —

சிந்தையினிற் கண்டு இருக்கறுப்ப தெக் காலம்?' என்று உன்னைப் பந்தபாசத்தை ஒழித்துக் காட்டுக்குப் போகச் சொல்லவில்லை, அந்த அவதாரம். பொருள்களின்மீது பற்றற்றிரு என்றுதான் கூறுகிறது. அதே நேரத்தில் கொடுத்துக் கொடுத்து நீ ஒட்டாண்டியாய்விடாதே என்றுதான் சொல்கிறது.

ஞானானந்தகிரி சுவாமிகள் நமக்கு உணர்த்துகிறார் :

"நீ கடவுளை உணர வேண்டுமானால் அன்பாயிரு — உண்மையே பேசு — அறிவாளியாயிரு— ஆண்மையோடிரு" என்கிறார். அன்பாயிருந்தாலே கடவுளை உணர முடியும் என்று கூறுமிடத்து, "அன்பே சிவம்" என்ற கருத்தையே கூறுகிறார். இக்கருத்தையே "தமிழ் மந்திரத்தின்" தந்தை திருமூலர் "அன்பே சிவமாய் தாரும் அறிகிலார்" என்று கூறினார்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய திருமூலரின் கருத்தையே வலியுறுத்தும் ஞானானந்தகிரி சுவாமிகளை எண்ணும் போது அத்திருமூலரே இக்கலியுகத்தின் அதர்மத்தில் மக்கள் கடைத்தேறும்பொருட்டு மக்களுக்கு உபதேசிக்க மீண்டும் ஞானானந்தகிரி வடிவத்தில் அவதரித்தாரோ என்று யூகிக்க முடிகிறது.

அந்த ஞானானந்தகிரியின் தேனான அருள் மொழியில் மற்றொன்று : " உன் மனத்துக்கு நீ அடிமையானால் உலகத்துக்கு நீ அடிமையாவாய். உன் மனம் உனக்கு அடங்கினால் உலகம் உனக்கு அடங்கும். உன்னைப் பிறர் நேசிக்க வேண்டுமானால் நீ பிறரை நேசி. உன்னிடத்தில் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறாயோ அப்படியே நீ பிறரிடத்தில் நடந்து கொள்."

— சிவல்புரி சிங்காரம்

ஊழ்வினை நம்பிக்கை

நீண்ட நாட்களுக்குப் பிறகு கோவலன் வீடு திரும்புகிறான்.

வாயிற் கதவை மெதுவாகத் திறக்கிறாள்.

தாமரைபோல் சிவந்திருந்த கண்ணகியின் கண்கள், காலைச் சூரியன் போல் பிரகாசித்தன.

"கண்ணகி, நீ எவ்வளவு இளைத்துவிட்டாய்!"

"பிரபு, நீங்கள் ஏன் களை இழந்து போனீர்கள்? இடையிலே எப்போதாவது சொல்லி அனுப்பியிருந்தால், நானே மாதவியின் இல்லத்துக்கு வந்து உங்களைச் சந்தித்திருப்பேனே!...."

"அந்தத் துர்ப்பாக்கியம் உனக்கு நேரவில்லை என்பதுதான் என் ஒரே நிம்மதி. நான் நலமிழந்து உன்னை நாடி வந்திருக்கிறேன். கண்ணே! ஆறு வற்றிப் போகும்போது தானே மேகம் நினைவுக்கு வருகிறது!"

"பிரபு! எனது மேகத்தில் இன்னும் நீர்ப் பிடிப்பு இருக்கிறது. ஆற்றுக்குத் தேவையான நீர் அதிலே இல்லாவிட்டாலும், உங்கள் வாழ்வுக்குத் தேவையான வளம் இருக்கிறது. நீங்கள் அணிவித்த நகைகள் அப்படியே இருக்கின்றன. மங்கல அணியைத் தவிர மற்ற அனைத்தையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். புகார் நகரம், நாம் பொங்கி வாழ்ந்த நகரம். இங்கே அவற்றை விற்க வேண்டாம்; வேறு நகருக்குச் செல்லுவோம்."

— ஆம்; 'அத்தனை நகைகளையும் கொடுக்கிறேன்' என்று சொன்ன கண்ணகியிடம், காற்சிலம்பை மட்டும் பெற்றுக் கொண்டானே கோவலன், அது ஏன்?

சோழ நாட்டிலேயே உறையூர் இருக்க, மதுரைக்குச் சென்றானே அது ஏன்?

மதுரைக்குச் சென்ற கோவலன் எத்தனையோ கடைகள் இருக்க, குறிப்பிட்ட அந்தப் பொற்கொல்லனிடம் சென்றானே, அது ஏன்?

எத்தனையோ சிலம்புகளைப் பார்த்த பொற்கொல்லன், அதைத் 'திருட்டுச் சிலம்பு' என்று கொண்டு போய்ப் பாண்டியனிடம் காட்டினானே, அது ஏன்?

எத்தனையோ வழக்குகளைத் தீர விசாரித்த பாண்டியன், அந்த வழக்கில் மட்டும் 'கள்வனைக் கொண்டு வா' என்று சொல்ல வந்து, 'கொன்று வா' என்று நாத் தடுமாறினானே, அது ஏன்?

மறு பரிசீலனைக்கு நேரமே இல்லாமல், அவன் கட்டளை உடனே நிறைவேற்றப்பட்டதே, அது ஏன்?

அதுவரை வெளியேறிச் சேதி சொல்ல விரும்பாத குலமகள், மன்றேறி முழக்கமிட்டு, மதுரையையே நெருப்பிலிடும் மாகாளி சக்தியாக வடிவெடுத்தாளே, அது ஏன்?

'பார்ப்பார் பசுக்கள் பிணியோர் முதியோர் தம்மைவிட்டு, மற்றோரைத் தீண்டுக நெருப்பே!' என்று ஆணையிட்டாளே, அது ஏன்?

வஞ்சமிலார்கூட அந்த நெருப்பில் மாண்டு மறைந்தனரே, அது ஏன்?

இவை யாவுக்குமே ஒரே பதில், ஊழ்வினை.

ஊழ்வினை என்பது மதவாதிகள் சொல்வது மட்டுமன்று; வாழ்க்கை அநுபவமும் காட்டும் ஒன்று.

கடைசிப் பக்கம் கண்ணதாசன்

நாம் செய்யாத ஒன்றுக்காக நாம் தண்டிக்கப்படுவோமாயின், அதன் பெயரே ஊழ்வினை.

தசரதன் வரம் கொடுத்தது ஊழ்வினை.

காலம் அறிந்து கைகேயி அதனை நிறைவேற்றிக் கொண்டது, ஊழ்வினை.

அதன் மூலம் கணவனை இழந்தது ஊழ்வினை.

தந்தை வரம் கொடுக்க, தான் காட்டுக்குப் போனானே, ராமன், அதன் பெயர் ஊழ்வினை.

செய்வினை திருத்தப்படலாம்; ஊழ்வினையைத் திருத்த முடியாது!

'மூதாதையர் செய்த பாவத்துக்கு நாம் தண்டனை அநுபவிப்பதா?' என்று கேட்கிறீர்களா?

ஏன், மூதாதையர் சேர்த்த சொத்தை நீங்கள் அநுபவிக்கவில்லையா?

'அது புண்ணியமாயினும், பாவமாயினும் ஏழு தலைமுறைக்கு வரும்' என்கிறது, இந்து தர்மம். அதோடு, 'செய்தவனையும் ஏழு பிறவிக்குத் தொடரும்' என்கிறது.

ஊழ்வினையைச் சிலம்பு வலியுறுத்திய காலத்தில், இந்து மதத்தைவிட பௌத்தமும், சமணமுமே அதிகச் செல்வாக்குப் பெற்றிருந்தன. ஆகவே, இந்த ஊழ்வினை நம்பிக்கை அனைவருக்கும் பொதுவானது.

ஒன்றை நினை. நீ எப்போதாவது தவறிக் கீழே விழுந்தால், உன் பாட்டன் எவனையோ கீழே தள்ளியிருக்கிறான் என்று பொருள்.

இந்த நம்பிக்கை எதற்காக?

ஆற்ற முடியாத துன்பங்களுக்கு ஆறுதல் தருவதற்காக.

இந்த மூலிகையைக் கண்டுபிடித்தவனுக்குப் பெயரே, இந்து.




Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

ஒரு நாள்
கறந்த பால்
வராதபோது திருமதி பாலசந்திரன்
அமுல் மில்க் பவுடர் வாங்க நேர்ந்தது.



ஆனால்



இப்பொழுது அவர்
அமுல் மில்க்
பவுடரை
தவறாமல்
வாங்குகிறார்.

திருமதி பாலசந்திரன் கறந்த பால்தான் பால் பவுடரைவிட மிகவும் சிறந்தது என்று ஒரு காலத்தில் நினைத்திருந்தார். ஆனால் ஒரு நாள் கறந்த பால் கிடைக்கவில்லை. அன்று அமுல் மில்க் பவுடர் உபயோகித்தபோது வியப்புற்றார்! ஒரே ஒரு டின் அமுல் மில்க் பவுடர் அவரது கருத்தையே மாற்றி விட்டது. அது உங்கள் கருத்தையும் மாற்றி விடும்.

ஒரே ஒரு முறை அமுல் மில்க் பவுடர் உபயோகித்தாலே, இது எவ்வளவு சிறந்தது, சௌகரியமானது என்பது தெரிந்து விடும். இது தூய்மையாக, முழுமையாக, புதுமையாக பால் பவுடர் வடிவில் வருகிறது. இது நிமிடங்களில் கரைந்து தயாராகி விடுகிறது. இது மிகவும் வசதியானது. காப்பிக்கும் டீக்கும் அதிக இன்சுவை அளிக்கிறது. இதிலிருந்து சிறந்த கெட்டித் தயிரும், சுவை மிக்க தின்பண்டங்களும் தயாரியுங்கள். க்ரீமுக்குப் பதிலாகப் பயன்படுத்துங்கள். எல்லாமே இன்சுவை கொழிக்கும்.

திருமதி பாலசந்திரன் போன்ற நவீன இல்லத்தரசிகள் இன்று அமுல் மில்க் பவுடரை நம்பி இருப்பதற்குக் காரணங்கள் உண்டு. அமுல் மில்க் பவுடர்—இந்த ஒரே பால்தான் புத்தம் புதிதானது; தூய்மையானது; இன்சுவையுள்ளது; வசதியானது; எளிதில் கிடைப்பது!

அமுல்
மில்க் பவுடர்

வீட்டிலே
பால் பண்ணை
இருப்பதற்கு ஈடு!

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேட்டிவ் மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிமிடெட், ஆனந்த்.

ASP-AMP-77

REGISTERED No. M. 4392 இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
Registered as a Newspaper in Ceylon



அதிகபட்ச உணவு விளைச்சலுக்கு

உங்களுக்குத் தேவை எதையும் தாங்கும் நம்பகமான பாட்டரி




நாட்டிற்கு மேலும் உணவு வேண்டும். அதுதான் இன்றைய முக்கியத் தேவை. இதற்கு இந்தியா உங்களைத்தான் நம்பி இருக்கிறது.

கோதுமை விளைச்சலின்போது முடியாது உங்கள் டிராக்டர் ஒவ்வொரு நிமிடமும் செயல்பட்டாக வேண்டும்.

உங்கள் டிராக்டரில் ஆம்கோ பவர் பிளை பாட்டரி இருக்கின்றதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள். எந்தவித டிராக்டருக்கும் மிக நம்பகமான பாட்டரி அது. எனவேதான் இந்தியாவில் உள்ள பிரதான டிராக்டர் தயாரிப்பாளர்கள் அனைவரும் ஆம்கோவை ஒரிஜினல் பாட்டரியாக பொருத்துகின்றனர்.

ஆம்கோ டிராக்டர் பாட்டரிகள் மிகக் கடுமையான பரிசோதனைகளை—எப்போதும் தாங்கி நிற்கின்றன என்று நிபுணர்கள் நற்சான்று அளித்துள்ளனர்.





ஆம்கோ — அயராத பாட்டரி

ஆம்கோ பாட்டரீஸ்
பெங்களூர்